# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

"கொங்குமாமேதை" விருது பெற்றவர்
தெய்வத்திரு. அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம்
**(2006 ஆம் ஆண்டு)**

'கொங்கு மாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

2001 ஆம் ஆண்டு

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

2002 ஆம் ஆண்டு

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

2003 ஆம் ஆண்டு

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி திரு. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

2004 ஆம் ஆண்டு

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ்வாணவராயர்

2005 ஆம் ஆண்டு

12. NSIT. டாக்டர் எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

2006 ஆம் ஆண்டு

15. டாக்டர் நல்லா கோவிந்தசாமி
16. சக்தி மசாலா டாக்டர் பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

2007 ஆம் ஆண்டு

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

2008 ஆம் ஆண்டு

21. ஆடிட்டர் திரு. மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

2009 ஆம் ஆண்டு

24. பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

2011 ஆம் ஆண்டு

27. அட்லஸ் திரு. எம்.நாச்சிமுத்து
28. திரு. கே.ஏ.செங்கோட்டுவேல்

2012 ஆம் ஆண்டு

29. கலைமாமணி சிவகுமார்

2013 ஆம் ஆண்டு

30. டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி

2014 ஆம் ஆண்டு

31. இராசி சீட்ஸ் டாக்டர் எம். இராமசாமி

2015 ஆம் ஆண்டு

32. திரு. பி.காசியண்ண கவுண்டர்

2016 ஆம் ஆண்டு

33. திரு.வி.இரத்தினசபாபதி
34. டான் ஸ்ரீ எம்.கேவியஸ்
35. டாக்டர் வீரப்பன் சுப்பிரமணியன்

# கொங்கு மாமணி



## திரு. எஸ். அருணாச்சலம்

நாமக்கல் மாவட்டம் கோக்களை கிராமம், நெய்க்காரன்பாளையம் எனும் சிற்றூரில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் தெய்வத்திரு.செங்கோட கவுண்டர் – திருமதி சின்னம்மாள் தம்பதியருக்கு மகனாக 13.12.1935 அன்று பிறந்தவர், திரு. எஸ். அருணாச்சலம். இவர் உடன் பிறந்தோர் மூன்று மூத்த சகோதரர்கள்.

தனது ஆரம்பக் கல்வியை 5ஆம் வகுப்பு வரை 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள எளையாம்பாளையம் என்ற ஊரில் உள்ள அரசுப் பள்ளியிலும், 6–ஆம் மற்றும் 7–ஆம் வகுப்புப் படிப்பை 8 கி.மீட்டர் தூரத்தில் உள்ள பள்ளியிலும் நடந்தே சென்று படித்தார். திருச்செங்கோடு மகாதேவ வித்தியாலயத்தில் 8–ஆம் வகுப்பையும், மற்றும் 9, 10, 11 ஆம் வகுப்புகளைத் திருச்செங்கோடு அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும் படித்து 1955 ஆண்டுப் பள்ளிக் கல்வியை முடித்தார்.

பின்னர், கோவையில் உள்ள அரசு Polytechnic-இல் L.A.E. Licentiated Agri. Engg. என்ற 3 ஆண்டுப் படிப்பையும், பின் ஓர் ஆண்டு அதற்கான apprentice பயிற்சியை மத்திய பிரதேசத்தில் உள்ள Tractor Testing Centre-லும் நிறைவு செய்தார். அதன்பின், பாலக்கோடு அரசு உயர்நிலைப் பள்ளியில் 3 மாத காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தன் மாமன் மகள் முத்தம்மாளை 26.06.1961 அன்று வாழ்க்கைத் துணைவியாகக் கைப்பிடித்தார். அதே ஆண்டு Tamil Nadu Agricultural Engineering Department-இல் Junior Engineer பதவியில் வேலைக்குச் சேர்ந்து தொடர்ந்து 5 ஆண்டுகள் சென்னை, சேலம் மற்றும் வேலூர் ஆகிய ஊர்களில் சிறப்பாகவும், பலரும் பாராட்டும்படியும் பணிபுரிந்தார்.

கோவையில் படித்தபொழுது தொழில்துறையில் அதிக ஈடுபாடு இருந்ததினால் பல நூற்பு ஆலைகள் மற்றும் மோட்டார் பம்பு செட்டுத் தொழிற்சாலைகளைப் பார்த்து அதில்

மிக்க ஆர்வம் கொண்டார். அதன் காரணமாக, 1961–இல் பம்பு செட் விற்பனை முதல் வியாபாரத்தைத் திருச்செங்கோட்டில் தொடங்கினார்.

பிறகு, 1964–இல் சேலத்தில் வேலையில் இருந்து கொண்டே, செங்கோட கவுண்டர் & சன்ஸ் என்ற பெயரில் தொழிலை விரிவு செய்தார். கோவை TEXMO MOTOR விற்பனை வியாபாரத்தைத் தனது மைத்துனர் திரு. சுப்பிரமணி உதவியுடன் ஆரம்பித்தார். 1965ஆம் ஆண்டு அரசு வேலையை ராஜினாமா செய்தார். 1968–இல் தர்மபுரியில் ''கவுண்டர் கார்ப்பரேசன்'' என்ற பெயரில் அதே பம்பு செட் வியாபாரத்தை திரு.நடராஜன் என்ற உறவினர் உதவி கொண்டு ஆரம்பித்தார். தொடர்ந்து சேலத்தில் 1969 மற்றும் 1970–இல் வாகன உதிரி பாகங்கள் விற்பனை வியாபாரத்தை இவருடைய அண்ணார் மகன்கள் மற்றும் மருமகன்கள் சுய தொழில் செய்ய உதவியாகத் தானும் பங்குதாரராகச் சேர்ந்து ஆரம்பித்தார். வியாபாரம் நன்கு வளர்ச்சி அடைந்தபின், அவர்களுக்கே உரிமையாக்கி அவர்களின் உயர்வுக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

உற்பத்தித் துறையில் கொண்ட வேட்கையால், சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 1971–இல் இவர் தனது முதல் தொழிற்சாலையை ''செங்கோட கவுண்டர் & சன்ஸ்'' எனும் பெயரில் நிறுவினார். முதல் 5 ஆண்டுகள் மிகக் கடுமையாக உழைத்தும் முன்னேற்றம் இல்லை என்றாலும், தொடர்ந்து பல சவால்களுக்கு இடையே படிப்படியாக முன்னேற்றத்தை அடைந்தார்.

தனது முதல் நிறுவனத்தைத் தொடர்ந்து இவர் "Auto wing Industries, Aruna Pumps (P) Ltd., Heat Tech Industries and NU-Tech Components ஆகிய தொழில்கூடங்களையும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவினார். சென்னையில் உள்ள பெரிய வாகன உற்பத்தி (Automobile Industries) தொழிற்சாலைகளான அசோக் லேலண்ட், TVS Group மற்றும் Simpson Group ஆகியவற்றிற்கு உதிரி பாகங்கள் தயாரித்து விற்பனை செய்வதில் சிறந்து விளங்குகின்றார்.

திரு. எஸ்.அருணாச்சலம் – திருமதி முத்தம்மாள் தம்பதியருக்கு காந்திமதி எனும் மகளும், நடராஜன் எனும் மகனும் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. திரு. நடராஜன் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சிறந்த முறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தொழிற்சாலை நடத்தி வருகின்றார். மாப்பிள்ளை திரு. K.K.ரமேஷ் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தற்போதைய துணைத்தலைவராவார்.

திரு. எஸ்.அருணாச்சலம் அவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக 1993–94 ஆம் ஆண்டு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைமையில் கொங்கு நாடு இல்லம் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது. இந்தக் கட்டடத்திற்குப் பொருள் உதவி செய்த அனைவரையும் மற்றும் உறுதுணையாகச்

செயல்பட்ட செயலர் திரு.K.பாலசுப்ரமணியம், பொருளாளர் திரு.K.R. அப்பாவு, துணைத் தலைவர்கள் திரு.பி.தேவராஜன் மற்றும் திரு.T.K.சுப்பிரமணியன் ஆகியோரையும் மனதார நன்றி உணர்வுடன் நினைத்துப் பார்க்கிறார். இதுவே இச்சங்கத்திற்கு முதல் கட்டடம். 6 ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராகவும், 2 ஆண்டுகள் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளார். சங்கத் தேர்தல் குழுவின் உறுப்பினராக நான்கு முறை தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக 10 ஆண்டுகளும், நிர்வாகக் குழு உறுப்பினராக இரண்டு ஆண்டுகளும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு சிறுதொழில் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் 2 ஆண்டுகள் பொறுப்பு வகித்தார்.

சென்னை கொங்கு நாடு அறக்கட்டளையின் பொருளாளராக 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து பொறுப்பு வகிக்கின்றார்.

1997 ஆம் ஆண்டு சென்னை, கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிக் கௌரவித்தது.

தெய்வ நம்பிக்கை, பிறருக்கு உதவும் பண்பு கொண்டுள்ளவர். தொண்டு நிறுவனங்கள், சிவானந்த ஆசிரமம் போன்றவற்றிற்கும், கோயில் திருப்பணிகளுக்கும் தொடர்ந்து நன்கொடை அளித்து வருகிறார்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், அப்பா, அம்மா, சகோதரர்கள், டெக்ஸ்மோ மேலாளர் திரு.பண்டரிநாதன், உரிமையாளர் திரு.ராமசாமி ஆகியோரை நன்றி உணர்வுடன் நாள்தோறும் நினைவு கூர்கிறார்.

கல்லூரியில் படித்தபொழுது இந்தியாவின் வடமாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்துள்ளார். வியாபாரம் நிமித்தமாக ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

எளிமை, மனிதநேயம், சமுதாயப் பற்று, இன்சொல், ஈகை போன்ற அரும் பண்புகள் கொண்டு தொழில் துறையில் சாதனை படைத்ததோடு, சமுதாய முன்னேற்றத்திற்கு உன்னதமாய்ப் பணியாற்றியமைக்காக சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. எஸ். அருணாச்சலம் அவர்களுக்கு, 'கொங்கு மாமணி' விருது வழங்கிப் பெருமை கொள்கின்றது.

# கொங்கு மாமணி



## திரு. பி. தேவராஜன்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கோலாரம் – தாளக்கரையைச் சேர்ந்த வெண்டுவன் குலம் திரு. பெரியண்ண கவுண்டர் – திருமதி இராஜம்மாள் தம்பதியரின் ஒரே மகனாக 1946–ஆம் ஆண்டு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், திரு. P. தேவராஜன்.

ஆரம்பக் கல்வியைக் கோலாரம்–தாளக்கரை தொடக்கப் பள்ளியிலும், உயர்நிலைக் கல்வியைக் கரிச்சிபாளையம் உயர்நிலைப் பள்ளியிலும் கற்ற இவர், பள்ளியில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றார். அப்போது பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த திரு.சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் சீரிய வழி காட்டுதலில் திருச்சி நேஷனல் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை பட்டப்படிப்பை வேதியியல் துறையில் படித்து முடித்தார்.

1969–இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் லேப் அஸிஸ்டண்ட் ஆகப் பணியில் சேர்ந்து, பிறகு பதவி உயர்வு பெற்று 1972–இல் 'ரிசர்ச் அசோசியேட்' ஆக, 'சென்ட்ரல் ரிசர்ச் யூனிட்' துறையில் பணிபுரிந்தார். ஒருபுறம் அரசுப் பணியில் இருந்தாலும், மறுபுறம் தொழில் முனைய வேண்டும் என்ற தீவிர வேட்கை மனத்தில் இருந்த காரணத்தினால், முதலில் 'ஆழ்கடல் மீன் பிடிக்கும் விசைப்படகுகள்' 2 வாங்கித் தொழில் செய்தார். அதற்குப் பின் 1978–லிருந்து போர்வெல் தொழிலும் செய்து வந்தார்.

1983–இல் 'ராஜ்பில்டர்ஸ்' என்ற பெயரில் கட்டுமானத் தொழிலுக்கு மாறினார். சென்னையில் விளம்பரம் அதிகம் இல்லாமல் நற்பெயருடனும், நுகர்வோர் நம்பிக்கையுடனும் பிரபலமான சாலைகளில் மிகவும் தரமுள்ளதாக வணிகம் மற்றும் அடுக்கு மாடி கட்டடங்கள் கட்டும் பணியைச் செய்து வந்தார்.

2001–இல் 'ராஜ்பார்க்' – சென்னை என்ற 4 நட்சத்திர வசதிகள் கொண்ட ஹோட்டலை 'ரமடா இன்டர்நேஷனல் செயின்' துணையுடன் ஆரம்பித்தார். இப்போது அதன் கிளை திருப்பதியிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

சென்னை வந்தபிறகு, கொங்குச் சமுதாயப் பணியில் நாட்டம் கொண்டு 1972–இல் உறுப்பினர் ஆனார். இவரது உறுப்பினர் எண் 45 ஆகும். சங்கத்தின் வளர்ச்சியிலும் செயல்பாடுகளிலும் தீவிரப் பங்கேற்றுச் செயற்குழு உறுப்பினராகவும், 1993, 94 ஆம் ஆண்டுகளில் துணைத்தலைவராகவும் பதவி வகித்தார். இந்தக் காலகட்டத்தில்தான் கொங்குநாடு இல்லம் கட்டும் பணி தொடங்கப்பட்டு, இவரது மேற்பார்வையில் விரைவாகவும், சிறப்புடனும், சிக்கனத்துடனும் கட்டி முடிக்கப்பட்டது. 1995, 1996 ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்து, மிகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

'தீரன் சின்னமலை' சிலை சென்னையில் அமைவதற்கும், அமைப்பதற்கும் அரும்பாடு பட்டவர்களில் இவரும் ஒருவர் என்பதை மறுக்க முடியாது. கொங்குநாடு அறக்கட்டளையின் செயற்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

மேலும் 1983 முதல் 1996 வரை ஆழ்வார்பேட்டை 'லயன்ஸ் கிளப்'– இன் தலைவர் மற்றும் சென்னை மண்டலத்தில் 'ஜோன் சேர்மன்' ஆகப் பொறுப்பேற்றுப் பல நலத் திட்டங்களுக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

சென்னையில் மட்டுமல்லாமல் தனது சொந்த ஊரான கோலாரம் – தாளக்கரை குல தெய்வக் கோவிலுக்குத் தனி ஆளாக நின்று, இரண்டுமுறை குடமுழுக்குச் செய்து கிராமத்தாரின் நன்மதிப்பைப் பெற்றவர். ஜாதி, மதம் பார்க்காமல் பல கோவில் பணிகளுக்குப் பொருளுதவியும் செய்து வருகிறார். தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதியும், நல்ல மதிப்பெண் பெற்றுத் தன்னைத் தேடி வரும் ஏழை, எளிய மாணவர்களுக்குப் படிக்க உதவியும், வயதானவர்களுக்குத் தேவையான உதவியையும் மனமுவந்து செய்து வருகிறார். விளம்பரம் விரும்பாத, செயலாற்றல் கொண்ட, எளிய மனிதர் இவர்.

இவருக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். இவரது சாதனைகளுக்குப் பெரிதும் உறுதுணையாக உள்ள இவரது மனைவி இராஜம்மாள், M.Sc., பட்டதாரியாவார். மூத்த மகன் திரு ராஜேஸ் தேவராஜன் B.E.,M.S., படித்துவிட்டு 'HABLIS' என்ற பெயரில் 5 நட்சத்திர ஹோட்டலை நிறுவி, திறமையுடனும் சிறப்புடனும் நிர்வகித்து வருகிறார். அவரது மனைவி டாக்டர் சண்முக பிரியா, கரூர் 'நிர்மலா நர்ஸிங் ஹோம்' டாக்டர் ஜெயபாலன் – டாக்டர் நிர்மலா தம்பதியரின் மகளாவார். M.D.Radiology படித்துள்ள இவர், 'ATHENA' என்ற ஸ்கேன் சென்ட்டரை நடத்தி வருகிறார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

அடுத்து மகள் நித்யா B.Arch. படித்தவர். ஈரோடு 'ஸ்வஸ்திக் கார்ப்பரேசன் திரு.லிங்கமூர்த்தி – திருமதி பரமேஸ்வரி தம்பதியரின் மகன் திரு. ட. சரவணனுக்கு மணம்

முடிக்கப்பட்டு இப்போது கோவையில் வசித்து வருகிறார். மருமகன் திரு.ட. சரவணன், 'யுனைட்டடு பிளீச்சர்ஸ் லிமிடெட்' மற்றும் 'ஸ்வஸ்திக் கார்ப்பரேசன் கம்பெனி' ஆகிய நிறுவனங்களை நிர்வகித்து வருகிறார். இவர்களுக்கு ஒரு பெண் மற்றும் ஓர் ஆண் குழந்தை உள்ளனர்.


இளைய மகன் திரு.சந்தீப் தேவராஜன் B.E., M.S., படித்து விட்டுத் தந்தையுடன் சென்னை மற்றும் திருப்பதி ஹோட்டல்களை நிர்வகித்து வருகிறார். இவரது மனைவி பெயர் திவ்யா, M.BA., பட்டதாரி ஆவார். சேலம் 'ஸ்ரீ வரலட்சுமி குரூப் கம்பெனி' திரு.V. சுந்தரேசன் – திருமதி தமிழரசி தம்பதியரின் மகளாவார்.

ஒரு சிறிய கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கடின உழைப்பாலும், இடைவிடா முயற்சியாலும், நேர்த்தியான நிர்வாகத் திறமையாலும், காலத்திற்கேற்பப் புதிய தொழில்களுக்கு மாறி அவற்றில் வெற்றி கண்டு முன்னேற்றமடைந்த இவரது சாதனைகள் இளைஞர்களுக்கு ஓர் உந்துதலாக அமையும்.

''வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு''

என்றார் வான்புகழ் வள்ளுவர். தொழில் தொடங்கி வெற்றி பெற வேண்டும் எனும் இலட்சியம் கொண்டு, ஊக்கமுடன் அயராது உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் நம் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தொழிலில் சாதனைகள் பல புரிந்து, கொங்குச் சமுதாய மேம்பாட்டிற்கு நாளும் பாடுபட்டு வருவதோடு, சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்து வருபவருமான திரு. பி. தேவராஜன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' விருது வழங்கிப் பெருமை கொள்கிறது.

# கொங்கு மாமணி



## திரு. கே.ஆர். அப்பாவு

1945–ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் நாள், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கரிச்சிபாளையம் கிராமத்தில் திரு. K.R. ராமசாமிக் கவுண்டர் – திருமதி செல்லம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார், திரு. கே.ஆர். அப்பாவு. அவருடைய 5–ஆம் வயதில் குடும்பம் மலேசியாவிற்குக் குடிபெயர்ந்தது. ஆரம்பக் கல்வியை அங்குள்ள தமிழ்ப் பள்ளியில் படித்தார். பின் தனது 10 ஆவது வயதில், அதாவது 1955 ஆம் ஆண்டு தமிழகம் திரும்பி வந்து கரிச்சிபாளையம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளியில் 6–ஆம் வகுப்பில் சேர்ந்தார். 9–ம் வகுப்புவரை தனது பாட்டி வீட்டில் தங்கிப் படித்து வந்தார். பிறகு 1960ஆம் ஆண்டு திருசெங்கோடு உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்த மாணவர் விடுதியில் தங்கி 11–ஆம் வகுப்பு முடித்தார். விளையாட்டில் மிகவும் ஆர்வமுள்ளவர். கால்பந்து, ஹாக்கி முதலியவற்றில் பங்கு கொண்டு பள்ளிக்காக விளையாடினார். போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பலவும் பெற்றார்.

12–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றபின், திருச்சி ஜமால் மொகமது கல்லூரியில் சேர்ந்தார். இது சமயம் இவரது பெற்றோர் குடும்பத்துடன் மலேசியாவிலிருந்து தாயகம் திரும்பினர். குடும்பச் சூழ்நிலையின் காரணமாகத் தனது கல்வியைத் தொடரமுடியாமல், தொழில் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. குடும்பத்தின் மூத்த மகனானதால் தன் பொறுப்பினை உணர்ந்து, தன் தாயார் கொடுத்த சேமிப்பை வைத்து ஒரு லாரி வாங்கினார். Omega Road Transports என்ற பெயரில் ஆரம்பித்த அந்த லாரி நிறுவனத்தில், தானே உதவியாளர், ஓட்டுனராக இருந்து கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினார். 7

ஆண்டுகள் ஓட்டுனராக இருந்து கொண்டு 3 லாரிகள் வாங்கினார். இவரது சகோதரர்கள் கூட்டு முயற்சியால் கிணறு தோண்ட, பாறைகளைத் துளையிட்டு வெடிக்கும் இயந்திரங்கள் மற்றும் வெடித்த பாறைகளைக் கிணற்றிலிருந்து மேலே கொண்டுவரப் பாறைத் தூக்கிகளையும் அறிமுகம் செய்து குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்தினார்.

தனது 28 ஆம் வயதில் 1974–ஆம் ஆண்டு திருச்செங்கோடு, உஞ்சனை திரு.ராமசாமி கவுண்டர் – திருமதி பாவாயி தம்பதியரின் மூத்த மகள் பார்வதியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஆண்டு இவருக்கு மஞ்சரி என்ற பெண் பிறந்தாள். அதன் பிறகு லாரித் தொழிலில் ஏற்பட்ட இழப்பினால், பெரும் பொருள் நஷ்டம் ஏற்பட்டது. லாரிகளில் ஏற்பட்ட விபத்தினால் தொழிலில் பின்னைடவு ஏற்பட்டதால், பிழைப்புத் தேடி, 1977 ஆம் ஆண்டு, குடும்பத்துடன் சென்னை குடி பெயர்ந்தார். இங்கு மீன் பிடி தொழிலில் ஈடுபட்டார். மீனவர்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பால் இவரது படகைத் தீயிட்டனர். படகை இழந்தபின், மறுபடியும் தனக்குத் தெரிந்த லாரித் தொழிலைச் சென்னையில் ஆரம்பித்தார். அது சமயம், குகன் என்ற ஆண் குழந்தை பிறந்தது.

தனது ஓட்டுனர் அனுபவத்தால் இந்தியா முழுவதும் சுற்றி வந்தது அவருக்குப் பெரிதும் உதவியது. இவரது கொள்கைபடி, வங்கியிலோ, தனியாரிடமோ வாங்கும் கடனைக் காலம் தவறாமல் திருப்பிச் செலுத்தி ஒரு நிலையான நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டார்.

1979–ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் (எண் 70) உறுப்பினரானார். சங்கத்திற்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வந்தார். சங்கத்தின் பெயரில் அம்மையப்பன் தெருவில் உள்ள பெண்கள் விடுதி கட்டுமானத்தின் போது ஒரு மேற்பார்வையாளராகவும், கட்டிய பின் 3 ஆண்டுகள் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். இவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர், பொருளாளர், துணைத் தலைவர், தலைவர் எனப் பொறுப்புகளில் இருந்து சிறப்புடன் செயல்பட்டார். இரு முறை தலைவராக இருந்த இவர் காலத்தில்தான் வெள்ளி விழா கட்டடத்திற்கு நிலம் வாங்கி, பதிவு செய்யப்பட்டது.

இவருடைய மகன் திரு. அ.குகன் MBA முடித்துவிட்டு ‘ஒமேகா வேர் ஹவுசிங்’ என்ற நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார். இவருடைய மனைவி டாக்டர் சண்முகப்பிரியா, MBBS., பட்டம் பெற்றவர்.

திரு. அப்பாவு அவர்களின் மகள் திருமதி மஞ்சரி கபாலீஸ்வரன் M.A., பட்டம் பெற்றவர். கணவர் திரு. கபாலீஸ்வரன் சென்னையில் லாரித் தொழில், ரிக், போர்வேல் முதலான தொழில்களைத் திறம்படச் செய்துவருகிறார்.

தனது தொழிலில் பிறகு Omega Piling Rigs என்ற நிறுவனத்தைத் தனது மகனுடன் சேர்ந்து நடத்திவருகிறார். இராயப்பேட்டை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் விருந்தினர் இல்லங்களை நடத்தி வருகிறார். கொங்குச் சங்கத்திற்குத் தனது தொழில் அனுபவங்களையும், ஆலோசனைகளையும் கூறி வருகிறார்.

இவர் 2002–ஆம் ஆண்டு, ‘லாரித் தொழில் செய்வது எப்படி’ எனத் தனது தொழில் அனுபவங்களை எழுதிப் புத்தகமாக வெளியிட்டார். தமிழகத்தில் உள்ள எல்லா நூல் நிலையங்களுக்கும் தொழில் சார்ந்த இந்நூலை இலவசமாக வழங்கினார்.

லாரி உரிமையாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர், செயலாளர், துணைத்தலைவர், தலைவர் எனப் பல பொறுப்புகளை மிகவும் சிறப்புடன் வகித்த பெருமைக்குரியவர் இவர்.

கொங்குச் சமுதாயப் பற்று மிக்கவர். சமுதாய முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு வரும் இவர், நமது சங்கத்தின் தூண்களில் ஒருவராய் விளங்குகிறார் என்றால், அது மிகையன்று. எளிமை, கடின உழைப்பு, சோதனைகளைத் கண்டு துவண்டு போகாமல், அவற்றைச் சாதனைகளுக்குப் படிக்கட்டுகளாக்கும் மன உறுதி, ஆழ்ந்த அனுபவம் போன்ற அருங்குணங்களை ஒருங்கே பெற்றுச் சாதனைகள் புரிந்துள்ள நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், ‘முயற்சி திருவினையாக்கும்’ என்னும் குறள் மொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவருமான திரு. கே.ஆர். அப்பாவு அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், ‘கொங்கு மாமணி’ விருது வழங்கிப் பெருமை கொள்கிறது.

# கொங்கு சாதனையாளர்



# டாக்டர் ரவி இராமலிங்கம்

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கோம்புபாளையத்தில் பிறந்த பிரபல காது மூக்கு தொண்டை அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.கே. ராமலிங்கம்–டாக்டர் விமலா ராமலிங்கம் தம்பதியரின் மகனாக 1969 ஆம் ஆண்டுப் பிறந்தவர், டாக்டர் ரவி இராமலிங்கம்.

கடந்த 50 ஆண்டுகளாக ஈ.என்.டி. மருத்துவத்திலே முன்னோடியாக விளங்குபவர், டாக்டர் இராமலிங்கம். தன்னுடைய ஒப்பற்ற மருத்துவச் சேவைக்காக எண்ணற்ற உயரிய விருதுகளைப் பெற்றுள்ள சிறப்புக்குரியவர்.

5800 ENT மருத்துவர்கள் உறுப்பினர்களாக உள்ள A01 (Association of Otolaryn Gotosists of India) என்ற உயரிய அமைப்பின் தலைவராகவும் 1988 ஆம் ஆண்டுப் பணியாற்றியவர்.

இவரது மகன் டாக்டர் ரவி இராமலிங்கமும் ஒரு சிறந்த ஈ.என்.டி மருத்துவர். பிறவியிலேயே காது கேட்காமல் பிறக்கும் குழந்தைகளுக்குச் செய்யப்படும் காக்ளியர் இம்பலாட் என்கிற நுண் அறுவைச் சிகிச்சை முறையைக் கையாண்டு ஆயிரத்திற்கும் மேலான குழந்தைகளைப் பேச வைத்துச் சாதனை படைத்துள்ளார்.

இந்தத் சிகிச்சையைச் செய்யச் சொல்லிக் கொடுக்க மற்ற இந்திய மாநிலங்கள், துபாய், பங்களா தேஷ், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, ஈஜிப்ட், பாலி, வியட்னாம் போன்ற நாடுகளுக்கு அடிக்கடி செல்கிறார்.

KKR ENT மருத்துவமனை 1973 ஆம் ஆண்டு டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டது. இது நாட்டிலேயே பெரிய தனியார் ENT மருத்துவமனையாகும், தற்போது 120க்கும் மேற்பட்ட ENT சிறப்பு மருத்துவர்கள் பணியாற்றி வருகின்ற இம்மருத்துவமனையின் நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்று,

சிறந்த முறையில் மருத்துவப் பணியாற்றி வருகிறார், டாக்டர் ரவி இராமலிங்கம். 'இந்த மகனைப் பெற இவர் தந்தை என்ன தவம் செய்தாரோ' என்று ஊரும் உலகமும் மெச்சும்படி ஈ.என்.டி உலகில் கோலோச்சி வருகிறார் டாக்டர் ரவி.

மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் MBBS., பட்டம், மணிப்பால் கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரியில் முதுநிலைப் பட்டம், மும்பையில் மேற்படிப்பு, FRCS பட்டம் ஆகிய பட்டங்களைப் பெற்று, தன்னுடைய மருத்துவ நிபுணத்துவத்தையும், அனுபவ அறிவையும், நவீன உத்திகள் மூலம் பெற்ற சிறந்த பயிற்சியையும் ஒருங்கே பெற்றுள்ள இவர், மருத்துவச் சேவையை உன்னதமாய்க் கருதுவதோடு ஓய்வு ஒழிச்சலின்றிப் பணியாற்றி வருகிறார்.

இவருடைய சிகிச்சையால் பலன் பெற்றவர்கள் கொள்ளும் மகிழ்ச்சியும், காட்டுகின்ற நன்றிகளும் இவருக்கு ஊக்கமும், மன நிறைவும் அளிக்கின்றன எனலாம். இவரின் மருத்துவச் சேவை வியக்கத்தக்கதாய் உள்ளது.

டாக்டர் ரவி இராமலிங்கத்தின் மனைவி பெயர் திருமதி சானோ ரவி. இத்தம்பதியருக்கு வருன் ரவி எனும் மகன் உள்ளார்.

''தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்''

என்ற திருக்குறளுக்கு ஏற்ப, டாக்டர் இராமலிங்கம் தன்னுடைய மகன் ரவியை இந்திய நாட்டின் – உலகின் ஒரு சிறந்த ENT' டாக்டராக உருவாக்கி உள்ளார்.

30 ஆண்டுகளுக்குப் பிறகு தந்தை வகித்த அதே தலைவர் பொறுப்பிற்கு டாக்டர். ரவி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தந்தைக்குப் பின் தமிழ் நாட்டிலிருந்து தலைவராகும் முதல் தமிழர் இவர்தான். மிக இளம் வயதிலே இந்தப் பதவிக்கு வந்தவர் என்கின்ற பெருமையும் இவருக்குத்தான்.

Association of Otolaryn Gotosists of India அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்று, தமிழகத்திற்கும், குறிப்பாக, கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளவரும், ENT மருத்துவத்தில் சாதனைகள் பல புரிந்துள்ளவருமான டாக்டர் ரவி இராமலிங்கம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## முனைவர் பெரு.மதியழகன்

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மெனசி கிராமத்தைச் சேர்ந்த திரு.பெருமாள் கவுண்டர் – திருமதி ரத்தினம் தம்பதியரின் மகனாக 1959 ஆம் ஆண்டுப் பிறந்தவர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு.மதியழகன்.

இவர் மெனசி அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்துப் பின்னர் B.V.Sc., M.V.Sc., M.A., Ph.D., Dip. Journalism, PGDET ஆகிய பட்டங்களைப் பெற்றவர். UN (FAO) பெல்லோசிப் பெற்று ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் தகவல் பரவியல் பயின்றார். இவர், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி என 33 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்.

பாட நூல்கள், அகராதிகள், தமிழில் அறிவியல் நூல்கள், சுய முன்னேற்ற நூல்கள், கவிதை இலக்கியங்கள், பயண இலக்கியங்கள், கதைகள் என 100–க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளைப் பத்திரிகைகள் மற்றும் இதழ்களுக்கு எழுதியுள்ளார். 17 குறும்படங்கள் தயாரித்துள்ளார்.

மேலும், தானுவாஸ் எய்ம் பிளாக். மாட்டுப் பண்ணையாளர் தொழில் நுட்பப் பரவல் பேழை, குறைந்த செலவில் தீவன உருவாக்கத்திற்கான மென்பொருள், குறைந்த செலவிலான கோழிக்குஞ்சுப் பொரிப்பான், ஆடு வளர்ப்போர்க்கு வழிகாட்டும் வல்லுநர் கருவி, ஆராய்ச்சிப் பிரச்சனைகளை இனங்காணும் முறையியல், கறவை மாடு வளர்ப்போர்க்கு ஆற்றலூட்டும் பங்கேற்பு மாதிரி, மூன்று கால்நடைப் பேரிடர் மேலாண்மை மாதிரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊரக மகளிர் மேம்பாட்டுத் திறன்களை அளந்தறிவதற்கான இரு உளவியல் கருவிகள் ஆகியவற்றை உருவாக்கிய அறிவியல் அறிஞர். கால்நடைகள் குறித்த தொழில் நுட்பக் கருத்துகள் அடங்கிய 4 இசை ஆல்பங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

தேசிய மற்றும் பன்னாட்டு நிதியத்தில் 17–க்கும் மேற்பட்ட ஆய்வுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். 150–க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றில் 300–க்கும் மேற்பட்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். கால்நடை கதிர் மற்றும் இளந்தென்றல் ஆகிய பத்திரிகைகளை நிறுவிடக் காரணமானவர்.

மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா, தென் ஆப்பிரிக்கா, துபாய் போன்ற பல்வேறு உலக நாடுகளுக்குக் கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பாகப் பயணம் மேற்கொண்டவர் இவர்.

தமிழக அரசின் கலைமாமணி விருது. சிறந்த நூலாசிரியர் விருது. பாவேந்தர் புகழ்பரப்பினர் விருது, சிறந்த பேச்சாளர் விருது, சிறந்த கவிஞர் விருது முதலான விருதுகளைப் பெற்றுள்ளார். பல்கலைக்கழகத்தின் சிறந்த பேராசிரியருக்கான விருதையும், மேலும் பன்னாட்டு, தேசிய மற்றும் மாநில அளவிலான 25–க்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவருடைய மனைவி பெயர் மாலதி. M.A., M.Phil., பட்டங்கள் பெற்றுள்ளவர். சென்னையில் அரசு மேல்நிலைப் பள்ளியில் முதுநிலைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றி வருகிறார். இத்தம்பதியினரின் மகன் ம.அதியமான் திறமை மிகுந்த பொறியாளர்.

பேராசிரியர், அறிவியல் அறிஞர், தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகப் பதிவாளர், கவிஞர், எழுத்தாளர், சொற்பொழிவாளர் எனப் பன்முகப் புலமை பெற்று, நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுச் சாதனை படைத்துள்ள முனைவர் பெரு. மதியழகன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் Dr. L.S. ஜெயகோபால்

பேராசிரியர் டாக்டர் எல்.எஸ்.ஜெயகோபால் ஈரோட்டை அடுத்த லக்காபுரம் கிராமத்தில் திரு.சுப்பைய கவுண்டர் – திருமதி வள்ளியம்மாள் அவர்களின் மகனாய் 1942 ஆம் ஆண்டுப் பிறந்தவர். ஆவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

கோயமுத்தூர் பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டிடப் பொறியியல் பட்டம் 1965 ஆம் ஆண்டுப் பெற்றார். பின்னர், சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தில் MTech பட்டம் பெற்றார். அவருக்குத் தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டியது ஐஐடி. 1978 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். கல்லூரிகளில் படிக்கும்போது மிகச் சிறந்த மாணவராய்த் திகழ்ந்தார்.

1967 முதல் PSG தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியைத் துவங்கினார். கட்டிடத் துறைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்று, பின்னர்த் துறை டீன் பதவியையும் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். 33 ஆண்டுகள் கல்விப் பணி செய்து 2001 இல் ஓய்வு பெற்றார். இவர் மூன்று புத்தகங்கள் எழுதி உள்ளார். 'Design of Steel Structures', 'Elements of Civil & Mechanical Engineering' என்ற புத்தகங்கள் சிறப்பாக விளங்கி மாணவர்களுக்கு மிகவும் பயன் அளிக்கின்றன.

ஆராய்ச்சியாளராகவும் ஆலோசகராகவும் விளங்கும் இவர், பல தொழில் நுட்பச் சாதனைகள் புரிந்துள்ளார். நாட்டின் பல இடங்களில் புதிய நுட்பங்களைக் கொண்டு செங்கல், கான்க்ரீட் மற்றும் இரும்புக் கட்டிடங்களை வடிவமைத்துள்ளார். இவற்றில் தலையானவை கோவை கொடிசியா வளாகத்திலுள்ள கட்டிடங்கள் ஆகும். இவர் வடிவமைத்த உலகிலேயே மிகப் பெரிய 10000 சதுர மீட்டர் பரப்பிலான தூண்கள் அற்ற கண்காட்சிக் கூடம், லிம்கா உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. பீளமேடு அவிநாசி சாலையில் PSG தொழில் நுட்பக் கல்லூரியின் இரு பகுதிகளையும் இணைக்கும் தூண்கள் இல்லாமல் உருவாக்கப்பட்ட பாலம் இவர் வடிவமைத்தது.

கோவை தொடர் குண்டு வெடிப்பில் சேதமடைந்த கட்டிடங்களை மீண்டும் பயன்படுத்த முக்கிய ஆலோசனைகள் வழங்கினார்.

தமிழக அரசு அமைத்துள்ள பல தொழில் நுட்பக் குழுக்களில் அங்கம் வகித்து வருகிறார். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், வீட்டு வசதி வாரியம் மற்றும் பொதுப்பணித் துறை கால்வாய்கள் பராமரிப்புப் போன்றவற்றின் தொழில் நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிடத் தகுந்த ஆலோசனைகள் வழங்கி வருகிறார்.


கொடிசியா கண்காட்சி அரங்கங்கள், கோயமுத்தூர்; கூம்பு வடிவக் கூரை, நெய்வேலி; சென்னையில் 12 இலட்சம் சதுர அடி கொண்ட டேம்ளர் இந்தியா கட்டடங்கள்; GRD நூலகம், கோவை; அழகப்பா பல்கலைக்கழகத் தொழில்நுட்பக் கூடம், காரைக்குடி; ராமகிருஷ்ணா விளையாட்டு உள் அரங்கம், கோவை; மாணவர் சங்கக் கூடம், மணிப்பால் முதலானவை இவர் வடிவமைத்த கட்டிடங்களுள் குறிப்பிடத்தக்கன.

இவருடைய மிகச்சிறந்த பணிகளையும், புரிந்துள்ள சாதனைகளையும் பாராட்டி, பல அமைப்புகள் வழங்கிய உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் ‘தலை சிறந்த பொறியாளர்’ விருது, இரண்டு முறை (கோவை பொறியாளர் சங்கம்), பாரத் ரத்னா சர். M. விஸ்வேஸ்வரைய்யா விருது (IRICO குழுமம்), இந்திய தொழில் கல்வி அமைப்பு வாழ்நாள் சாதனையாளர் விருது, புதுமை சிவில் பொறியாளர் விருது (கோவை சிவில் பொறியாளர்கள் சங்கம்) ஆகியன முக்கியமானவையாகும்.

இவருடைய சாதனைகளுக்குத் துணை நிற்கும் மனைவி பெயர் மனோன்மணி ஜெயகோபால். இத்தம்பதியருக்கு அரவிந்த குமரன், குகன் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் பொறியாளர்கள். திரு. அரவிந்த குமரன், மித்ரன் ஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்தில் பணி புரிகின்றார். திரு. குகன் அமெரிக்கா, டெட்ராய்ட் நகரில் உள்ள ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றார்.

பேராசிரியர், துறைத் தலைவர், கட்டிட வடிவமைப்பாளர், நிர்வாக இயக்குநர் எனப் பன்முகத் தன்மை கொண்டு நாட்டின் மிகச் சிறந்த கட்டிட வடிவமைப்புப் பொறியாளர்களுள் ஒருவராய் விளங்கிப் பல சாதனைகள் புரிந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள பேராசிரியர் டாக்டர் எல்.எஸ்.ஜெயகோபால் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் என்.வேலுசாமி

டாக்டர் N. வேலுசாமி, 1943 ஆம் ஆண்டு, கரூர் மாவட்டம், மடைக்காட்டுப் புதூர் தென்னிலை கிராமத்தைச் சார்ந்த திரு. S. நல்லசாமி – திருமதி பாப்பாயி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்.

பள்ளிப் படிப்பைத் தென்னிலை அரசு ஆரம்பப் பள்ளியிலும், சின்னதாராபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியிலும் முடித்தார். பின்னர், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1967 ஆம் ஆண்டு M.B.B.S பட்டம் பெற்றார்.

சுமார் ஆறு ஆண்டுகள் 1968 முதல் அரசுத் துறையில் மருத்துவராய்ப் பணி புரிந்தார். பின்னர், 1973 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை மதுரை மருத்துவக் கல்லூரியில் படித்து, M.D (பொது மருத்துவம்) பட்டம் பெற்றார். பின்னர், மீண்டும் அரசுப் பணியில் சேர்ந்து 1979 ஆம் ஆண்டு வரை அரசு மருத்துவராக மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

1980 ஆம் ஆண்டு, அரசுப் பணியிலிருந்து விலகி, கரூர் அமராவதி மருத்துவமனை என்னும் பெயரில் மருத்துவமனை தொடங்கி, அப்போது முதல் தற்போதுவரை, சிறப்பான மருத்துவச் சேவை புரிந்து வருகிறார்.

மருத்துவத்துறையில் 1968 ஆம் ஆண்டு முதல் 49 ஆண்டுகளாக, மிகவும் அர்ப்பணிப்புடனும், திறமையுடனும், மிகச் சிறந்த மருத்துவர்களுள் ஒருவர் எனும் நற்பெயரோடு மருத்துவச் சேவையாற்றி வருகிறார்.

கிராமப்புறத்திலிருந்து வரும் நோயாளிகளுக்கு, குறிப்பாக வசதியற்ற நோயாளிகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்குவதுடன், மருத்துவமனையில் தங்க வைத்துத் தகுந்த சிகிச்சை அளித்து வருகின்றார்.

இவருடைய மனைவி பெயர் பூங்கோதை. இத்தம்பதியருக்கு வே. சுந்தரவதனம் என்னும் மகன் உள்ளார். மனைவி திருமதி பூங்கோதை, மகன் திரு. சுந்தரவதனம் ஆகிய இருவரும் சொந்தமாகத் தொழில் செய்து வருகின்றனர்.

“A man has many wishes. But a sick man has only one wish” என்பது உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கூற்றாகும். தொடர்ந்து 49 ஆண்டுகளாக மனிதநேயத்துடன், சிறந்த முறையில் சிகிச்சை அளித்து, கரூர் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராம மக்களின் மருத்துவக் காவலராய்ச் சிறந்து விளங்குகிறார்.

மருத்துவச் சேவை மனித உயிர் காக்கும் உன்னத சேவை. கடவுளுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுபவர் மருத்துவர்தான் என்று கூறுவர். அத்தகைய மருத்துவச் சேவையைத் தொடர்ந்து 49 ஆண்டுகளாக அனைவரும் போற்றிப் பாராட்டும் வகையில் சீரிய முறையில் செய்து வருகின்ற மருத்துவ நிபுணர் டாக்டர் என். வேலுசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## ஸ்ரீ சக்தி கோச் திரு. ஆர். நடராஜன்

கரூர் மாவட்டம், அரவக்குரிச்சி வட்டம் தென்னிலை மீனாட்சி வலசு கிராமத்தைச் சேர்ந்த திரு. பி.இராமசாமி கவுண்டர் – திருமதி ஆர்.இராசம்மாள் தம்பதியருக்கு 1959 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு. ஆர்.நடராஜன். கண்ணன் குலத்தைச் சேர்ந்தவர் இவர்.

வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரியில் B.Sc., பட்டமும், சென்னை M.I.T யில் B.Tech பட்டமும் பெற்றார். பின்னர், கரூர் எல்ஜிபி என்ஜினியரிங் நிறுவனத்தில் 10 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி, பேருந்து உடல் கட்டும் (Bus Body) தொழிலில் மிகுந்த அனுபவம் பெற்றார்.

1994 ஆம் ஆண்டு, சொந்தமாக Bus Body கட்டும் தொழிலில் ஈடுபட்டார். ஸ்ரீ சக்தி கோச் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். அயரா உழைப்பு, சிறந்த நிர்வாகம், தனித் திறமை, தொழில் அனுபவம் முதலானவை இவரைத் தொழிலில் வெற்றிப் பாதைக்கு அழைத்துக் சென்றன. தற்போது கரூர்ப் பகுதியில் சிறந்த தொழில் அதிபர்களுள் ஒருவராய்ப் புகழ்மிக்கு விளங்குகிறார்.

சமூக சேவையிலும், சமுதாயப் பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு, தொண்டுகள், நற்பணிகள், சேவைகள், உதவிகள் எனப் பலவகையிலும் செயலாற்றி வருகின்றார். தென்னிலை அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் – ஆசிரியர் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். கடந்த 20 ஆண்டுகளாகப் பள்ளியில் இரண்டு ஆசிரியர்களுக்கான ஊதியத்தை இவர் வழங்கி வருகிறார். இதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படாமலும், மாணவர்களுக்கு நல்ல கல்வியைக் கற்பிக்கவும் வழிவகை செய்துள்ளார்.

தென்னிலை அருள்மிகு பழனி முருகன் தீர்த்த காவடி அறக்கட்டளையின் செயலாளராகவும், மணலூர் அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில், மணலூர்

கண்ணன் குலம் பங்காளி சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்.

சுவிட்ஸர்லேந்து, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, துபாய், சைனா முதலான நாடுகளுக்குத் தொழில் முறை பயணங்கள் மேற்கொண்டு, தொழிலில் புதிய உத்திகளைப் புகுத்தியவர் இவர்.

இவர் தொழிலில் புரிந்துள்ள சாதனைகளுக்காகவும், பொதுச் சேவைகளுக்காகவும், பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். அவற்றுள் சென்னை சினிமா கலை மன்றம் 1999 ஆம் ஆண்டு வழங்கிய 'Best Coach' விருது, தென் கனரா பஸ் உரிமையாளர்கள் சங்கம் 2002, 2003, 2004 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வழங்கிய Best Body Builder and Service விருது, சென்னை நண்பர்கள் பண்பாட்டுக் கழகம் 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டு வழங்கிய ஐஸ்வர்யம் மற்றும் சிறப்பு ஐஸ்வர்யம் விருதுகள், சேலம் முதல் மேயர் டாக்டர் ஜி.சூடாமணி 2006 ஆம் ஆண்டு வழங்கிய 'Prime Achiever' விருது, 2007 ஆம் ஆண்டு, சென்னை நண்பர்கள் பண்பாட்டுக் கழகம் வழங்கிய சிறந்த சாதனையாளர் விருது, 2007 ஆம் ஆண்டு மணலூர் கண்ணகுலச் சங்கம் வழங்கிய கண்ண குல வரலாறு நூல் வெளியீட்டுப் பரிசு, தேசிய ஒருமைப்பாடு பண்பாட்டுக் கழகம் 2008 ஆம் ஆண்டு வழங்கிய Gold Star Millennium விருது, 2008 ஆம் ஆண்டு திருச்சி தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் வழங்கிய ராஜ கலைஞன் விருது, 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் 'மக்கள் சந்திப்பு' வழங்கிய சேவைச் சுடர் மற்றும் இமயம் விருது, விஸ்வ ஜோதி விருது, புதுமை புரட்சி விருது, 2013 ஆம் ஆண்டு Universal Global Peace நிறுவனம் வழங்கிய 'The degree of Doctor of Social works' விருது முதலானவை குறிப்பிடத்தக்கன.

கோவை மாருதி பேப்பர் போர்டு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர், தாராபுரம் ஸ்ரீ சக்தி காற்றாலை உரிமையாளர், கலைக்கோவில் வித்யா மந்திர் மற்றும் போலரை மூலனூர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிச் செயலாளர், கோவை ஸ்ரீ குரு தொழில் நுட்ப நிறுவனத்தின் தாளாளர், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி மாநில இணைச் செயலாளர், கரூர் சக்தி டிரேவல்ஸ் உரிமையாளர், கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை செயலாளர் முதலான பொறுப்புகளையும் ஏற்று, மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

இவருடைய மனைவி பெயர் திருமதி சாவித்திரி. இத்தம்பதியருக்கு பிரவீன் என்ற மகன் உள்ளார். B.E., பட்டம் பெற்றவர். தந்தையுடன் இணைந்து தொழில் செய்து வருகின்ற இவரது மனைவி பெயர், திருமதி சுவாதி.

தொழில் துறையில் சாதனை படைத்துள்ளதோடு, சமுதாயப் பணிகளில் சிறந்து விளங்கி, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்திடும் வண்ணம் செயலாற்றி வருகின்றதைப் பாராட்டி, சக்தி கோச் திரு.ஆர். நடராஜன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. ஆர். சின்னசாமி

ஈரோடு மாவட்டம், இந்திரபுரம், சூரியம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. P. ராமசாமி கவுண்டர் – திருமதி முத்தாயி அம்மாள் தம்பதியருக்கு 1950 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு. R. சின்னசாமி. கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்த இவர் ஒரு விவசாயி. மஞ்சள் வணிகம் (ஸ்ரீதனம் &Co) செய்து வருகிறார். இவர் தன்னை ஒரு விவசாயி எனப் பெருமையுடன் கூறி வருகின்றார்.

ஈரோடு ஆஞ்சநேயர் கோவில் திருப்பணிக் குழுவில் நான்கு ஆண்டுகள் தலைவராகவும், ஈரோடு ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும், ஈரோடு கொங்கு கலையரங்கம் மற்றும் கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம் (2004 – 2007) ஆகியவற்றின் பொருளாளராகவும் பதவி வகித்துச் சிறப்புடன் செயல்பட்டார். தற்போது சக்தி நகர் நலச் சங்கப் பொருளாளராகவும், ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் (மூன்றாவது முறையாக) தலைவராகவும், ஈரோடு கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம், கொங்கு கலையரங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்.

ஈரோட்டிற்கு உலக அளவில் ''மஞ்சள் மாநகரம்'' எனப் பெயர் வாங்கித் தந்த பாரம்பரிய மஞ்சள் வணிகத்தை 50 ஆண்டுக் காலம் நிலைநிறுத்தி வந்தமைக்கு மத்திய அரசு சிறப்புத் தபால் தலை வெளியிட்டபோது, இவருக்குப் பாராட்டும் கேடயமும் வழங்கியது. மழைநீர்ச் சேகரிப்பு மற்றும் மரம் நடுதல் & பேணுதல் வகையில் இரண்டு முறை ஈரோடு சக்தி மசாலா அறக்கட்டளை இவருக்கு 'மரங்களின் பாதுகாவலர்' விருது வழங்கிப் பாராட்டிக் கௌரவப்படுத்தியது.

ஆண்டுதோறும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி நிதி உதவி, பள்ளிச் சீருடை மற்றும் புத்தகங்கள், மருத்துவ உதவி, தண்ணீர்ப்பந்தல் அமைத்து நீர் மோர், கம்மங்கூழ் வழங்குதல், டெங்கு, வைரஸ் காய்ச்சல் குணமாக நிலவேம்பு, மலைவேம்பு, கசாயம் மற்றும் பப்பாளி சாறு வழங்குதல் முதலான பணிகளைச் சிறப்புடன் செய்துள்ளார். நாட்டுக் காய்கறிகள், பாரம்பரியச் சிறு தானியங்களான தினை, கம்பு, வரகு, குதிரைவாழி, சாமை, கேழ்வரகு போன்றவற்றைச் சேர்த்துக் கொள்வதால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுதல் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியுள்ளார்.

ஈரோடு செம்பாம்பாளையம் பகுதியில் 52 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைத்து விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைத்திட ஏற்பாடு செய்து, இந்திய அளவில் வணிகத் தொடர்பையும் ஏற்படுத்தியது, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு, நாட்டு மாடுகள் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தச் செய்வது, முதியோர் இல்லம் சென்று ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கி அரவணைத்து ஆறுதல் கூறி வருவது முதலான சமுதாய முன்னேற்றப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

இவருடைய இல்லத்தரசி பெயர் சி.திலகவதி. இத்தம்பதியருக்கு ராசி. தனசேகரன் என்ற மகனும், கிருத்திகா தேவி என்ற மகளும் உள்ளனர். மருமகள் பெயர் D. பத்மலதா, மருமகன் பெயர் எஸ். ஆனந்த்.

கொங்குக் கலாசாரம், பண்பாடு முதலானவற்றை நிலை நிறுத்திடவும், ஏழை எளிய மக்களுக்கு நன்மைகள், உதவிகள் செய்துவருவதோடு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், விவசாயிகளுக்கு, குறிப்பாக மஞ்சள் பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல பலன்கள் கிடைத்திடவும் அரும்பாடுபட்டு வருகின்ற திரு. ஆர். சின்னசாமி அவர்களின் சிறந்த சமுதாயப் பணிகளைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி வாழ்த்துகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. பி. ராஜ்மோகன்

நாமக்கல் மாவட்டம் சின்னமனலி கிராமம், கருக்கன் காடு தோட்டம் திரு. பழனிவேல் – திருமதி சகுந்தலா ஆகியோரின் மகனாக 1975 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு. பி. ராஜ்மோகன். இவரது மனைவியின் பெயர் திருமதி சாந்தி. கண் மருத்துவராகச் சென்னை KMC இல் பணியாற்றி வருகின்றார்.

இத்தம்பதியருக்கு செல்வன் பிரகாஷ், செல்வன் சதீஷ் ஆகிய இரு மகன்கள் உள்ளனர். திரு. ராஜ்மோகன் பள்ளிப் படிப்பை வையப்பமலை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் முடித்துவிட்டு, கொங்கு பொறியியல் கல்லூரியில் BE (Mechanical) பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் MBA பட்டமும், பின்னர் REC - திருச்சியில் ME (Industrial Safety) முதுநிலைப் பட்டமும் பெற்று, தற்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்தியாவில் விபத்துத் தடுப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர், கோயம்புத்தூர் பிரிகால் நிறுவனத்தில் தொழிற்சாலைப் பாதுகாப்பு அதிகாரியாக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது 100 பொறியியல் கல்லூரிகளுக்கு மேல் சென்று தொழிற்சாலைப் பாதுகாப்பு மற்றும் சாலைப் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சிகளைக் கொடுத்துள்ளார்.

மேலும் பிரிகால் நிறுவனத்தை விபத்தில்லாத் தொழிற்சாலையாக உருவாக்க முக்கியப் பங்காற்றியமைக்காக இவருக்கு 2005 ஆம் ஆண்டு, தமிழக அரசின் விருது வழங்கப்பட்டது.

Industrial Safety Engineering Course, KSR பொறியியல் கல்லூரியில் தொடங்கக் காரணமாக இருந்துள்ளார். பகுதி நேரங்களில் 50 தொழிற்சாலைகளை ஆய்வு செய்து அவற்றின் பாதுகாப்புத் தரத்தினை உயர்த்தித் தடையில்லா உற்பத்திக்கும், தொழிலாளர் பாதுகாப்புக்கும் வகை செய்தார். Areva T & D Chennai யில் பணியாற்றிய

போது சிறந்த கட்டுமானப் பாதுகாப்பை உறுதி செய்ததற்காக, பாராட்டுச் சான்றிதழ் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்குச் சென்று சாலைப் பாதுகாப்பு மற்றும் தொழிற்சாலைப் பாதுகாப்புப் பற்றிப் பல விழிப்புணர்வுப் பயிற்சிகளைத் தொடர்ந்து கொடுத்து வருகிறார். தற்போது, Toshiba நிறுவனத்தில் தலைமை தொழிற் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

சிறந்த சுற்றுச் சூழல் தொழிற்சாலை மற்றும் கரியமில வாய்வு வெளியேற்றத்தைக் குறைத்தற்காக 2016 ஆம் ஆண்டு Green Apple Award, American Society of Safety Professionals 2015 ஆண்டு இந்தியாவின் சிறந்த தொழிற்சாலைப் பாதுகாப்பு அதிகாரி விருது, இயந்திரப் பாதுகாப்பினை மேம்படுத்தியதற்கும் மற்றும் விபத்தில்லாத் தொழிற்சாலையை உருவாக்கியதற்கும் Toshiba Chairman விருது, தமிழக அரசின் 2016 ஆம் ஆண்டு சிறந்த பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் அதிகாரி விருது, தேசிய அளவில் 2014 ஆம் ஆண்டு சிறந்த பாதுகாப்புகான SEED Trust விருது முதலானவை இவர் பெற்றுள்ள விருதுகளுள் குறிப்பிடத்தக்கன.


KIOT பொறியியல் கல்லூரியில் M.E., Industrial Safety துவக்கி, அதற்கு ஆலோசகராக உள்ளார். தற்போது தேசியப் பாதுகாப்புக் குழுமத்தின், தமிழ்நாடு பிரிவின் செயலாளராக உள்ளார். SEED For Sustainability, New Delhi தன்னார்வ நிறுவனத்துடன் இணைந்து சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காகவும் மேம்பாட்டிற்காகவும் அயராது பணியாற்றி வருகின்றார். இது மட்டுமின்றி, கிராம மக்களுக்கும், பள்ளிக் குழந்தைகளுக்கும் தண்ணீர்ச் சேமிப்பு, மின்சாரச் சேமிப்பு, குப்பைகள் வகைப்படுத்தும் முறை, கரியமில வாயு வெளியேற்றத் தடுப்பு முறைகள் முதலானவற்றைக் கற்பித்து வருகின்றார்.

நாமக்கல்லில் உள்ள 250 லாரி ஓட்டுனர்களுக்குத் தற்காப்பு ஓட்டுனர் பயிற்சி வகுப்பு நடத்தி அதன் பின்னர், அவர்களுடைய வாகன ஓட்டும் திறனைக் கண்காணித்துக் குறை இருப்பின் சீர் செய்து வருகிறார்.

ISRO, ONGC, National Institute of Ocean Technology, Anna University, Ramachandra University போன்ற நிறுவனங்கள் / கல்விக் கூடங்களுக்குச் சிறப்புப் பாதுகாப்புப் பயிற்சியாளராகத் தேசியப் பாதுகாப்புக் குழுமம் மூலம் பயிற்சி அளித்து வருகின்றார்.

தொழில் துறையில் சிறந்த பாதுகாப்பு நிபுணராய் விளங்கி வருவதோடு, பல உயரிய விருதுகளைப் பெற்றுக் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு.பி.ராஜ்மோகன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. எஸ். ரவிச்சந்திரன்

கோவை மாவட்டம் மோளபாளையம் கிராமத்தைச் சேர்ந்த காலம் சென்ற திரு. ஆர். சபாபதி கவுண்டர் (முன்னாள் ஊராட்சித் தலைவர்) – திருமதி துளசியம்மாள் (முன்னாள் ஊராட்சித் தலைவி) ஆகியோர் மகனாக 1959 ஆம் ஆண்டு புகழ்வாய்ந்த விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், திரு. எஸ். ரவிச்சந்திரன். உடன்பிறந்தவர்கள், ஒரு சகோதரி மற்றும் ஒரு சகோதரர்.

ஆரம்பக்கல்வியை மோளபாயைம் அரசு உயர்நிலைப்பள்ளியிலும் உயர்நிலைக் கல்வியைப் பொன்னேகவுண்டன்புதூரிலும் முடித்து, பின்னர், கோவை பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பி.இ. (மெக்கானிகல்) பட்டம் பெற்றார்.

பின்பு, கோவை லட்சுமி மெஷின்ஸ் நிறுவனம் மற்றும் எல்.ஜி. எக்யுப்மென்ட்ஸ் நிறுவனங்களில் உற்பத்தி மற்றும் பராமரிப்புப் பொறியாளராக, நிறுவனமும் தொழி வாளர்களும் பாராட்டும் வண்ணம் சிறப்பாகப் பணியாற்றியவர். குறிப்பாக, இயந்திரப் பராமரிப்புப் துறையில் சாதனைபுரியும் எண்ணத்தில் தீவிரக் கவனம் கொண்ட இவர், மேற்கண்ட நிறுவனங்களில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர்ச் சொந்தமாகத் தொழில் துவக்கினார்.

விவசாயப் பிரச்சினைகளின் ஒரு தீர்வான ஆழ் துளை கிணறு அமைக்கும் இயந்திரங்கள், கம்ப்ரசர்கள், அதன் பின்னர்த் தொழில் நிறுவன கம்ப்ரசர்கள் உற்பத்தி, விற்பனை மற்றும் பராமரிப்பு எனப் பல்வேறு திசைகளிலும் கால் பதித்துத் தனது நிறுவனத்தினை வெகு விரைவாக முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

அதன் பின்னர் மேலை நாடுகளான ஜெர்மனி, கொரியா, சிங்கப்பூர் போன்றவற்றின் உயரிய தொழில் நுட்பங்களுடன் கூடிய உற்பத்திப் பொருட்களை மேற்கண்ட துறைகள் மட்டுமல்லாமல் கட்டுமானத் துறைகளிலும் புகுத்திச் சாதனை செய்துள்ளார்.

இவ்வாறு சாதனைகள் பல செய்துள்ள இவர், தற்போது கீழ்க்காணும் நிறுவனங்களின் தலைவராக உள்ளார்.

1. ராம்சிவ் நூரமாடிக்ஸ் பிரைவேட் லிமிடெட்

2. மார்வெல் என்கான் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்

3. பைவ்ம் ரெண்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்

4. ரெனோன் எனர்ஜி அண்ட் எக்கியூப்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

5. இராம்சிவ டூல்ஸ் பிரைவேட் லிமிடெட்

6. மார்வெல் சிண்டிகேட் பிரைவேட் லிமிடெட்

சிறந்த நிர்வாகம், அயரா உழைப்பு, புதிய உத்திகள், நவீன தொழில் நுட்பக் கருவிகள் முதலானவற்றோடு அனைவரிடமும் மனித நேயம் மிக்க அணுகுமுறையும் இவருடைய வெற்றிகளுக்குத் துணை நிற்கின்றன.

இவருக்கு துளசிமணி என்ற மனைவியும், நிவிதா, பாரதி என்ற இரு பெண்மக்களும் உள்ளனர். மூன்று பேத்தியர்களையும் கொண்டது இவரது இனிய குடும்பம்.

தொழில் ரீதியாக வியத்தகு முன்னேற்றம் கண்ட இவர், அத்தோடு நில்லாமல் தன்னுள்ளே இயற்கையாகக் கொண்ட சுபாவத்தினால் கல்விக்கு உதவி செய்தல், மரம் நடுதல், இயற்கையைப் பேணுதல், பொதுச் சேவை எனப் பல்வேறு சமுதாயப் பணிகளையும் தொண்டுகளையும் செய்து வருகின்றார். அதற்காக ஆண்டு தோறும் நற்பணிகளுக்கு மிகப் பெரிய அளவில் நிதி உதவி செய்து வருகிறார். அத்துடன் நில்லாமல் நாட்டின் நலன் கருதி நேர்மையான அரசியல் ஈடுபாடும் கொண்டவர்.

தொழில் துறையில் சாதனைகள் புரிந்துள்ளதோடு, சிறந்த அளவில் சமுதாயப் பணிகளை ஆற்றி வருகின்றவரும், கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்திடும் வகையில் செயலாற்றி வருபவருமான திரு. எஸ். ரவிச்சந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. வேணு ரமேஷ்குமார்

திருப்பூர் நகரில் டன்லப் ஹோசியிரி தயாரிப்பு நிறுவனத்தின் உரிமையாளர் திரு. ஏ. வேலுசாமி கவுண்டர் அவர்களுக்கு 1970 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு.வே.வேணு ரமேஷ்குமார் எனும் வேணு. தாயார் பெயர் திருமதி சரஸ்வதி.

கோவை ஜி.ஆர்.டி. அறிவியல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார், திரு.வேணு. பள்ளியில் படிக்கும் போதே, மோட்டார்ப் பந்தயங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 1999 ஆம் ஆண்டு, கோவை ஆட்டோ ஸ்போர்ட்ஸ் சங்கம் உதவியுடன் முதன் முதலாக, யமஹா 100CC பைக் ஓட்டி, தன்னுடைய மோட்டார்ப் பந்தய விளையாட்டில் காலடி எடுத்து வைத்தார். அப்போதே, சில Dirt Track பந்தயங்களிலும் பங்கேற்றார் இவர். படிப்படியாக, நல்ல பயிற்சி பெற்று, சிறந்த மோட்டார்ப் பந்தய வீரர் எனப் பெயர் பெற ஆரம்பித்தார். இவரது பேரார்வம், துணிச்சல், கடின உழைப்பு, திறமை, சீரிய பயிற்சி, தன்னம்பிக்கை முதலானவை இவருக்குக் கைக்கொடுக்க ஆரம்பித்தன. சிறந்த மோட்டார் பந்தய வீரர் ஆவதையே இலட்சியமாகக் கொண்டு அதற்கான பயிற்சிகளிலேயே பெரும்பாலான நேரத்தை ஒதுக்கிக் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டார்.

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்ற முதுமொழிக்கேற்ப, 2001 ஆம் ஆண்டு, திரு.வேணு 'காரி மோட்டார் ஸ்பீட்வே' போட்டியில் 'சிறந்த பந்தய வீரர் மற்றும் ரைடர்' விருது பெற்றார். தன்னுடைய சொந்த ஆர்வம் காரணமாகவே, கீழ்க்காணும் மூன்று போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வீரராகப் பரிசு பெற்றார்.

1. MRF Motorcross 2002 - மூன்றாம் இடம்

2. GULF Dirt Track 2003 - இரண்டாம் இடம்

3. Kari Motor Speedway 2004, 2005 & 2006 - சாலைப் பந்தயத்தில் முறையே முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடம்.

**2007** ஆம் ஆண்டு, பந்தய மைதானத்தில் ஏற்பட்ட விபத்தில் இவருக்குக் கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. மருத்துவர் அறிவுரையின் பேரில் அந்த ஆண்டு முழுவதும் ஓய்வு எடுக்க நேரிட்டது.

உடல் குணமடைந்த பின்னர், **2008** ஆம் ஆண்டு மீண்டும் பந்தயத்தில் பங்கேற்றார்.
2 Wheeler Speed Indian National Rally Championship போட்டியில் **2008, 2009** மற்றும் **2010** ஆண்டுகளில் தொடர்ந்து வெற்றி பெற்றார்.

பின்னர், Four Wheeler Rally இல் நேவிகேட்டர் ஆக முதல் முதலில் பங்கேற்று, **2011** ஆம் ஆண்டு Indian National Rally Championship Gypsy Cup போட்டியில் கலந்து கொண்டார். இப்போட்டியில் National Championship பட்டம் பெற்றுச் சாதனை படைத்தார். அதே ஆண்டு மாருதி Dakshin Dare Rally நடத்திய Cross Country பந்தயத்தில் பங்கு கொண்டு வெற்றி பெற்றதுடன், மோட்டர் பைக் – பந்தயத்தில் Overall – இரண்டாமிடத்தைப் பிடித்துச் சாதனை படைத்தார்.

**2012** ஆம் ஆண்டு Mahindra Adventure Monsoon Rally இல் வெற்றி, **2013** இல் Dakshin Dare Cross Country Race இல் முதலிடம், **2014** இல் உலகிலேயே மிகவும் கடுமையான Raid De Himalaya போட்டியில் நேவிகேட்டராக முதலிடம், MRF Indian National Rally Championship போட்டியில் Two Wheeler பிரிவில் இரண்டாமிடம், **2016** ஆம் ஆண்டு Raid De Himalaya போட்டியில் நேவிகேட்டராய் வெற்றி மற்றும் Overall இரண்டாமிடம், Four Wheeler FMSCI Cup Navigator Championship - இல் முதலிடம் எனப் பல அரிய வெற்றிகளைக் குவித்துள்ளார்.

**2017** ஆம் ஆண்டு, MRF Indian National Rally Championship for two wheeler போட்டியில் முதலிடத்தில் தற்போது உள்ளார்.

இவருடைய மனைவி பெயர் திருமதி பர்வத குமாரி. இத்தம்பதியருக்கு ரித்தீஷ் சேகர் என்னும் எட்டாம் வகுப்புப் படிக்கும் மகன் உள்ளார்.

சிறந்த மோட்டார்ப் பந்தய வீரராய் விளங்கிச் சாதனைகள் பல படைத்து, கொங்கு நாட்டிற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள திரு.வேணு ரமேஷ்குமார் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி வாழ்த்தி மகிழ்கிறது. இவர் இத்துறையில் மேலும் பல சாதனைகளைப் படைத்திடவும், புகழ் ஏணியில் இன்னும் ஏறிடவும் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. A.K.P. மூர்த்தி

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஏ.கே.பழனியப்பன் – திருமதி செட்டியம்மாள் தம்பதியருக்கு 1968 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு. ஏ.கே.பி. மூர்த்தி.

அத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 9 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள இவர், சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளினால் படிப்பை மேற்கொண்டு தொடர இயலவில்லை. தான் கற்க இயலாக் கல்வியை, கிராமப்புற மாணவர்கள் பெற்றிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், கல்வி நிறுவனங்களைத் துவங்கி, கல்விப் பணியாற்றி வருகிறார். தொழில் துறையிலும் சிறந்து விளங்குகிறார். வியக்க வைக்கும் இச்சாதனையைப் புரிந்துள்ளமைக்குக் காரணமாக விளங்குவது, இவரது கடின உழைப்பும், விடாமுயற்சியும், சாதிக்க வேண்டும் என்ற மன உறுதியுமே ஆகும்.

1990 ஆம் ஆண்டு முதல் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பாப்பம்பாடி கிராமத்தில் முட்டைக்கோழிப்பண்ணைத் தொழில் செய்து வருகிறார். மேலும் கிழங்கு அரைவு ஆலை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

1991–92ஆம் ஆண்டு இந்தியன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி துவக்கப்பட்டு (கோபிநாதம்பட்டி கூட்ரோடு), தற்சமயம் (LKG to XII) 3000 மாணவர்கள் மெட்ரிக் பள்ளியில் பயின்று வருகிறார்கள்.

2013–14 ஆம் ஆண்டு இந்தியன் பப்ளிக் ஸ்கூல் (CBSE) துவக்கப்பட்டு, தற்சமயம் 550 மாணவர்களுடன் பள்ளி இயங்கி வருகிறது.

மேலும் 2015–16ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தியன் கல்வியியல் (B.Ed.,) கல்லூரி (மகளிர் மட்டும்) (B.Ed.,) 200 மாணவிகளுடன் இயங்கி வருகிறது.

2002ஆம் ஆண்டில் சேலத்தில் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் இல் Hotel South Gate மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

2007 ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் காற்றாலை துவக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது.


அரூர் to சேலம் மெயின் ரோடு எருமியாம்பட்டியில் ஸ்ரீபழனியப்பா திருமண மண்டபம் (A/C) கட்டப்பட்டுள்ளது. தன்னுடைய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் காரணமாக உள்ள தந்தை திரு. பழனியப்பன் அவர்களின் பெயரை இந்த மண்டபத்திற்குச் சூட்டியுள்ளது, இவரின் நன்றி நவிலும் சிறந்த குணத்தையும், தந்தை மேல் கொண்டுள்ள பாசத்தையும் காட்டுவதாக உள்ளது.

இவர் தன்னுடைய கடின உழைப்பால் உயர்ந்து வசதியற்ற பலருக்கு வேலை வாய்ப்பு அமைத்துக் கொடுத்துப் பல்வேறு குடும்பங்கள் வாழ்வதற்கு வழி வகுத்துள்ளார். சமுதாயப் பற்றுக் கொண்டுள்ள இவர், கோவை செழியன் காலத்தில் இருந்து கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையில் நீண்ட காலமாக ஈடுபாட்டுடன் செயலாற்றி வருகிறார்.

இவருடைய திருமணம் 1995 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவருடைய வெற்றிகளுக்குத் துணையாய் இருப்பவர், இவரது வாழ்க்கைத் துணைவியாக அமைந்துள்ள திருமதி மூ. சசிகலா. இத்தம்பதியருக்கு ஹேமந்த்குமார் எனும் மகனும், மௌனிஷா எனும் மகளும் உள்ளன. செல்வி மௌனிஷா, கோவை பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியில் B.E., (Bio Medical) பட்டம் பெற்றுள்ளார். செல்வன் ஹேமந்த் குமார் டெல்லியில் உள்ள ஸ்ரீராம் கல்லூரியில் பி.காம்., பட்டப் படிப்புப் படித்து வருகிறார்.

முயற்சி திருவினையாக்கும், உழைப்பு உயர்வு தரும் என்னும் பொன்மொழிகளுக்கு ஏற்ப, தொழில் துறையிலும், கல்வித் துறையிலும் பலரும் பாராட்டும் வகையில் சாதனைகள் புரிந்துள்ள திரு. ஏ. கே.பி. மூர்த்தி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



# திரு. க. இராசா கவுண்டர்

நாமக்கல் மாவட்டம், மரூர்பட்டி அருகில் உள்ள காட்டுப்பட்டி கிராமத்தைச் சார்ந்த திரு.கருப்பக் கவுண்டர் – திருமதி அருக்காணி தம்பதியரின் மகனாக 1962 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு. இராசா கவுண்டர்.

பத்தாம் வகுப்பு முடித்தவுடன் முழுநேர விவசாயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தமிழின் மீதும், குறிப்பாகத் திருக்குறள் மீதும் தீராக் காதல் கொண்டுள்ள இவர், 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் திறன் கொண்டுள்ளதோடு, ஒவ்வொரு திருக்குறளுக்கும் தகுந்த விளக்கமளிக்கும் வல்லமை பெற்றுள்ளார். மாணவ, மாணவியர்க்குத் திருக்குறளைச் சொல்லி, அவர்களுக்கு எளிதில் புரியும்படியும் சுவைபடவும் விளக்கமளித்து, திருக்குறள் காட்டும் நெறிகள்படி நடந்திட மாணவர்களை ஊக்குவித்து வருகின்றார்.

கல்லூரியில் படிக்காத இவர், நூற்றுக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள் நடத்திய இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, திருக்குறள் புகழ் பரவவும், திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறிகளை விளக்கி அவற்றைக் கேட்போர் நெஞ்சங்களில் பதிய வைக்கவும் பாடுபட்டு வருகின்றார். இவற்றை முற்றிலும் இலவசமாகச் செய்து வருகிறார். இச்செயல்களுக்காக, நாமக்கல் ஆட்சித் தலைவர் உள்ளிட்ட பெருமக்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ள சிறப்புக்குரியவர் இவர்.

நாமக்கல் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவராகவும், மரூர்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக் குழுத் தலைவராகவும், நாமக்கல் கவிஞர் சிந்தனைப் பேரவையின் பொருளாளராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார்.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கிய 'திருக்குறள் திலகம்' பட்டம், சுகி சிவம் அவர்கள் வழங்கிய 'திருக்குறள் திலகம்' பட்டம், லேனா தமிழ்வாணன் அவர்கள்

வழங்கிய 'திருக்குறள் வேந்தன்' பட்டம், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் வழங்கிய 'குறட்பாவின் குறள்' பட்டம், நீதியாசர் T.N வள்ளிநாயகம் அவர்கள் வழங்கிய 'முப்பால் காவலர்' பட்டம் ஆகியவை இவர் பெற்றுள்ள பட்டங்களுள் குறிப்பிடத் தக்கவையாகும்.

இவருடைய மனைவி பெயர் மல்லிகா. இத்தம்பதியருக்கு திவ்யா எனும் மகளும், நவீன் எனும் மகனும் உள்ளனர். செல்வி திவ்யா பொறியியல் (B.E.,) பட்டம் பெற்று, சென்னை CTS நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். செல்வன் நவீன் தற்போது B.E., பட்டம் பெற்றுள்ளார்.

ஐக்கிய நாட்டுச் சபையில் **1330** குறளையும் ஒப்புவித்தலைத் தன்னுடைய இலட்சியமாகக் கொண்டுள்ள திரு. இராசா கவுண்டர் அவர்களுக்கு மிகவும் பிடித்த குறள்


"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது

உணர விரித்துரையா தார்"

என்பதாம். தாம் கற்ற நூற்பெருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர் என்பது இக்குறளின் பொருளாம்.

இக்குறள் காட்டும் வழியில், திருக்குறள் கற்பித்துவரும் 'திருக்குறள் நினைவாற்றல் கலை ஏந்தல்' இராசா கவுண்டர் அவர்களின் அரிய செயல்களையும், சாதனையையும் பாராட்டி, இவருக்குச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி வாழ்த்துகிறது.

# வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்



## திரு. டத்தோ மணிவாசகன் இராமசாமி

நாமக்கல் மாவட்டம் பொம்மைகுட்டைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு.ராமசாமி காளி கவுண்டர் (லேட்) – திருமதி கருப்பாயி சுப்பையா தம்பதியருக்கு **1961** ஆம் வருடம் மூத்த மகனாகப் பிறந்தவர், டத்தோ மணிவாசகன் இராமசாமி.

மலேசியா கோலாலம்பூர் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள சுல்தான் அப்துல் சமாட் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பையும், அரசு தொழில் பயிற்சி மையத்தில் DEE படிப்பையும் முடித்தார்.

படிக்கும்போதே, பள்ளி விடுமுறை நாள்களில் லாரி கிளீனர் வேலையும், விவசாயத் தோட்ட வேலையும் செய்து வந்தார். படிப்பை முடித்த பிறகு சுமார் இரண்டு ஆண்டுகள் கப்பலில், ஈய சுரங்கத்தில் Trainee யாக வேலை செய்து வந்தார். பிறகு மலேசிய அரசு மின்வாரியத்தால் நடத்தப்படும் தேர்வில் முதல் மாணவனாக வெற்றி பெற்றார். பிறகு HUME INDUSTRIES என்ற நிறுவனத்தில் **1987**ஆம் ஆண்டில் TECHNICAL ASSISTANT, ஆகப் பணியில் சேர்ந்தார்.

செம்பொன் குலத்தைச் சேர்ந்த இவர், கூரைகுலத்தைச் சேர்ந்த செல்வி மலர்விழி குமாரசாமியை **10–09–1986** அன்று கரம் பிடித்தார். இவர்களுக்கு விக்ரமன் (Pilot Air Asia), குமரேஷ் (MS Finance, UK), அகிலன் (BE., Mechanical Eng.,), ஸ்ரீதர் (SPM) என்ற **4** மகன்களும், கௌசல்யா (MBBS.,) என்ற மகளும் உள்ளனர்,

திருமணம் முடிந்த சில வருடங்களில் HUME INDUSTRIES நிறுவனத்தில் TECHNICAL MANAGER ஆகப் பதவி உயர்வு பெற்றார்.

அதே நிறுவனத்தில் தொடர்ந்து **11** ஆண்டுகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டே, பகுதி நேரமாக லைப்ஃ இன்சூரன்ஸ் முகவராகவும் பணியாற்றினார். இன்சூரன்ஸில் தொடர்ந்து **3** ஆண்டுகள் மிக உயரிய சாதனையாக MDPC விருதையும்

பெற்றார். லைப்ஃ இன்சூரன்ஸ் முகவராகப் பணியாற்றிய இந்த இடைப்பட்ட காலம்தான் இவருக்கு வாழ்க்கையில் சொந்தத் தொழில் துவங்கத் திருப்புமுனையாக அமைந்தது என்றே சொல்லலாம்.

திரு. டத்தோ மணிவாசகன் இராமசாமி 1996ஆம் ஆண்டு சிறு முதலீட்டில் VICKRAH PLASTIC (M) SDN.BHD., என்ற நிறுவனத்தைத் துவக்கினார்.

தனது சொந்த நிறுவனம் மிகவும் நஷ்டமடைந்து தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலையில், 1998ஆம் ஆண்டு, தனது TECHNICAL MANAGER வேலையை உதறிவிட்டு முழு நேரமாகத் தனது VICKRAH PLASTIC நிறுவனத்தில் கவனம் செலுத்தத் துவங்கினார்.

நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த இவரது மனைவி திருமதி மலர்விழி, தனது வேலையை விட்டுவிட்டுக் கணவருடன் சேர்ந்து நிறுவனத்தைக் கவனித்து கெண்டார்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்பது திருமதி மலர்விழி மணிவாசகன் விஷயத்திலும் உண்மையானது. ஒவ்வொரு முயற்சியிலும் கணவருக்குப் பக்க பலமாக அமைந்தார்.

ஓர் இயந்திரம் மற்றும் 3 தொழிலாளர்களை வைத்துத் துவக்கிய இந்த நிறுவனத்தில் தன்னம்பிக்கை, துணிச்சல், விடாமுயற்சி கொண்டு கடினமாக உழைத்து, தனது நிறுவனத்தை மலேசியா மட்டுமல்லாது அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய ISO-9001-2008, ISO-14001-2004 தரச் சான்றிதழ் பெற்ற உலகத்தரமான நிறுவனமாக உயர்த்தினார்.

மேலும் தனது நிறுவனத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளார் என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

மலேசிய பண்டார் சன்வேயில் அமைந்துள்ள சிறிய முருகன் கோவிலைக் கோபுரத்துடன் கூடிய மிகப் பெரிய கோவிலாகக் கட்டவேண்டும் என்ற தனது தந்தையின் தீராத ஆசையினை நிறைவேற்ற வேண்டும் என்ற லட்சியத்தினைத் தனது லட்சியமாகவும் கொண்டார்.

தனது தந்தை தலைவராக இருந்த கோவிலில், தான் தலைவராகப் பதவி ஏற்ற பிறகு தனது தளராத கடும் முயற்சியினால் சிறிய முருகன் கோவிலை, சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில், மலேசியாவில் மிக உயரமான ஏழு நிலை மகா கோபுரத்துடன் கூடிய மிகப் பிரம்மாண்டமான முருகன் கோவில் மற்றும் திருமண மண்டபத்தையும் கட்டினார்.

மணிவாசகன் இராமசாமியின் கடின உழைப்பைக் கண்டு பிரமித்த மலேசிய அரசு 2014ஆம் ஆண்டு மலேசியா நாட்டின் சிறந்த விருதான டத்தோ விருது வழங்கி அவரை கௌரவப் படுத்தியது.

மலேசியா – நாமக்கல் கொங்கு நலனபிவிருத்தி சங்கத்தில் பல முக்கியப் பொறுப்புகளை வகித்து வருகிறார். சங்கத்தில் தேசியத் துணைத் தலைவராக இவர் இருந்த போது. கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களின் வேண்டுதலின் பேரில், ஜுலை 2016 ஆம் ஆண்டில் மலேசியா பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப் துன் அப்துல் ரசாக் அவர்களது தலைமையில், தமிழகம், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் வளைகுடா நாடுகளில் இருந்து சுமார் 15 ஆயிரம் பேர் கலந்து கொண்ட பிரமாண்டமான அகில உலகக் கொங்கு மாநாட்டை மலேசியாவில் நடத்திய பெருமை இவருக்கு உண்டு.

மலேசியா பண்டார் சன்வே பகுதியில் 2007 ஆம் ஆண்டுமுதல் தற்போது வரை தொடர்ந்து 10 ஆண்டுகளாகத் தலைவராகப் பதவி வகித்து மக்கள் சேவை புரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புகள் பெற்று, உழைப்பால் உயர்ந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள, மலேசியா நாட்டின் சிறந்த தொழிலதிபர்களுள் ஒருவராகத் திகழ்ந்திடும் டத்தோ மணிவாசகன் இராமசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்' விருதினை வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.



# வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்



## திரு. சிவராஜா தேவராஜன் கவுண்டர்

1970 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம், கொத்தம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவராஜன் கருப்பண்ண கவுண்டர் – திருமதி தாயம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், திரு. சிவராஜா தேவராஜன் கவுண்டர்.

கொத்தம்பாளையத்தில் இருந்து கொண்டே, திருச்செங்கோட்டில் உள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியில் 12 ஆம் வகுப்புவரை படித்து முடித்தார். படிப்புப் போக, மீதி நேரங்களில் தன்னுடைய தோட்டத்தில் விவசாய வேலைகளில் ஈடுபட்டு உதவி புரிந்தார்.

மேல்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், தன்னுடைய தந்தைக்குப் போக்குவரத்துத் தொழிலில் உதவி புரிந்தார். 1987 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை, தமிழகமெங்கிலும் மட்டுமல்லாமல், வட நாட்டின் சில இடங்களிலும் தொழில் நிமித்தமாகப் பயணம் செய்து, தொழிலில் முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தார். வெற்றியும் பெற்றார். இந்தக் கால கட்டத்தில், தான் சார்ந்த பகுதியில் கொங்குச் சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

1999 ஆம் ஆண்டு, தனது தந்தையிடம் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் கொண்டு, இங்கிலாந்து சென்று சில பெட்ரோல் விற்பனை நிலையங்களையும், பொது மளிகைக் கடைகள் சிலவற்றையும் நடத்தினார்.

இந்தத் தொழிலில் ஆறு ஆண்டுகள் கடந்த பின்னர், 2007 ஆம் ஆண்டு, ஆப்ரிக்கா நாட்டிற்குச் சென்று ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் தொழிலில் ஈடுபட்டார். விவசாயப் பொருள்களையும், கட்டுமானப் பொருள்களையும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் தொழிலில் அரசு ஒப்பந்தங்கள் மூலம் தீவிரமாக ஈடுபட்டார்.

2013 ஆம் ஆண்டு, இராதிகா எனும் மங்கையை மணம் புரிந்தார். நிகிதா என்னும் எட்டாம் கிரேடு படிக்கும் பெண்ணும், நிகிலன் என்னும் மூன்று வயது மகனும் இத்தம்பதியருக்கு உள்ளனர்.

விரைவில் ஆப்ரிக்கா நாட்டில் கொங்குக் குடும்ப விழாவினை நடத்திடத் திட்டமிட்டு வருகிறார், சமுதாயப் பற்று மிக்க இவர். அந்நாட்டில் வசிக்கும் கொங்குக் குடும்பங்களின் விவரங்களைத் தற்போது மிகுந்த ஆர்வத்துடன் சேகரித்து வருகின்றார்.


தமிழகத்திலும் மற்றும் பல்வேறு நாடுகளிலும் நடைபெறுகின்ற கொங்குக் குடும்ப விழாக்களில் கலந்து கொள்வதில் போரார்வம் கொண்டுள்ளார் இவர். 2016 ஆம் ஆண்டு மலேசியாலில் நடைபெற்ற உலகக் கொங்குச் சந்திப்பு நிகழ்ச்சியிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இங்கிலாந்து கொங்குச் சந்திப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டதோடு, 2016 ஆம் ஆண்டு துபாயில் நடைபெற்ற கொங்கு மத்திய கிழக்குக் குழுச் சந்திப்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

உழைப்பிற்கும், நேர்மைக்கும், விருந்தோம்பலுக்கு பெயர் பெற்ற கொங்கு வேளாளர் சமுதாயத்தின் கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவை தற்போது சிறிது சிறிதாக மறைந்து விடுமோ என்ற ஐயமும் அச்சமும் நிலவுகின்றன. இத்தகைய சூழ்நிலையில், கொங்கினப் பெருமையைக் காத்திடும் நோக்கில், விவசாயத்தை விட்டு, சொந்தக் கிராமத்தை விட்டு, படிப்பு மற்றும் வேலை நிமித்தமாகவும், தொழில் நிமித்தமாகவும் உலகின் பல நாடுகளில் குடிபெயர்ந்துள்ள கொங்குச் சொந்தங்களை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுள் திரு. சிவராஜா தேவராஜன் கவுண்டர் அவர்களும் ஒருவராய் முக்கியப் பங்காற்றி வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

சிறிய கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து அயரா உழைப்பையும், திறமையையும் மூலதனமாகக் கொண்டு தென் ஆப்ரிக்கா நாட்டில் குடியேறி, தொழிலில் வெற்றி பெற்றுச் சாதனை படைத்து, கொங்குச் சமுதாயப் பணியிலும், உலகளவில் கொங்குக் குடும்பங்களை இணைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்திடும் திரு.சிவராஜா தேவராஜன் கவுண்டர் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்



## டாக்டர் மாரப்பன் நல்லுசாமி

நாமக்கல் மாவட்டம் பரமத்தி சுங்கக்காரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரப்ப கவுண்டர் அவர்களின் மகனாக 1932 ஆம் ஆண்டுப் பிறந்தவர், டாக்டர் மாரப்பன் நல்லுசாமி அவர்கள்.

ஆரம்பப்பள்ளிப் படிப்பைச் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்களில் படித்த பின்னர், 1945ஆம் ஆண்டு முதல் 1951 வரை நாமக்கல் அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்து முடித்தார். 1951ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை சென்னை கிருத்துவக் கல்லூரியில் இண்டர்மீடியேட் முடித்தார். பின்னர், கோவை அரசு தொழில் நுட்பக் கல்லூரியில் (GCT) சேர்ந்து, 1957 ஆம் ஆண்டு B.E (Civil) பட்டம் பெற்றார்.

1957 ஆம் ஆண்டு, சென்னையில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியில் உதவி விரிவுரையாளர் (Asst. Lecturer) பணியில் சேர்ந்தார். ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் Hydrologic / Hydralic Engineering துறையில் முதநிலைப் பட்டம் பெற்றார்.

பிறகு 1961 முதல் 1968 ஆம் ஆண்டு வரை கிண்டி பொறியியல் கல்லூரியில் ஆசிரியராய்ப் பணியாற்றினார். அதன் பின்னர், அமெரிக்கா Colorado State University யில் 1968 முதல் 1971 வரை Civil / Ground Water Engineering என்ற தலைப்பில் ஆய்வு செய்து Ph.D பட்டம் பெற்றார்.

பிறகு, அமெரிக்கா வியோமிங் மாகாணத்தில் செய்யீன் என்ற நகரில் சர்வேயர் பணியில் சேர்ந்து 1972 வரை அங்கு வேலை செய்தார். 1972 முதல் 1991 வரை 21 ஆண்டுகள் திரு நல்லுசாமி அவர்கள் தனியாக சிகாகோ, மிச்சிகள் நகரங்களில், தனியார் பொறியியல் நிறுவனங்களுக்குப் புகழ்பெற்ற பொறியியல் ஆலோசகராகப் பணியாற்றினார். நிலத்தடி நீர் ஆராய்ச்சியில் திறமை, அனுபவம், பொறியியல் புலமை

முதலானவற்றால், பல நிறுவனங்களும் இவருடைய சிறப்பான சேவைக்கு இவரைத் தேடி வந்தவண்ணமிருந்தன.

1991 ஆம் ஆண்டு வாஷிங்டன் நகருக்குக் குடி பெயர்ந்த இவர், மேரிலாண்டு மாகாணத்தில் உள்ள Nuclear Regulatory Commission இல் திட்ட மேலாளராயும், (Project Manager) நீரியல் நிபுணராயும் (Hydrologist) பணியாற்றினார். இது அமெரிக்க நாட்டின் மிக உயரிய பதவிகளில் ஒன்றாகும். 2006 ஆம் ஆண்டு வரை இப்பதவியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

பணி ஓய்வு பெற்ற பின்னர், 2014 ஆம் ஆண்டு முதல் புளோரிடோ மாகாணத்தில் (Winter Garden) விண்ட்டர் கார்டன் எனும் இடத்தில் வசித்து வருகிறார், 85 வயது நிரம்பிய இந்தச் சாதனையாளர்.

கிண்டி பொறியியல் கல்லூரி விளையாட்டுத் துறையில் கொள்முதல் இயக்குநர், கிண்டி பொறியியல் கல்லூரியில் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர், சென்னை கொங்கு நற்பணி மன்றத்தின் இணை நிறுவன உறுப்பினர், அமெரிக்காவில் தமிழ்நாடு அறக்கட்டளையின் நிறுவன உறுப்பினர், அமெரிக்காவின் தமிழ்நாடு அறக்கட்டளைத் தலைவர், மேரிலாண்டு போட்டோ மேக் Hunt Run வீட்டு உரிமையாளர் சங்க நிர்வாக உறுப்பினர், மேரிலாண்டு கொங்கு நற்பணி மன்றத்தின் தலைவர் (2002), கங்கை காவேரி நதிகள் இணைப்புத் திட்டத்தின் அமெரிக்கத் திட்ட மேலாளர் முதலான பொறுப்புகள் ஏற்று, அனைத்துப் பொறுப்புகளிலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர்.

நதிகள் இணைப்புத் திட்டத்தின் முன்னோடியாக விளங்கிச் சாதனை படைத்தவர், காலிங்கராயன். தற்போது நதிகள் இணைப்புத் திட்டத்தைப்பற்றி நாடெங்கும் பேசப்பட்டு வருகின்றது. இத்துறையில் வல்லுனராய் விளங்கும் டாக்டர் மாரப்பன் நல்லுசாமி அவர்களின் ஆலோசனையையும், சேவையையும் மத்திய, மாநல அரசுகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது பலரின் பேரவா.

கிண்டி பொறியியல் கல்லூரிப் பேராசிரியர், நிலத்தடி நீரியல் விஞ்ஞானி, கொங்குச் சமுதாயப் பற்றாளர், சமூகச் சேவையாளர், நாடி வந்தோர்க்குத் தேவையான உதவிகள் மனமுவந்து செய்பவர் முதலான பன்முகம் கொண்டு அமெரிக்க நாட்டின் சிறந்த நீரியல் பொறியாளர்களுள் ஒருவராய்ப் புகழ் பெற்றுச் சாதனைகள் பல புரிந்துள்ள டாக்டர் மாரப்பன் நல்லுசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘‘வெளி நாடு வாழ் கொங்கு சாதனையாளர்’’ விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## முனைவர் க. லட்சுமி கந்தசாமி

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், பங்காரம் கிராமத்தைச் சேர்ந்த திரு இ.கந்தசாமி – திருமதி நல்லம்மாள் தம்பதியருக்கு 1954 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தவர், முனைவர் லட்சுமி கந்தசாமி.

B.Sc., B.Ed., M.A., Ph.D., ஆகிய பட்டங்களைப் பெற்றவர் இவர். இவருடைய கணவர் திரு.பி. கந்தசாமி B.Sc., B.Ed., இராசிபுரம் மாமரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். இத்தம்பதியரின் மகன் திரு. கே.பரத்குமார் B.Sc., B.L., பட்டங்களும், மருமகள் திருமதி சாந்தி பாரத்குமார், B.E., M.B.A., பட்டங்களும் பெற்றவர்.

1980 ஆம் ஆண்டுவரை நகர்ப்புறங்களில் வசதியானவர்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டுமே ‘கான்வென்ட்’ என்று கூறப்பட்ட ஆங்கில வழிப் பள்ளிகளில் படித்து வந்தனர். கிராமப்புற மாணவர்களுக்கு இத்தகைய ஆங்கில வழிக்கல்வி எட்டாக் கனியாகவே இருந்த காலகட்டம் அது. இதைக் கருத்தில் கொண்டு கிராமப்புற மாணவர்களுக்கு, குறைந்த கட்டணத்தில் சிறப்பான கல்வி கிடைத்திட வேண்டும் என்னும் சீரிய எண்ணத்தோடு முனைவர் லட்சுமி கந்தசாமி தன்னுடைய கணவரோடு இணைந்து 1980 ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சியில் ஆங்கில வழியில் நர்சரி மற்றும் மழலைப் பள்ளியைத் தொடங்கினார். பின்னர், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி எனப் படிப்படியாக வளர்ச்சி பெற்று, தற்போது இப்பள்ளி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

1981–82 கல்வியாண்டில் சின்னசேலம் விஜயபுரத்தில் மழலையர் பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், பொது மக்கள் மற்றும் பெற்றோர்களின் நல்லாதரவால் 1997–98 கல்வியாண்டில் இருந்து ஆங்கில வழிக்கல்வி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக, சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பவர்ஹவுஸ் அருகே L.K.G-12th Standard செயல்பட்டு வருகிறது.

பாரதி மகளிர் கல்லூரி – தச்சூர் – கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி – சின்னசேலம் – தியாகதுருகம் – சங்கராபுரம் ஆகிய வட்டாரங்களில் உள்ள 12ஆம் வகுப்புப் பயின்ற நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களின் தேவைக்கேற்ப, பாரதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி 1996–97 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி மாணவியர் எளிதாக வந்து கல்வி கற்கப் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டு அனைவருக்கும் கல்வி என்ற நல்ல எண்ணத்தோடு இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது.

அதன் பிறகு, கீழ்க்காணும் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும், சான்றோர்களும் போற்றிப் பாராட்டும் வகையில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

* பாரதி உயர்நிலைப்பள்ளி – பங்காரம்

* பாரதி நர்சரி மற்றும் மழலையர் பள்ளி, பாரதி பாலமந்திர் மழலையர் பள்ளி – சின்ன சேலம்

* பாரதி கல்வியியல் கல்லூரி – சின்னசேலம்

* பாரதி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி – சின்னசேலம்

* பாரதி ஆக்ஸாலிஸ் இன்டர்நேசனல் பள்ளி – தச்சூர்

* ஸ்ரீ பாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி – தச்சூர், கள்ளக்குறிச்சி

* பாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி – வடக்கநந்தல்

கிராமப்புற மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்கும் இலட்சியத்துடன் தொடங்கப்பட்டுள்ள பாரதி கல்வி நிறுவனங்கள் தற்போது மிகவும் சிறப்புடன் நடைபெறுவதற்கு திருமதி லட்சுமி அவர்களின் அயரா உழைப்பு, வியத்தகு தகுதி மற்றும் திறமை, சிறந்த நிர்வாகத் திறன், சாதிக்க வேண்டும் எனும் லட்சியம், தொலை நோக்குப் பார்வை முதலானவை முக்கியக் காரணங்களாக உள்ளன.

கணவர் திரு. கந்தசாமி அவர்களின் உறுதுணை மற்றும் ஒத்துழைப்போடு, கல்வித்துறையில் சாதனை புரிந்துள்ளதோடு, கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றத்திற்குத் தரமான கல்வியளிப்பதன் வாயிலாகப் பெரும் பங்காற்றி, கொங்குச் சமுதாயத்தின் மிகச் சிறந்த பெண் கல்வியாளர்களுள் ஒருவராயும், கொங்குக் குலப் பெண்டிருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாயும் உள்ள முனைவர் லட்சுமி கந்தசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘‘கொங்கு பெண் சாதனையாளர்’’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## திருமதி கீதா முத்துசாமி

கோவை, குமரன் மருத்துவமனை நிறுவனரும், 60 ஆண்டுகளுக்கும் மேலாக, மிகச் சிறப்பாக மருத்துவச் சேவை புரிந்து அண்மையில் தனது 90 ஆவது அகவையில் இயற்கை எய்தியவருமான டாக்டர் வி.பி. சுப்பையன் – திருமதி வள்ளியம்மாள் தம்பதியருக்கு மூன்றாவது மகளாக 1966 ஆம் ஆண்டு, திருமதி கீதா முத்துசாமி பிறந்தார்.

கோவையில் B.Com., இங்கிலாந்தில் NVQ Business Adminstration, ACCA I & II, PPM Prince II ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர், 1986 முதல் 1987 வரை கோவை குமரன் மருத்துவமனையில் நிர்வாகியாகவும், 1988 முதல் 1989 வரை இங்கிலாந்தில் டாக்டர் மிஸ்ரா அவர்களின் தனிச் செயலாளராகவும், 1990 முதல் 1991 வரை சவூதி ரியாத் – இல் நிர்வாக அலுவலராகவும், 1993 முதல் 1995 வரை பிரிட்டன் இதய அறக்கட்டளை அமைப்பில் உதவி அலுவலராகவும், 1996 முதல் 2016 வரை இங்கிலாந்து குடிமைப் துறையில் துணை இயக்குநர் உள்ளிட்ட பல பொறுப்புகளிலும் சிறப்பாகப் பணியாற்றியவர் ஆவார்.

இவருடைய கணவர் டாக்டர் ஆர். முத்துசாமி அவர்கள் ஒரு சிறந்த இதய நோய் நிபுணர் ஆவார். ரோத்தர்ஹாம் பொது மருத்துவமனையில் மருத்துவ ஆலோசகராய்ப் பணிபுரிந்தவர். திருமதி கீதா முத்துசாமி தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி, வியத்தகு திறமை, ஆழ்ந்த அறிவு முதலான பண்புகளை ஒருங்கே கொண்டவர். இதனாலேயே இங்கிலாந்து குடிமைப் துறையில் உதவியாளராய்ப் பணியைத் தொடங்கி, தனது மிகச் சிறப்பான செயலாற்றலால், படிப்படியாய், பணி உயர்வுகள் பெற்றுச் சாதனை படைத்தார்.

இவருடைய பணிக் காலத்தில் இங்கிலாந்து குடியேற்றத் துறை, சுகாதாரத் துறை, பணியாளர் மற்றும் ஒய்வூதியர் நலத் துறை முதலானவற்றில் பல திட்ட அறிக்கைகளைத் தயாரித்து, அரசு ஒப்புதலுடன் அவற்றை நிறைவேற்றிய பெருமைக்குரியவர் இவர்.

குடியேற்றத் துறையில் 800 மில்லியன் பவுண்டு வசூலிக்கப்பட்டதில் இவருடைய முயற்சியும், திட்டமிடுதலும், செயலாற்றலும் பெரும் பங்காற்றின. இதனால் இவருக்குப் பாராட்டுகள் குவிந்தன.

தற்போது சென்னை, அண்ணா நகரில் வசித்து வருகின்றார். சமூக சேவையிலும், சமுதாயப் பணியிலும் மிக்க ஈடுபாடு கொண்டுள்ளவர் இவர். கொங்குச் சமுதாயப் பெண்கள் நமது நாட்டில் மட்டுமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தமது உழைப்பு, திறமை. அறிவு முதலானவற்றை மூலதனமாகக் கொண்டு பல துறைகளிலும் சாதனை படைக்க முடியும் என்பதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றார் இவர்.

கோவையில் பிறந்து வளர்ந்து, பி.காம். முடித்துவிட்டு இங்கிலாந்து சென்று அரசுக் குடிமைத் துறையில் சேர்ந்து மிகச் சிறப்பாய்ப் பணியாற்றிச் சாதனை புரிந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திருமதி கீதா முத்துசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. ஏ.கே. ரத்தினம்

பொள்ளாச்சி வட்டம், ஏ.நாகூரை அடுத்துள்ள அவள்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.கே.கந்தசாமி அவர்களுக்கு 1948 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு. ஏ.கே. ரத்தினம்.

இவர் ஒரு தீவிர விவசாயி. தென்னை மரங்கள் வளர்ப்பிலும், சாகுபடியிலும் பொள்ளாச்சிப் பகுதியில் சாதனை படைத்தவர். தென்னை மரத்திலிருந்து தரமான, சுவையான இளநீர், தேங்காய் ஆகியன உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், தென்னை மட்டையிலிருந்து நார், கயிறு ஆகியவற்றைவும் தயாரித்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயன்படுத்திட அனுப்பி வைக்கிறார்.


சிவசக்தி ஃபைபர் புராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ், கோகுல கிருஷ்ணா காயிர் எக்ஸ்போர்ட்ஸ், கோகுல் காயிர் எக்ஸ்போர்ட்ஸ், நந்தா காயில் எக்ஸ்போர்ட்ஸ், கோகுலம் காயில் எக்ஸ்போர்ட்ஸ், ஏழுமலையான் ஃபைபர் புராடக்ட்ஸ், ஸ்ரீ செந்தில் குமரன் காயிர் புராடக்ட் கோ ஆகிய நிறுவனங்களைத் தொடங்கித் திறம்பட நடத்தி வருகிறார். கோ. கோ பீயட், தென்னை நார் முதலியன இவர் ஏற்றுமதி செய்யும் பொருள்களில் குறிப்பிடத்தக்கவை. 77 பேர் இவருடைய நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். ஆண்டுக்கு ரூபாய் ஐந்து கோடி அளவுக்கு இவர் வர்த்தகம் செய்து வருகிறார்.

அணைக்கட்டு நீர் பயன்படுத்துவோர் நலச் சங்கத் தலைவர், கோவை–திருப்பூர் மாவட்ட இளநீர் உற்பத்தியாளர் சங்கத் தலைவர், பொள்ளாச்சி இன்ஸ்ட்டிடூட் ஆஃப்

என்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி தலைவர், பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லூரித் தலைவர், கோவை மாவட்டத் தென்னை நார் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் மற்றும் கௌரவ ஆலோசகர் முதலான பொறுப்புகளையேற்றுச் சிறப்புடன் செயலாற்றி வருகின்றார்.

தென்னை மரங்களை வளர்த்து, தேங்காய் உற்பத்தியில் சாதனை புரிந்துள்ளதோடு தென்னை நார், கயிறு போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, சிறந்த விவசாயியாகத் திகழ்கின்ற திரு. ஏ. கே. ரத்தினம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் சஞ்சய் என். காந்தி


சென்னை, மூத்த வழக்கறிஞர் கொங்கு மாமணி திரு. ஆர். காந்தி – திருமதி விசாலாட்சி காந்தி ஆகியோர் பேரனும், திரு. ஆர். ஜி. நரேந்திரன் – திருமதி கவிதா நரேந்திரன் ஆகியோரின் புதல்வனுமான செல்வன் ந. சஞ்சய் காந்தி தற்போது சென்னை, School of Excellence in Law கல்லூரியில் சட்டப்படிப்புப் படித்து வருகிறார்.

கடந்த பல ஆண்டுகளாகப் படகு செலுத்துதலில் தீவிரப் பயிற்சி பெற்று வருகிறார். மூன்று தேசிய, ஐந்து பன்னாட்டு அமைப்புகள் மற்றும் பல சங்கங்கள், பள்ளிகள், கல்லூரிகள் நடத்திய படகுப் போட்டிகளில் இவர் கலந்து கொண்டுள்ளார். பள்ளியின் சார்பிலும், பல்கலைக்கழகத்தின் சார்பிலும் பல போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்.

Sub-Junior Nationals - போட்டியில் தங்கப் பதக்கமும், சென்னை–கொழும்பு இடையே கொழும்புவில் நடைபெற்ற பன்னாட்டுப் படகுப் போட்டியில் தங்கப் பதக்கமும், அகில இந்திய பள்ளிகளுக்கிடையேயான Championship போட்டியில் தங்கப் பதக்கமும், பள்ளிகள், கல்லூரிகள், பல சங்கங்கள் ஆகியவற்றிற்கு இடையே நடைபெற்ற படகுப் போட்டிகளில் வெற்றி பெற்று எண்ணற்ற பதக்கங்களையும் கோப்பைகளையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். படகுச் சவாரி மட்டுமின்றி, படிப்பிலும், காந்தி தாத்தாவைப்போல வாதத் திறமையிலும் சிறந்து விளங்குகிறார்.

படகுப் போட்டிகளில் கலந்து கொண்டு கொங்குச் சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும், படித்த / படிக்கும் பள்ளி, கல்லூரிகளுக்கும், குடும்பத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பதக்கங்கள் பல பெற்றுச் சாதனை படைத்துள்ள செல்வன் ந. சஞ்சய் காந்திக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது. இவர் மேலும் பல வெற்றிகளும் விருதுகளும் பெற்றிடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி ஆர்த்தி நிதி

அமெரிக்க நாட்டில் தற்போது 25 இலட்சம் இந்தியர்கள் உள்ளதாகவும், அவர்களுள் ஆந்திர மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டிலிருந்து அந்நாட்டிற்குச் சென்று பணிபுரிபவர்கள்தான் அதிகம் என ஓர் அறிக்கை கூறுகிறது. அதிலும், கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகளவில் உள்ளனர் என்பது வியக்க வைக்கும் செய்தியாகும். இச்செய்தி கொங்கு வேளாளர்களின் அறிவாற்றலையும், திறமையையும், கடின உழைப்பையும் காட்டுவதாய் உள்ளது.

அவ்வாறு அமெரிக்காவில் பணியாற்றி வருகின்ற திரு. கருணாநிதி – திருமதி சாந்தநிதி கருணாநிதி தம்பதியரின் மகள்தான் செல்வி ஆர்த்தி நிதி. இவருடைய சாதனை யாரையும் வியக்க வைக்கும். பளு தூக்குதல் போட்டியில் மிகச் சிறந்து விளங்கும் இவர், உலக அளவிலான பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் அமெரிக்க நாட்டின் குழுவில் இடம் பெற்றுப் பெரும் சாதனை புரிந்துள்ளார்.

அண்மையில் அமெரிக்க, அட்லாண்டாவில் தேசிய அளவில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்று, அமெரிக்க நாட்டுப் பளு தூக்கும் குழுவில் இடம் பிடித்துள்ளார். நியூ ஜெர்சி பள்ளத்தாக்கு உயர்நிலைப் பள்ளி இறுதி ஆண்டு படிக்கும் போதே இந்தத் துறையில் தீவிரப் பயிற்சி பெறத் தொடங்கினார். தற்போது கல்லூரி மாணவியாக உள்ளார்.


பளு தூக்குதலில் அளவற்ற ஆர்வம், கடுமையான உழைப்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, தக்க பயிற்சி, உடலைக் சீராகவும் தகுதியாகவும் வைத்துக் கொள்ளும் உத்தி, குடும்பம், நண்பர்கள், சுற்றத்தினர் முதலானோர் கொடுத்த உற்சாகம் முதலானவையே இவருடைய வெற்றிக்கும் சாதனைக்கும் அடிப்படைக் காரணங்களாக விளங்கின என்றால் அது மிகையன்று. பெலாரஸ் நாட்டில் நடைபெறவிருக்கும் உலக அளவிலான பளு தூக்கும் போட்டியில் அமெரிக்கா சார்பாக விரைவில் கலந்து கொள்ள, தற்போது தீவிரப் பயிற்சி பெற்று வருகிறார்.

அமெரிக்க நாட்டில் பளு தூக்கும் போட்டியில் வெற்றி பெற்று, அமெரிக்கா சார்பாகப் பன்னாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள செல்வி ஆர்த்தி நிதிக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பெருமை கொள்கிறது.

பெண்கள் பளு தூக்கும் போட்டியில் பள்ளி அளவில், கல்லூரி அளவில், மாகாண அளவில் உள்ள ‘குழுக்களில் இடம்’ பெற்றிருந்தாலே சாதனையாகக் கருதப்படுகிறது. ஆனால் நாட்டுக்காக உலக அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கும் குழுவில், அதுவும் கடினப் போட்டிகள் நிறைந்த அமெரிக்க நாட்டில் இடம் பெற்றிருப்பது மிகப்பெரிய சாதனை என்றால் அது சற்றும் மிகையன்று.

உலகப் போட்டியிலும், இனிப் பங்கேற்கும் போட்டிகளிலும் வெற்றி பெற்றுச் சாதனைகள் பல புரிந்திடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் சி. பிரதீப் கிருஷ்ணா

ஈரோடு நகரைச் சேர்ந்தவரும், SKM Animal Feeds and Foods India Private Limited நிறுவனத்தின் தலைவருமான ஈரோடு டாக்டர் எஸ்.கே.எம். சந்திரசேகர் – திருமதி சர்மினி சந்திரசேகர் தம்பதியரின் புதல்வன், செல்வன் பிரதீப் கிருஷ்ணா.

ஏற்காடு மான்ட்போர்ட் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் படித்து, 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற 12 ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் 1200 க்கு 1170 மதிப்பெண்கள் பெற்றுப் பள்ளியிலேயே முதலாவது மாணவராய்ப் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மாநில அளவில் நடைபெற்ற கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் மூன்று முறை கலந்து கொண்ட சிறப்புக்குரியர் இவர். 2015 – 2016 ஆம் ஆண்டு மான்ட்போர்ட் பள்ளியின் Interact Club – தலைவராய்ப் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டார். 2016–2017 ஆம் ஆண்டு மான்ட்போர்ட் ஹவுஸ் தலைவராய்த் தேர்வு பெற்றுப் பலரும் பாராட்டும் வண்ணம் பணிபுரிந்தார்.

சிறந்த கூடைப்பந்து வீரர், பள்ளி இறுதித் தோர்வில் முதலிடம், பள்ளியின் சிறப்பு மிக்க அமைப்புகளில் தலைமைப் பொறுப்பு எனப் பன்முகத் தன்மை கொண்டு சாதனை புரிந்து, பள்ளிக்கும், குடும்பத்திற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்து வரும் செல்வன் சி.பிரதீப் கிருஷ்ணாவிற்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

இவர் உயர் கல்வியிலும், கூடைப்பந்து விளையாட்டிலும் மேலும் பல சாதனைகள் புரிந்திடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி நியந்த்ரா கார்த்திக்

இந்திய அளவில் லாரி போக்குவரத்துத் தொழிலில் சாதனைகள் பல புரிந்தவரும், NSIT மற்றும் MGM நிறுவனங்களின் தலைவருமான, கொங்கு மாமணி டாக்டர் எம். முருகேசன் – திருமதி தனலட்சுமி மற்றும் தெய்வத்திரு. K ராஜேந்திரன் – 'அமர்ஜோதி' திருமதி நிர்மலா தேவி ஆகியோர் பேத்தியும், இளம் தொழிலதிபர் திரு. M கார்த்திக் (Proprietor, MMK Logistics) - திருமதி மாளவிகா கார்த்திக் ஆகியோர் மகளுமான செல்வி நியந்த்ரா கார்த்திக் குதிரையேற்றத்தில் தனது வியத்தகு திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

மிருகங்களிடம் மிகுந்த அன்பினை இயற்கையிலேயே பெற்றுள்ள இவர் குதிரையேற்றம் பயின்றது மிகவும் பொருந்தமானதே ஆகும்.

கொள்ளுத் தாத்தா தெய்வத்திரு. K குப்புசாமி கவுண்டர் (Rtd IG of Police), குதிரையேற்றத்தில் மிகுந்த ஆர்வமும், பயிற்சியும் கொண்டிருந்த இவரது தாத்தா தெய்வத்திரு. K ராஜேந்திரன் ஆகியோர் ஆசியும், அருளும் செல்வி நியந்த்ராவிற்குக் கிடைத்த செல்வமாகும்.

2014 ஆம் ஆண்டில் The International Dressage Development League வழங்கிய "The Certificate of excellence" விருதும், பாண்டிச்சேரி, சென்னை, பெங்களூரு ஆகிய நகரங்களில் நடைபெற்ற போட்டியில் 2015 ஆம் ஆண்டு நற்சான்றிதழும், 2015 இல் நாடு தழுவிய அளவில் நடைபெற்ற போட்டியில் வெண்கலப் பதக்கமும், "Grand Champion" போட்டியில் நாடு தழுவிய அளவில் வெண்கலப் பதக்கமும் பெற்றுச் சாதனை படைத்தார்.


Intro Dressage 2017இல் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். Bountiful Talent என்ற பந்தயக் குதிரையை சிறப்புடன் ஓட்டுவித்து இவர் நற்சான்றிதழ்களும், தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களும் இவரது சாதனையைப் பறைசாற்றுகின்றன.

அண்மையில் சன் தொலைக்காட்சியில் செல்வி நியந்த்ராவின் குதிரையேற்றம் மற்றும் சாதனை குறித்து ஒரு குறும்படம் திரையிடப்பட்டது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மைலாப்பூர் வித்யா மந்திர் பள்ளியில் 8 ஆம் வகுப்புப் படித்து வரும் இவர், படிப்பிலும் முதன்மையிடத்தில் இருக்கிறாார். தமிழில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பது தனிச் சிறப்பு.

குதிரையேற்றத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுப் பல பரிசுகளும், பதக்கங்களும் பெற்றுத் தன் குடும்பத்திற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி நியந்த்ராவிற்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கி மகிழ்கிறது. இத்துறையில் இவர் மேலும் பல சிறப்புகளும் பரிசுகளும் பெற்றிடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் பி. எல். ஹிர்த்திக் யாஷ்

சேலத்தில் எமரால்ட் வேலீ பப்ளிக் ஸ்கூல் என்னும் பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்துவரும் மாணவன், செல்வன் பி.எல். ஹிர்த்திக் யாஷ். கத்தார் நாட்டில் பணிபுரிந்து வரும் திரு.டி. பிரகாஷ் – திருமதி லாவண்யா பிரகாஷ் தம்பதியரின் புதல்வன் இவர்.

ஸ்கேட்டிங் விளையாட்டில் மிகவும் திறமை வாய்ந்துள்ள இவர், படிப்பிலும் சிறந்து விளங்குகிறார். சென்னை, திருப்பதி, சேலம், உஜ்ஜைன் முதலான நகரங்களில் நடைபெற்ற ஸ்கேட்டிங் போட்டிகள் பலவற்றில் பங்கேற்று நிறையப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் பெற்றுள்ளார்.

இந்திய அளவில் திருப்பதியில் நடைபெற்ற CBSE பள்ளி மாணவர்களுக்கான ஸ்கேட்டிங் போட்டியில் மூன்றாம் இடமும், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ரோலர் ஸ்கேட்டிங் சேம்ப்பியன்ஷிப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு உஜ்ஜைனில் (மத்திய பிரதேஷ்) மாணவர் ஒலிம்பிக் சங்கத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் மூன்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பள்ளியில் 2016–17 ஆம் ஆண்டு சிறந்த விளையாட்டு வீரர் விருதும், 2014–15, 2015–16 ஆம் ஆண்டுகளில் படிப்பில் மிகச் சிறந்து விளங்கியமைக்காக 'Dazzling Diamond' எனும் பட்டமும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவருடைய 8 வயது சகோதரி செல்வி பி. ருத்வா–வும் வளரும் நட்சத்திரமாக உள்ளார்.

ஸ்கேட்டிங் விளையாட்டு, படிப்பு ஆகிய இரண்டிலும் சிறந்து விளங்கிச் சாதனை படைத்துள்ள செல்வன் பி.எல். ஹிர்த்திக் யாஷ்–ஐ சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. படிப்பிலும், ஸ்கேட்டிங் விளையாட்டிலும் மேலும் சாதனைகள் புரியவும் சங்கம் வாழ்த்துகிறது.

## 2017 ஆம் ஆண்டு 10-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே. வர்ஷா |
| த/பெ | : | கே. குமார் |
| ஊர் | : | காந்திபுரம் கோட்டை, நாமக்கல் |
| பள்ளி | : | குறிஞ்சி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி |
| மதிப்பெண் | : | **497/500** |

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | அனு ஆர்த்தி |
| த/பெ | : | சி. பூபதி |
| ஊர் | : | வடக்கு இராமலிங்கபுரம், சென்னிமலை |
| மதிப்பெண் | : | **497/500** |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | சு. ஜோதிகா |
| த/பெ | : | செ. சுப்பிரமணியம் |
| ஊர் | : | சங்ககிரி, சேலம் |
| பள்ளி | : | கே ஆர் பி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **496/500** |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே. எஸ். சரண் விஷால் |
| த/பெ | : | பி.வி. சரவணன் |
| ஊர் | : | திருச்செங்கோடு, நாமக்கல் |
| பள்ளி | : | எஸ்.கே.வி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **496/500** |

# 2017 ஆம் ஆண்டு 10-ஆம் வகுப்பு
# அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## மூன்றாவது இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | அ. சந்தியா |
| த/பெ | : | க. அங்கமுத்து |
| ஊர் | : | பழனி, திண்டுக்கல் |
| பள்ளி | : | பொன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. |
| மதிப்பெண் | : | 495/500 |

## மூன்றாவது இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | சா. காவிய நிலா |
| த/பெ | : | க. சாமிநாதன் |
| ஊர் | : | பென்னாகரம் ரோடு, தர்மபுரி |
| பள்ளி | : | ஸ்ரீ விஜய் வித்யாலயா (ஆ) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி |
| மதிப்பெண் | : | 495/500 |

# 2017 ஆம் ஆண்டு 12-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | எம். ரிஷி |
| த/பெ | : | டாக்டர். கே. பழனிசாமி மாரப்பன் |
| ஊர் | : | பரமத்தி வேலூர், நாமக்கல் |
| பள்ளி | : | மலர் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **1188/1200** |

## இரண்டாவது இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பி.எஸ். தர்ஷனா |
| த/பெ | : | பி. சிவகுமார் |
| ஊர் | : | தொண்டிகரடு, திருச்செங்கோடு |
| பள்ளி | : | பாரதி வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி |
| மதிப்பெண் | : | **1186/1200** |

## மூன்றாவது இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | சா. பொதிகை வேந்தன் |
| த/பெ | : | க. சாமிநாதன் |
| ஊர் | : | பென்னாகரம் ரோடு, தர்மபுரி |
| பள்ளி | : | ஸ்ரீ விஜய் வித்யாலயா (ஆ) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி |
| மதிப்பெண் | : | **1182/1200** |

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

09.07.2017 அன்று நடைபெற்ற 2017 ஆம் ஆண்டு

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Running Race<br>LKG & UKG (Boys) 50 Metres | I சி. சுதீர்<br>II வி. ஹரிசங்கர்<br>III எம். ஆதித்யா<br>IV எஸ். விக்னேஷ்வர் |
| 2 | Running Race<br>I & II Std. (Boys) 50 Metres | I இ. லிங்கேஷ்<br>II வி. ஜீவிகா<br>III டி. அக்ஷன்யா |
| 3 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I ஆ. அரீஷ்<br>II கே. கங்கேஷ்<br>III எஸ். அபிநவ் |
| 4 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I ஆர். சர்வேஷ்<br>II ச. சபரீஷ்<br>III டி. பவிஸ் |
| 5 | Running Race<br>100 Metres (Boys)<br>VII & VIII Std. | I ஆர். அனுர்த்தன்<br>II எஸ். சுதன்<br>III கே. தீபன் |
| 6 | Running Race<br>100 Metres (Boys)<br>IX & X Std. | I பி. பவித்ரன்<br>II என். சஞ்சீவ் நித்ய பிரகாஷ்<br>III வி.கே. தசின் |
| 7 | Running Race<br>400 Metres (Men)<br>21 to 30 Years | I எம். பிரபு<br>II எம். கோகுல்<br>III சி. பூபதி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 8 | Running Race<br>200 Metres (Men)<br>31 to 40 Years | I கே. இளவரசன்<br>II அ. சுரேஷ் குமார்<br>III எஸ். கேசவன் |
| 9 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 Years | I எல். அருண் ராஜா<br>II கே. பழனிசாமி<br>III கே. பச்சையப்பன் |
| 10 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 Years | I எம். விசா சண்முகம்<br>II சி. பழனிசாமி<br>III எம். ராமசாமி |
| 11 | Running Race<br>100 Metres (Men)<br>60 - 70 Years | I டாக்டர். எஸ் ராஜாமணி<br>II பழனியாண்டி<br>III எஸ்.ஆர். ராஜேந்திரன் |
| 12 | Running Race<br>100 Metres (Men)<br>70 and above | I எம்.என். சின்னசாமி<br>II அம்மையப்பன்<br>III எஸ்.என். கோவிந்தன் |
| 13 | Ball Throw (Boys)<br>III to IV Std | I கங்கேஷ்<br>II அரீஷ்<br>III தருண் |
| 14 | Ball Throw (Boys)<br>V to VI Std | I சர்வேஷ்<br>II சபரீஷ்<br>III பவிஷ் |
| 15 | Ball Throw (Boys)<br>VIII Std | I சன்ஜேய்<br>II கே. திலிப்பன் |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 16 | Ball Throw (Boys)<br>IX to X Std | I சன்ஜய்<br>II பவித்ரன்<br>III வர்ஷன் |
| 17 | Shotput (Boys) 9th Std | I சன்ஜய் |
| 18 | Shotput (Men)<br>21 - 30 Years | I சந்தோஷ்<br>II குமரேசன்<br>III எம். ஸ்ரீதர் |
| 19 | Shotput (Men)<br>31 - 40 Years | I கே. தங்கவேல்<br>II பி. கய்லாசம்<br>III சென்னை கிருஷ்ணன் |
| 20 | Shotput (Men)<br>41 - 50 Years | I இசை பாலு<br>II எஸ். ரவிகுமார்<br>III கே.பச்சையப்பன் |
| 21 | Shotput (Men)<br>51 - 60 Years | I கே.பி. சுப்பிரமணியன்<br>II கே.சி. பழனிசாமி<br>III எம்.ராமசாமி |
| 22 | Running Race<br>50 Metres (Girls)<br>III - IV Std | I சு. காவியா<br>II பி. மோனிகா<br>III சி. நந்திதாஸ்ரீ |
| 23 | Running Race<br>75 Metres (Girls)<br>V - VI Std | I எம். தன்யா<br>II அ. தன்வி<br>III கே. லக்ஷிகா |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| **24** | Running Race (Girls)<br>VII - VIII Std | I எம். அனுஷா<br>II சி. நந்தனா<br>III ஆர். மதுமிதா |
| **25** | Running Race (Girls)<br>IX - X Std | I ஆர். அக்ஷயா<br>II ஆர். கார்த்திகா<br>III ஆர். வைஷ்ணவி |
| **26** | Running Race (Girls)I<br>16 - 20 Years | I பி. காவியா<br>II டி. மதுமிதா<br>III ஆர். நிமித்தா |
| **27** | Running Race (Ladies)<br>21 - 30 Years | I ஆர். கிருத்திகா ராஜன்<br>II இந்திரா காந்தி<br>III சரண்யா கோபால் |
| **28** | Running Race (Ladies)<br>31 - 40 Years | I பி. விகாஷினி<br>II பி. சுசிலா<br>III எல். ஷாலினி |
| **29** | Running Race (Ladies)<br>41 - 50 Years | I எஸ். சாவித்திரி<br>II கே. சரஸ்வதி<br>III சி. சரஸ்வதி |
| **30** | Running Race (Ladies)<br>51 - 60 Years | I கே. ஜெயமணி<br>II எம். விஜயலட்சுமி<br>III ஏ. சோலயம்மாள் |
| 31 | Running Race (Ladies)<br>61 and above | I ஆர். தமயந்தி<br>II ஜி. சரஸ்வதி<br>III ஏ. பார்வதி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 32 | Ball Throw (Girls)<br>III to IV Std | I எஸ். நந்திதாஸ்ரீ<br>II எஸ். காவியாஸ்ரீ<br>III மதுமிதா |
| 33 | Ball Throw (Girls)<br>V to VI Std | I எல். அரினி<br>II எம். தன்யா<br>III அ.தன்வி |
| 34 | Ball Throw (Girls)<br>VII to VIII Std | I நந்தனா<br>II அனுஷா<br>III பிரித்திவிகா |
| 35 | Ball Throw (Girls)<br>IX to X Std | I அக்ஷயா<br>II கார்த்திகா<br>III வைஷ்ணவி |
| 36 | Ball Throw (Girls)<br>16 - 20 Girls | I பி. காவியா<br>II சி. நந்தினி<br>III டி. மதுமிதா |
| 37 | Ball Throw (Ladies)<br>21 - 30 Girls | I கிரித்திகா ராஜாமணி<br>II கே. பிரியதர்ஷினி<br>III எம். மேனகா |
| 38 | Ball Throw (Ladies)<br>31 - 40 Girls | I இ. சங்கீதா<br>II எஸ். ரஞ்ஜினி<br>III கே. வாசுகி |
| 39 | Ball Throw (Ladies)<br>41 - 50 Girls | I எஸ். சாவித்திரி<br>II கே. சரஸ்வதி<br>III சி. சரஸ்வதி |
| 40 | Ball Throw (Ladies)<br>51 - 60 Girls | I கே. ஜெயமணி<br>II பி. விஜயலட்சுமி<br>III டி. சரஸ்வதி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 41 | Ball Throw (Ladies)<br>61 & Above | I தமையேந்தி<br>II பழனியம்மாள்<br>III ஜி. சரஸ்வதி |
| 42 | Lucky Corner | I அ. உமா மகேஸ்வரி<br>II ரம்யா<br>III ஜமுனா |
| 43 | Tambola / House - House Game | I கே. ஜெயமணி<br>I சபரீஷ்<br>II லக்ஷிகா<br>II கிரித்திகா<br>II விஜய்<br>III எஸ். நந்தனா |

# கயிறு இழுக்கும் போட்டி

| வ. எண். | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
|---|---|---|
| 1 | சி. சென்ன கிருஷ்ணன் | எஸ்.கே. முத்துமணி |
| 2 | கே. தங்கவேல் | பி. சின்னசாமி |
| 3 | ஏ. சுரேஷ் | பி. சிவசாமி |
| 4 | கே.பி. சுப்பிரமணியம் | கே. ராசப்பன் |
| 5 | ஜெ.ஜி. அருண்ராஜா | ஆர். ஸ்ரீனிவாசபிரபு |
| 6 | ஈ. குமரேசன் | வி. செந்தில் குமார் |
| 7 | வி. அசோக்குமார் | வி. சுப்பிரமணியன் |
| 8 | கே. பழனிசாமி | பழனியாண்டி |
| 9 | எஸ்.என். குழந்தன் | எம்.செல்வக்குமாரசாமி |
| 10 | முத்துகிருஷ்ணன் | கே.சி. பழனிசாமி |
| 11 | எம். ராமசாமி | வீ.க.செல்வக்குமார் |
| 12 | கோபால கிருஷ்ணன் | பி. வீரப்பன் |
| 13 | ஸ்ரீதர் | கிருஷ்ணமூர்த்தி |

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

09.07.2017 அன்று வெஸ்லி பள்ளி மைதானத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டி | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | கட்டுரைப்போட்டி | |
| 1 | ஐந்தாம் வகுப்பு வரை | I கே.பி. கங்கேஷ்<br>II ப. மோனிகா<br>III ஜி.ஏ. நக்ஷத்திரா |
| | கவிதைப்போட்டி | |
| 2 | ஐந்தாம் வகுப்பு வரை | I ப. மோனிகா<br>II கே.பி. கங்கேஷ் |
| 3 | 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை | I ஸ்ரீ அபிதா செந்தில் குமார்<br>II அ.தன்வி<br>III எஸ்.பி. விஜயராஜகோபாலன் |
| 4 | கல்லூரி மாணவர்கள் | I எஸ். சிவராகவ் |
| | பாட்டுப்போட்டி | |
| 5 | PRE KG, LKG, UKG | I கே.எம். ஜியா<br>II ஆர். ருக்ஷனா<br>III ஜி. ஸ்ருதி |
| 6 | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | I என். கே. ஹேமவர்ஷினி<br>II என்.கே. ஹரீஷ்<br>III பி. மோனிகா<br>III ஆர். லக்ஷிகா |
| 7 | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை | I ஜி.ஏ. நக்ஷத்திரா<br>II ஆர். கார்த்திகா<br>III பி. ஸ்ரீராம் |

| வ. எண். | போட்டி | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 8 | பேச்சுப்போட்டி | I அ. தன்வி<br>I கே. பி. கங்கேஷ்<br>II ஜி.ஏ. நக்ஷத்திரா<br>III ஆர். வைஷ்ணவி |
| 9 | மாறுவேடப் போட்டி | I ஜி. ஸ்ருதி<br>I கங்கேஷ்<br>II கே.எம். ஜியா<br>II மகிழன் சின்னசாமி<br>III ரித்திகா<br>III இனியன் சின்னசாமி<br>III காவியஸ்ரீ |
| | ஓவியப்போட்டி | |
| 10 | 3 வயது | I கே.எம். ஜியா |
| 11 | LKG & UKG | I மஹாஸ்ரீ<br>II சுதீர்<br>III ருக்ஷனா |
| 12 | 1st & 2nd Std | I மகிழன் சின்னசாமி<br>II அக்ஷன்யா<br>III கே. கவினயா<br>III எஸ். கவினேஷ் |
| 13 | 3rd, 4th & 5th Std | I எஸ். அபிநவ்<br>II டி. மதுமிதா<br>III பி. மோனிகா<br>III என்.கே. அரீஷ் |
| 14 | 6th & 7th Std | I நக்ஷத்திரா<br>II சி.எஸ். ஸ்ருதி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 15 | 8th & 11th Std | II கே.பி. ஸ்ரீராம்<br>II ஆர். கார்திகா<br>III ஸ்ரீரஞ்ஜனி<br>III கே. திலிபன் |
| 16 | கல்லூரி மாணவி | I நிமிதா |
| 17 | கோலப்போட்டி | I நிமிதா<br>II பாரதி காளீஸ்வரன்<br>III காவ்யா |
| 18 | நடனப்போட்டி | I ஜி.ஏ. நிகிதா<br>II டி. மதுமிதா<br>III கவிநயா<br>III அனன்யா |
| 19 | சிலம்பாட்டம் | I அக்ஷயா<br>II கே.பி. கங்கேஷ்<br>III அக்ஷரா |



# உழவே தலை



உழவு நம் நாட்டின் சிறந்த கலை

மதிப்பிடவே முடியாத ஒரு விலை

மனிதனை வாழவைக்கின்ற ஒரு கருவி

நீ பாசக்கயிற்றினால் இழுக்கின்ற ஓர் அருவி

நீ எல்லாத் துறைகளுக்கும் உரிய உதவிக் கரம்

உன்னிலே வாழ்வதற்கு வேண்டும் எனக்கு ஒரு வரம்

நீயின்றி இவ்வுலகில் அனைத்தும் குறை.........

உன்போல் எவற்றுக்கும் இல்லை வலிமை

அந்த வலிமையிலே உழவருக்கு ஓர் இனிமை

உன்னால் பலர் வாழ்க !

நீ பல்லாண்டு வாழ்க !

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி. ஸ்ரீ அபிதா செந்தில் குமார் |
| தந்தை பெயர் | : | செந்தில் குமார் |
| பள்ளி | : | ஆனந்த் ஜெயின் வித்யாலயா |
| வகுப்பு | : | 12ம் வகுப்பு |

# உழவே தலை



உழவர் நமக்கு இறை !
உழவே நம் மண்ணின் தலை !
வேளாண்மை நமது உயிர் !
உழவர் இல்லையேல் நமக்கு உணவில்லை !

வெளிச்சம் வந்தால்
பூக்கள் மலரும் !
விண்ணில் மழை பொழிந்தால்
உழவர் மனம் மகிழும் !

அல்லும் பகலும் உழைத்து
அன்னமிடும் தாய் உள்ளம் !
நம் உழவர்
அனைத்துத் தெய்வங்களுக்கும் சமம் !
உழவரைப் போற்றுவோம்......
நம் கொங்கின் முதன்மைத் தொழில் உழவென
உவகை கொள்வோம் !


பெயர் : அ. தன்வி
தந்தை பெயர் : எம். அமராபதி
பள்ளி : பத்ம ஷேஷாத்ரி
வகுப்பு : ஆறாம் வகுப்பு


# உழவே தலை



ஒவ்வொரு நாள் விடியலிலும் ஆனந்தத்தில்
ஏர் பிடித்தது அன்று !
வானம் என்னவோ மும்மாரி மழை பெய்து
உழவன் அறுவடை செய்தது அன்று !
காலம் மாறியது காத்து இருக்கிறான் மழை
நீருக்காக இன்று !
மழை நீர் என ஒன்று இருப்பது உழவனுக்கு
மறந்தே போய்விட்டது இன்று !
மேகங்கள் கூடினால் மழை வரும் என அன்னாந்து
பார்த்தது அன்று !
கூடிய மேகங்கள் மனிதனைப் போல வேற்றுமையைக்
கற்று கொண்டு விட்டனவோ இன்று !
இந்த நிலை நீடித்தால் பிளாஸ்டிக் அரிசி உண்டு
வாழவேண்டும் என அஞ்சுகிறாய் இன்று !
விளைநிலங்களை வீடுகளாக்கிவிட்டு உணவில்லாமல் தவிக்கப் போகும்
அடுத்த தலைமுறை எண்ணி உழவனின் மனம் கலங்குவது இன்று !
நிர்க்கதியாக நிற்கும் விவசாயத்தைப் பற்றியும்
உழவு தொழிலைப் பற்றியும் எடுத்துரைப்போம் இன்று !


பெயர் : ப. மோனிகா
தந்தை பெயர் : பரமேஸ்வரன்
பள்ளி : இரவீந்தர பாரதி குளோபல் பள்ளி
வகுப்பு : நான்காம் வகுப்பு

# உழவே தலை



வானம் இப்போ பொய்த்துப் போச்சு
வயக்காடும் இப்போ காஞ்சே போச்சு!
காடு கழனி தோட்டமெல்லாம்
காங்கிரீட்டு வீடும் ஆச்சு!
தொழில் நுட்ப வளர்ச்சியால
தொலச்சுப் புட்டோம் வாழ்க்கையினை!
ஊருக் கெல்லாம் உணவளிக்கும்
விவசாயி நிலமை இப்போ!
உண்மையிலே மாறிப்போச்சு
உருக்கொலஞ்சு அழிஞ்சு போச்சு!
ஆயிரந்தான் வசதி நமக்கு
அடுக்கடுக்கா வந்த போதும்!
பசியெடுத்தா வயிறு நிறையப்
பணக்கட்டையா தின்ன முடியும்!
பூமியிலே சிறந்த தொழில்
பொன் விளையும் விவசாயம்!
புனிதமான இதைக் காக்கப்
புறப்படுவோம் தெம்போடு!
உலகெல்லாம் பசியாற
உழவுத்தொழில் சிறக்கவேணும்!
இயற்கையினைப் பாதுகாக்க
இனியாவது முடிவெடுப்போம்.....

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே.பி. கங்கேஷ் |
| தந்தை பெயர் | : | கே. காளீஸ்வரன் |
| பள்ளி | : | வேலம்மாள் வித்யாஷ்ரமம் |
| வகுப்பு | : | ஐந்தாம் வகுப்பு |

# மலச்சிக்கல்... மலைக்க வேண்டாம்!

– டாக்டர் கே.பிரேம்குமார்

“படுத்ததும் உறக்கம், எழுந்ததும் மலம் கழித்தல்... இதுவே ஆரோக்கிய வாழ்வு. ஆனால், இன்று 90% பேர் மலச்சிக்கலால் அவதிப்படுகிறார்கள். அதைச் சரிசெய்து கொள்ளக்கூடிய வாழ்க்கைமுறை மாற்றங்கள் மற்றும் சிகிச்சைகள் பற்றிப் பார்ப்போம்” என்று அது பற்றிய மருத்துவ விழிப்பு உணர்வுத் தகவல்களை விரிவாகப் பகிர்ந்தார், சென்னை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் குடல் மற்றும் இரைப்பை சிறப்பு மருத்துவர் டாக்டர் கே.பிரேம்குமார்.



மலம் வெளியேறும் முறை

உட்கொள்ளும் உணவானது இரைப்பை, முன் சிறுகுடல், சிறுகுடல் என்று பயணப்பட்டுத் தன்னிடமுள்ள சத்துகளை எல்லாம் ரத்தத்துக்குக் கொடுத்துவிட்டு, சக்கையாகப் பெருங்குடலுக்குச் செல்லும். அதில் 80% தண்ணீர் இருக்கும். இந்தத் தண்ணீரின் பெரும் பகுதியும் உறிஞ்சப்பட்டு மலத்தை வெளியேற்ற வேண்டியது பெருங்குடலின் வேலை.

இயல்பான கழிவறைப் பழக்கம் எது ?

இந்திய வாழ்க்கை முறைப்படி ஒருவர் தினமும் குறைந்தபச்சம் ஒரு தடவையாவது மலம் கழித்தாக வேண்டும். காலையில் எழுந்தவுடன் மலம் கழித்தே ஆக வேண்டும் என்கிற கட்டாயமில்லை. காலை, மாலை, இரவு என்று நேரம் வேறுபடலாம். இதுவே மேற்கத்திய நாடுகளில் ஒருவர் சராசரியாக வாரத்தில் குறைத்தது 4, 5 தடவை மலம் கழித்தாலே போதும். இந்தியர்களுக்கு ஒவ்வொரு முறையும் 200 – 250 கிராம் அளவுக்குச் சாதாரணமாக மலம் வெளியேறக் கூடும். அதுவே மேற்கத்திய நாட்டினருக்கு 100 – 200 கிராம் மலம் கழித்தாலே போதும். சிலருக்கு திடீரென ஓரிரு நாள் மலம் வெளியேறாமல் போகலாம். உணவு, வேலை, உடல்நிலை, சூழல் போன்றவை அதற்குக் காரணமாக இருக்கலாம். அச்சப்பட வேண்டியதில்லை.

மலச்சிக்கல் என்பது என்ன ?

வழக்கத்திற்கு மாறாக, மலம் வெளியேறாமல் இருப்பது, மலம் இறுகிப்போவது, மலம் கழிப்பதில் சிக்கல், வலி ஏற்படுவது, ரத்தம் வெளியேறுவது, மலம் முழுவதுமாகப் போகவில்லை என்கிற உணர்வு, மலம் வெளியேற முடியாமல் ஆசனவாயை அடைத்துக்கொள்வது... இவற்றை மருத்துவத்தில் ‘சீரற்ற மலப்பிரச்சனை’ என்கிறோம். அதுவே மலச்சிக்கல் எனப்படும். மலச்சிக்கலை ஆரம்பத்திலேயே கவனிக்காவிட்டால்

ஆசனவாயில் விரிசல் ஏற்பட்டு ரத்தக்கசிவு உண்டாகும் அஜீரணம், வாய்வுத்தொல்லை, குடலிறக்கம், குடல் அடைப்பு, நெஞ்சுவலி, மயக்கம் போன்றவை ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளுக்குச் செல்லிக்கொடுங்கள்!

குழந்தைகளுக்குத் தினமும் காலையிலோ, அவர்கள் உடல் பழக்கப்படும் வேளையிலோ மலம் கழிப்பதை வழக்கமாக்குங்கள். கழிவறை செல்லப் பயம், டாய்லெட் செல்ல வேண்டும் என்பதைச் சொல்லக் கூச்சம் என எக்காரணத்தைக் கொண்டும் மலத்தை அவர்கள் அடக்காதவாறு சூழ்நிலையை ஏற்படுத்துங்கள். அது அவர்களின் ஆரோக்கியத்துக்கு எதிரானது என்பதைப் பள்ளி நிர்வாகத்துடன் பேசிப் புரியவையுங்கள்.

காரணங்கள் :–

* கொழுப்பு நிறைந்த உணவுகள் உட்கொள்வது, உடலுக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காமல் இருப்பது, நேரத்துக்கு உணவு உட்கொள்ளாதது, காலை உணவைத் தவிர்ப்பது, மன அழுத்தம், மருத்துவ ஆலோசனையின்றித் தேவையில்லாத மற்றும் அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொள்வது.

* கொழுப்பு நிறைந்த மற்றும் பீட்ஸா, பர்கர், நூடுல்ஸ் போன்ற துரித உணவு வகைகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், பால் சார்ந்த உணவு வகைகளை அதிகம் சாப்பிடுவது, நரம்பு மண்டல பாதிப்புகள், தைராய்டு, சர்க்கரை போன்ற பிரச்சினை இருப்போர் அதனை சரிவரக் கட்டுக்குள் வைக்காமல் இருப்பது... இவை எல்லாம் மலச்சிக்கலை உண்டாக்கும்.

* பிறவியிலேயே குடல் இயக்கம் குறைவாக உள்ளவர்களும் மலக்சிக்கல் பிரச்னைக்கு ஆளாகக் கூடும். உணவுமுறை மாறுவது, உடற்பயிற்சி குறைவது, மூட்டுவலி, இடுப்புவலி உள்ளவர்கள் அடிக்கடி மலம் கழிப்பதைத் தவிர்ப்பது, நீண்ட நேரம் படுத்தே இருப்பது போன்ற காரணங்களால் மலச்சிக்கல் ஏற்படக்கூடும்.

* பெண்கள் கர்ப்ப காலத்தில் மசக்கை காரணமாகத் தண்ணீர் அதிகம் குடிக்காமல் இருப்பது, தாயின் குடலைக் கரு அழுத்துவது, ஹார்மோன் மாற்றம், ஆசனவாய் சுருங்குதல் உள்ளிட்ட பல காரணங்களால் கர்ப்பிணிகளுக்குத் தற்காலிகமாக மலச்சிக்கல் உண்டாகலாம்.

* மலம் வருகிற உணர்வு உண்டாகும்போது கழிப்பறை அருகில் இல்லாதது, முக்கிய வேலையில் ஈடுபட்டிருப்பது, பயணத்தில் இருப்பது போன்ற காரணங்களால் அதைத் தொடர்ந்து தவிர்க்கும்போது, காலப்போக்கில் பெருங்குடலில் உள்ள உணர்வு நரம்புகள் செயலிழந்து மலத்தை வெளியேற்ற வேண்டும் என்கிற உணர்வைத் தெரிவிக்காமல் போக, அதனாலும் மலச்சிக்கல் ஏற்படும்.

* காய்ச்சல், வாந்தி, பசியின்மை பிரச்னைகள் ஏற்படும்போதும், வெயிலில் அதிகம் அலையும் போதும் உடலில் நீர்ச்சத்துக் குறைந்து, மலச்சிக்கலுக்கு வழிவகுக்கும்.
* ஆசனவாய் வெடிப்பு, ஆசனவாய் சுருங்குதல், குடல் அடைப்பு, குடலில் கட்டி, பெருங்குடல் புற்று நோய், குடல் தடிப்பு நோய், சர்க்கரை நோய், தைராய்டு, குடலிறக்கம், தூக்கமின்மை போன்ற பாதிப்புகள் இருக்கும்போதும் மலச்சிக்கல் ஏற்படக்கூடும்.

இந்த அறிகுறிகள்... ஆபத்து!

* 50 வயதைக் கடந்தவர்களுக்கு மலச்சிக்கல் உண்டாவது.
* இயல்புக்கு மாறாக மூன்று வாரங்களுக்கு மேல் மலச்சிக்கல் பிரச்சினை தொடர்வது
* எடை குறைவது
* மலம் போவதில் சிக்கல் உண்டாகி அடிவயிற்றில் வலி ஏற்படுவது
* மலத்தின் வடிவத்தில் தொடர் மாற்றம்
* மலத்துடன் ரத்தம் வெளியேறுவது
* மலம் கழிக்கும்போது ஆசனவாய் வலிப்பது
* மலச்சிக்கலும் வயிற்றுப்போக்கும். மாறிமாறி ஏற்படுவது

என்ன செய்ய வேண்டும் ?

மேற்கண்ட அறிகுறிகள் இருப்பவர்கள் உடனடியாக அருகில் உள்ள பொது மருத்துவர் அல்லது குடும்ப மருத்துவரை அணுக வேண்டும். அது மலச்சிக்கல் பிரச்சினை மட்டுமே எனில் மாத்திரை, மருத்துகள் வழங்குவார். அந்த மலச்சிக்கல் வேறு உடல் பிரச்னையின் விளைவு எனில், குடல் மற்றும் இரைப்பை மருத்துவரைப் பரிந்துரைப்பார். இந்த ஆபத்தான நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை எடுக்கத் தவறினால், உயிரிழப்புவரை ஏற்படக்கூடும்.

இன்று மலச்சிக்கலுக்குப் பக்கவிளைவுகள் இல்லாத எவ்வளவோ மாத்திரை, மருந்துகள் வந்துவிட்டன. ஆனால், மருத்துவப் பரிந்துரையின்றிச் சுயசிகிச்சை எடுத்துக் கொள்ளும்போது பெருங்குடலில் உள்ள உணர்வு நரம்புகளை அது பாதித்து மலம் கழிப்பதை இன்னும் சிரமமாக்கிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

சோதனை முறைகள்

1. அடிப்படை சோதனை : மருத்துவர் நோயாளியிடம் தகவல்கள் கேட்டறிந்து, வயிற்றைப் பரிசோதனை செய்து, ஆசனவாய் வழியாக விரல் செலுத்திச் செய்யும் சோதனைகளை உள்ளடக்கியது.

2. ரத்தப் பரிசோதனை : ஹீமோகுளோபின் தொடங்கிச் சர்க்கரை, தைராய்டு, ரத்தத்தில் சோடியம், பொட்டாசியம் ஆகியவற்றின் அளவைக் கண்டறிவது.

3. மல சோதனை : மலத்தில் கண்ணுக்குத் தெரியாமல் ரத்தம் வெளியேறுகிறதா என்பதைக் கண்டறிவது.

4. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் : குடல் சார்ந்த பிரச்னைகளைக் கண்டறிவது.

5. சி.டி. ஸ்கேன் : குடலில் உள்ள கட்டிகள், அடைப்புப் போன்றவற்றைக் கண்டறிவது.

6. ரெக்டல் மேனோமெட்ரி பரிசோதனை (இன்று மிக அதிகமானோர் பாதிக்கப்படும் இப்பிரச்சினைக்கு, மன அழுத்தம் காரணமாக அமைகிறது.

7. மலக்குடல் நோக்கி (colonoscopy test) : ஆசனவாய் வழியாக ட்யூப் செலுத்தி மலக் குடலில் ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா எனக் கண்டறிவது.

சிகிச்சைகள்

1. உணவு, உடற்பயிற்சி, வாழ்க்கைமுறை மாற்றம் தொடர்பான பரிந்துரைகளுடன் மருந்துகள் வழங்கும் அடிப்படை சிகிச்சை முறை.

2. மலம் இளக்கி சிகிச்சை : வாய் வழியாக மாத்திரைகள், சிரப் மற்றும் பவுடரும் ஆசனவாய் வழியாக மாத்திரை மற்றும் இனிமா என்னும் தண்ணீர் மருந்தும் அளித்து மலத்தை இளக்கி வெளியேற்றுவது.

3. சீர் சிகிச்சை முறை : நரம்புப் பிரச்சனைகள், மனஅழுத்தம், சர்க்கரை நோய், தைராய்டு போன்றவற்றுக்குச் சிகிச்சை எடுப்பவர்களுக்கு அவற்றை கட்டுக்குள் கொண்டு வந்து, அதோடு மலச்சிக்கல் பிரச்சினையைச் சீர்செய்ய மருந்து, மாத்திரைகள் வழங்குவது.

4. பயோஃபீட்பேக் தெரபி : ஆசனவாயில் உள்ள, எப்போதும் மூடியபடியே இருக்கும் ‘ஆசனச்சுருக்கு தசை’ மலம் கழிக்கும்போது மட்டும் திறக்கும். அதன் மேலே மலக்குடல் இருக்கும். அதில் மலம் முழுவதுமாக நிரம்பியவுடன் மூளைக்குச் சிக்னல் செல்லும். அப்போது நமக்கு மலம் வருவதுபோலத் தோன்றும். கழிவறை சென்று அமர, ‘ஆசனச் சுருக்கு தசை’ திறக்கும். சிலருக்கு, குறிப்பாக மன அழுத்தம் உள்ளவர்களுக்கு இந்தத் தசை திறப்பதில் பிரச்னை ஏற்படும். அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்துப் பிரச்சினையைக் குணப்படுத்துவதே இந்தச் சிகிச்சை முறை.

5. அறுவை சிகிச்சை முறை : அடைப்பு உள்ளிட்ட குடல் பாதிப்பு உள்ளவர்களுக்கும், பிரச்சினையை மருந்து, மாத்திரைகளால் சரிசெய்ய முடியாத நிலையில்

இருப்பவர்களுக்கும், பிறவியிலேயே குடல் இயக்கம் சரிவர இல்லாதவர்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படும்.

மலச்சிக்கலைத் தவிர்க்க....

* காலை உணவைத் தவிர்க்காமல் நேரத்துக்குச் சாப்பிடுவதுடன், சரிவிகித உணவு உட்கொள்ளவும். தினமும் குறைந்தது 2.5–3 லிட்டர் தண்ணீர் அருந்துவது நல்லது.
* வெஸ்டர்ன் டாய்லெட் தவிர்த்து இன்டியன் டாய்லெட்டைப் பயன்படுத்தவும்.
* தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யவும்.
* மலம் கழிக்க வேண்டும் என்கிற உணர்வு வந்ததும் அடக்காமல் கழிவறை சென்று விடவும்.
* மன அழுத்தம் தவிர்க்கவும்.

உடலின் இயல்பான ஓர் இயக்கம் நடைபெறுவதற்கான மேற்சொன்ன வாழ்க்கை முறை மாற்றங்களை வழக்கமாக்கிக் கொண்டால், மலச்சிக்கல் மட்டுமல்ல, எந்தப் பிரச்சினையும் அண்டாமல் ஆரோக்கியமாக வாழலாம்'' என்கிறார் டாக்டர். பிரேம்குமார்.

மலச்சிக்கல் நீக்கும் உணவுகள்!

காபி, தேநீர், குளிர்பானங்களைக் கூடுமானவரை தவிர்த்து விடவும். இளநீர், பழச்சாறு அருந்தவும். இரவில் இரண்டு பழங்கள் சாபிடுவது மிக நல்லது. வாழைப்பழம்தான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. சீஸனல் பழங்களும் உண்ணலாம். நார்ச்சத்து நிறைந்த கோதுமை, கேழ்வரகு, தினை, வரகு, கொள்ளு போன்ற முழுதானியங்கள் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவும். வாழைத்தண்டு, கேரட், முள்ளங்கி, புடலங்காய், அவரைக்காய், முட்டைகோஸ், பாகற்காய் போன்ற காய்கறிகள், பொட்டுக்கடலை, கொண்டைக்கடலை, மொச்சை போன்ற பருப்பு வகைகள், கீரைகள், ஆரஞ்சு, கொய்யா, மாதுளை, ஆப்பிள், பேரீட்சை, அத்திப்பழம் போன்ற பழங்கள், மிளகு, ஓமம், கொத்தமல்லித்தழை... இவையெல்லாம் நார்ச்சத்து நிறைந்தவை. உலர் திராட்சை மலச்சிக்கல் பிரச்சினைக்கு மிகவும் நல்லது.

– நன்றி அவள் விகடன்

# கொங்கு மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்....

## திருமணங்களை எளிதாக்குவோம்! வாழ்க்கையை வளமாக்குவோம்!

– சி.முத்துசாமி, தலைவர்
கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம், ஈரோடு



திருமண இணைப்புகளைச் சீராக்குவோம், விவசாயத்தையே நம்பி இருந்த நமது சமுதாய மக்கள் இன்று படிப்பு, தொழில், உத்தியோகம் என்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். உலகின் அனைத்துப் பகுதிகளிலும் ஏதாவது ஒரு துறையில் முன்னேறிச் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

உலகின் எந்த ஒரு சமுதாயத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு நமது சமுதாயத்திற்கு மட்டும் உண்டு, 18 கட்டு கன்னிகள் நமது திருமணத்தில் கலந்து கொண்டு சிறப்புச் செய்கிறார்கள். நமது திருமணம்தான் உண்மையான சீர்திருத்தக் கல்யாணம்.

நமது இல்லத் திருமணங்களை மிக ஆடம்பரமாகவும், வீண் செலவுகள் அதிகமாக செய்து நடத்துகிறோம். இது தேவைதானா ?

கடன் வாங்கியும், பூர்வீகச் சொத்துகளை விற்றும், ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு தங்களது இல்லத் திருமணங்களை நடத்துகிறார்கள்.

உறவினர்களையும், நெருங்கிய நண்பர்களையும் மட்டும் அழைத்துத் திருமணத்தினை எளிய முறையில் நடத்திட வேண்டும்.

மணவறையில், மேக்கட்டி கட்டி, பூக்களைத் தொங்கவிட்டும் கட்டினால் போதும். சிறிது நேரமே மணமக்கள் அமர்ந்திருக்கும் மணவறைக்குப் பெரும் பொருட்செலவிட வேண்டாம்...... என்று நமது சமுதாயச் சங்கங்கள் மூலம் தீர்மானம் போட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

திருமண இணைப்பு :

கோவிலில் பூவாக்குக் கேட்டோ, மணமகன், மணமகள் பெயர் பொருத்தம் பார்த்தோ உறவினர்கள் வந்து செல்லும் வகையில் உழவு மற்றும் அறுவடை முடிந்த காலத்தில்

திருமணங்களை நடத்திடுவர். அல்லது மணமக்களில் நட்சத்திரங்கள் பொருந்தி வந்தால் ஜோதிடரிடம் திருமணம் நடத்திட நாள் குறிப்பர்.

மாமன், அத்தை வீடுகளில் திருமணம் ஏற்பாடு செய்தால் ஜாதகம் பார்க்கத் தேவையில்லை.

நமது சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் (தானதிபதி) மணமக்கள் இணைப்புச் செய்வார்கள். தற்போது திருமணத் தகவல் மையங்கள் திறம்படச் செயல்படுகின்றன. மற்றும் தொழில் ரீதியாகத் திருமண இணைப்பாளர்கள் செயல்படுகிறார்கள்.

அவர்களைக் கொண்டு இணைப்புகள் நடத்தலாம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று கூறுவார்கள். ஆனால், தற்போது ஜோதிடர்தான் திருமணங்களை முடிவு செய்கின்றார்கள்.

முன்பு ராகு, கேது, திசா சந்திப்பு எல்லாம் பார்ப்பது கிடையாது, தற்போதுதான் பார்க்கிறார்கள்.

திருமணத்திற்குப் பின்பு ஏதாவது பிரச்சனைகள் வந்தால் இந்தக் கோவில் அல்லது குலதெய்வத்திற்குச் சென்று வழிபட்டால் மணமக்களிடையே ஏற்பட்ட வேறுபாடுகள் அகன்றுவிடும், சரியாகிவிடும் என்று கூறுவார்கள்.

குழந்தைகளின் இளம்பருவத்திலேயே தன்னம்பிக்கையுடன் வளர, அனுபவரீதியாக மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில் குழந்தைகளைப் பயிற்றிட வேண்டும், விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மையை உருவாக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் அனுசரித்துப் போக வேண்டும். ஆண் பெண் இருபாலரும் வேலையைப் பகிர்ந்து செய்யவேண்டும். ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதை எடுத்துக் கூற வேண்டும்.

படிப்பு முடிந்த உடனே (ஆணுக்கு 27 வயதுக்குள்), (பெண்ணுக்கு 25 வயதுக்குள்) திருமணம் முடித்துவிட வேண்டும்.

# வலைத் தளப் பூக்கள்

– ஆர்.பூபதி, செயற்குழு உறுப்பினர்



1. தொழிலைக் காதலிப்பவன் வழிகாட்டியாகிறான். நிறுவனத்தைக் காதலிப்பவன் ஆள் காட்டியாகிறான்.
2. “செலவுக்குப் பணம் வேனுமாடா ?” னு கேட்ட அம்மாவை, ‘செலவுக்குப் பணம் வேணும்’னு கேட்க வைத்தல் பாவம்.
3. தொடர்ச்சியாக ஒருவருக்கே செய்யும் உதவி, காலப்போக்கில் செய்பவருக்குக் கடமையாகவும், பெறுபவருக்கு உரிமையாகவும் மாறிவிடுகிறது.
4. சிலர் புரிந்து கொள்கிறார்கள், சிலர் புரிந்தே கொல்கிறார்கள்.
5. வெற்றியடைய ஆசைப்படுகிறோம், ஆனால் போராடத் தயங்குகிறோம்.
6. ரோட்டில் தம் அடிக்கிறவங்களைச் சாதாரணமா கடத்து போய்விடுகிறார்கள். கடலை மிட்டாய் வாங்கித் தின்பவர்களைக் குறுகுறுனு பார்க்கிறாங்க.
7. நல்லத பண்ணா கைதட்டாத எந்தச் சாமியும், கெட்டது பண்ணா கண்ணைக் குத்தாது.
8. ஒரு காலத்தில் நல்லா ஆங்கிலம் பேசினா வியந்து பார்த்த நாம், இப்ப நல்லா தமிழ் பேசுறவங்களை வியந்து பார்க்கிறோம்.
9. இலையை வெட்டி ஆட்டுக்குப் போடுவாங்க.... ஆட்டை வெட்டி இலைல போடுவாங்க... வாழ்க்கை ஒரு வட்டம்தான்.
10. ஓர் உயிருக்கு இன்னோர் உயிரை உணவாகப் படைத்த கடவுளிடமிருந்து, என்ன விதமான கருணையை எதிர்பார்க்கிறீங்க.
11. நாம் என்றோ செய்த தவற்றைச் சரியாக ஞாபகம் வைத்திருப்பவர்கள் இரண்டுபேர். ஆபீஸில் ‘மேனேஜர்’; வீட்டில் ‘மனைவி’
12. அவதாரமான ராமனே பெண்டாட்டிய சந்தேகப்பட்டிருக்கலாம், அதற்காகப் பெண்டாட்டிய சந்தேகப்படுறவன்லாம் ‘ராமன்’ ஆகிவிட முடியாது.
13. எதைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம் என்ற கேள்விக்குச் சரியான பதிலை வழங்கிவிடுகிறது ‘மரணம்’.
14. ஆணுக்கு நாணமும், பெண்ணுக்குத் திமிரும் அழகுதான்.... சிட்டிகை அளவில் இருந்தால்.

15. ஒருவருக்குச் சொல்லிப் புரியவில்லையென்றால், வாழ்க்கை அடித்துப் புரிய வைக்கும்.

16. நினைவில் கவுண்டமணியை உடையவன், உலகத்தை செந்திலாகத்தான் பார்ப்பான்.

17. 'ஆமா' வாகவோ, இல்லையாகவோ வாழ்ந்துவிடுங்கள். ஆமாம் சாமியாக மட்டும் வாழாதீர்கள்

18. உண்மையைக் கூட நம்பும்படியான விதத்தில் கூற வேண்டியிருப்பதுதான் 'சாபம்'

19. தன் மனைவி செலவு செய்யும் அளவிற்குப் பணம் சம்பாதிப்பவனே வெற்றிகரமான ஆண். அப்படிப்பட்டவனைக் கண்டுபிடிப்பவளே வெற்றிகரமான பெண்.

20. எல்லோரும் வெற்றியை விரும்புகிறார்கள். ஆனால் வெற்றியாளர்களை வெறுக்கிறார்கள்.

21. தன் வாரிசை டாக்டராக்க எடுக்கும் பெரும் முயற்சியில் நோயாளி ஆவதென்னவோ பெற்றோர்கள் தான்.

22. ஓர் அன்பான குடும்பத்தில் தனக்காகச் சம்பாதிக்காதவர் 'தந்தை'; தனக்காகச் சமைக்காதவர் 'தாய்'.

23. ஆத்திகன் கடவுளை ஊத்தி ஊத்திக் கழுவுகிறான், நாத்திகன் கழுவிக் கழுவி ஊற்றுகிறான்.

24. கேட்க ஆளில்லையென்பது ஒரு பருவத்தில் வரம், ஒரு பருவத்தில் சாபம்.

25. ராஜ தந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது.

26. ஏழை மாணவனுக்குப் பணக்கார வாத்தியார் பாடம் நடத்தினால் அது அரசுப்பள்ளி..., பணக்கார மாணவனுக்குப் ஏழை வாத்தியார் பாடம் நடத்தினால் அது தனியார் பள்ளி.

27. மனிதன் பணத்தைத் தவிர மற்ற அனைத்தையும் தேவை வந்தால் மட்டுமே தேடிச் செல்கிறான்.

28. ஒரு கிணற்றுத் தவளையின் அதிகபட்சக் கனவு பாம்புகளற்ற கிணறு.

29. நோயுடன் கடக்கும் இரவைவிட, நோயாளியுடன் கடக்கும் இரவு மிக நீண்டது.

30. நாம் வாழ்வதற்கான செலவு ரொம்பக் கம்மி. அடுத்தவன் போல் வாழ்வதற்கான செலவு தான் ரொம்ப அதிகம்.

31. கண்ணீர் இருக்கும் இடத்தில் யார் புன்னகையை வர வைக்கிறாரோ அவர்தான் கடவுள்.

32. ஒருவனோட பொண்ணு லவ் மேரேஜ்பண்ணிக்கிட்டா அடுத்து அவனோட வேண்டுதல், ‘‘ஆண்டவா! என் சொந்தக்காரங்க பொண்ணுங்களும் லவ் மேரேஜ்பண்ணிக்கனும்’’ என்பதே.

33. குழந்தைகள் கெட்ட வார்த்தைகள் பேசுவதில்லை, கேட்ட வார்த்தைகளைத்தான் பேசுகிறார்கள்.

34. ‘‘நாயே’’.... ன்னு கூப்பிட்டாலும் நாலு பேரு திரும்பிப்பார்க்கிறார்கள்... நாய் மட்டும் அதுப் பாட்டுக்கு போவுது.

35. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்..... பிறகு போதிய ஆதாரம் இல்லையென சூதே வெல்லும்.

36. ‘இதுவும் கடந்து போகும்’ என்பதை விட ‘இதுவும் பழகிப் போகும்’ என்பதே வாழ்க்கைக்குப் பொருந்துகிறது.

37. கணவனின் அதிகபட்ச ஆசை சண்டையிடா மனைவி; மனைவியின் அதிகபட்ச ஆசை போதையில்லா கணவன், பிள்ளைகளின் அதிகபட்ச ஆசை பள்ளியில்லா நாள்கள்.

38. நதிக் கரையில் தழைத்த நாகரீகம், நதியை அழிப்பதில் வந்து நிற்கிறது.

39. நமக்கு விருப்பமானதைச் செய்ய, வாய்ப்பைவிட தைரியமே அதிகமாகத் தேவைப்படுகிறது.

40. பேசிட்டு இருந்த பொண்ணு திடீர்னு பேசாம இருந்தா...... அவங்க வீட்ல பேசி முடிச்சிட்டாங்கனு அர்த்தம்.

41. நினைவுகள் எப்போதும் வித்தியாசமானது...... சில நேரங்களில் சிரித்த நாட்களை நினைத்து அழவைக்கும்; அழுத நாள்களை நினைத்துச் சிரிக்க வைக்கும்.

42. ஜனவரியில் நிறுத்திவிடுவேன், பிப்ரவரியில் நிறுத்தி விடுவன்னு சொல்லும் குடி வெறியர்கள் கடைசியில் ‘மார்சுவரி’ யில் தான் நிறுத்துகிறார்கள்.

43. இந்தச் சமூகம் வீட்டில் உள்ள நாய்க்குச் சாப்பாடு வைச்சிட்டு ரோட்ல போற நாயைக் கல்லால் அடிக்கும்.

44. கோதுமையைச் சப்பாத்தினு நம்ப வைச்சா பெண்டாட்டி; நம்பினா புருஷன்..... அவ்ளோதாங்க வாழ்க்கை.

45. கண்ணீரில் உப்பு கலந்திருக்கும் தான், ஆனால் தப்புக் கலந்திருக்கக் கூடாது.

46. கடவுளுக்கும் ‘ழ’ கரப் பிரச்சினை இருக்கும்போல, நான் ‘‘நல்ல வழி காட்டு’’னு வேண்டினா, அவர் ‘நல்ல வலி’யைக் காட்டுகிறார்.

47. டீக்கடை பன்னுக்கு நல்லா மேக்கப் போட்டு 'பர்கர்னு' விக்கிறதே தொழில் ரகசியம்.

48. பேங்ல பணம் போடுறவன் கால்கடுக்க வரிசையில் நின்னுகிட்டு இருக்கான்; கடன் வாங்குறவர் மேனேஜருக்கு எதிரே சொகுசா உட்கார்ந்திருக்கிறான்.

49. உனது திருட்டில் எனக்கான பங்கை முதலில் தந்துவிடு என்பதே ஓட்டுக்குப் பணம் கேட்பது.

50. பேருந்தின் கடைசிச் சீட்டைப் போலவே வாழ்க்கை.... தீடீர், திடீர்னு தூக்கியயடிக்குது.

51. நம்மைக் சுற்றியுள்ளவர்களின் கஷ்டங்களை எல்லாம் தெரிந்து கொள்ள ஓர் எளிய வழி..... அவர்களிடம் உதவி கேட்பது.

52. அப்பா ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல பையனை அடிக்கிறதை நிறுத்திட்டு...... கல்யாணம் பண்ணி வச்சிடுவார்.

53. அப்பளத்தை உடைச்சித்தான் சாப்பிடனும் என்பதற்காக யாரும் உடைந்த அப்பளத்தை வாங்குவதில்லை.

54. காதலித்து விட்டு அழும் ஆண்களைவிட, கல்யாணம் பண்ணிக்கிட்டு அழுவற ஆண்கள்தான் ஊருக்குள்ள அதிகம்.

55. ஆறுலையும் சாவு, நூறுலையும் சாவு. என்ன.... ஆறுல செத்தா ஆம்லைட், நூறுல செத்தா சில்லி சிக்கன்.

56. மனைவி கணவனிடம் எதிர்பார்ப்பது இரண்டுதான்.... பேசும்போது கேட்டுகிட்டே இருக்கனும்; ஷாப்பிங் பண்றபோது பார்த்துக்கிட்டே இருக்கணும்.

57. வீட்டில் ஒரே பையனாக வளரும் குட்டீஸ்க்கு பல விளையாட்டுகளில் எதிரணி சுவர்தான்.

58. டாக்டர் மருந்துச் சீட்டில் எழுதும் எழுத்துகள் எல்லாமே 'உயிர்' எழுத்துகளே.

59. நல்லவனுக்கு 'கடவுள் பயமும்', கெட்டவனுக்கு 'கடவுள் பக்தியும்' அதிகம் இருக்கு.

60. அம்மி மிதித்து அருந்ததி பார்த்துக் கல்யாணம் பண்ணா.... அது அரேன்ஜ்டு மேரேஜ்; மம்மி மிதிச்சு, டாடி உதைச்சுக் கல்யாணம் பண்ணா.... அது 'லவ்' மேரேஜ்.



# பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

– புவன்

1. காலிஃபிளவரை வேகவைத்துத் துண்டுகளாக நறுக்கி, எலுமிச்சைச் சாற்றில் புரட்டிவைத்துப் பின்னர் கோபி மஞ்சூரியன் செய்தால் கூடுதல் சுவை கிடைக்கும்.
2. தயிரைக் கடைந்து கொஞ்ச நேரம் ஃப்ரிட்ஜில் வைத்தால் வெண்ணெய் எளிதாய்த் திரண்டு வரும்.
3. வெண்ணெயைக் காய்ச்சி இறக்கியதும் அதில் சிறிதளவு வெந்தயம் சேர்த்தால் நெய்யின் மணம் கூடும்.
4. மோர்க் குழம்பு புளித்து விட்டால், ஒரு கப் பாலில் ஒரு ஸ்பூன் அரிசி மாவைக் கலந்து, சூடாக்கி குழம்பில் கலக்கவும். புளிப்புப் போன இடமே தெரியாது.
5. கருவாட்டில் இருக்கும் அதிகப்படியான உப்பை நீக்க, அதனைச் சிறிது நேரம் சாதம் வடித்த கஞ்சியில் ஊற வைத்து நீரில் அலசினால் போதும்.
6. தேங்காய்த் துண்டைத் தயிரில் போட்டு வைத்தால் 2 நாள்கள் வரையில் தயிர் கெட்டுப் போகாது.
7. இட்லி மாவு புளிக்காமல் இருக்க வாழைத் தண்டை மாவில் போட்டு வைக்கவும்.
8. நல்லெண்ணையில் ஒரு துண்டு வெல்லம் போட்டு வைத்தால் எண்ணெய் நல்ல வாசனையுடன் மணக்கும்.
9. கேரட்டில் சூப் செய்யும்போது அதில் சிறிது சேமியாவை வறுத்துப் போட்டால் சூப் திக்காகவும், சுவையாகவும், பார்க்க அழகாகவும் இருக்கும்.
10. குளோப்ஜாமூன் பாகில் ஒரிரு துளி தேன்விட்டு இறக்கினால் பாகு உறையாமலும், கெட்டுப் போகாமலும் இருக்கும்.
11. பூண்டு மற்றும் மீன் வாடை கையில் இருந்தால், சிறிதளவு பற்பசையைப் பூசிக் கழுவி விடுங்கள். வாடை இருந்த சுவடே இன்றி மறைந்துவிடும்.
12. ரசம் வைக்கும்போது அதில் தேங்காய்த் தண்ணீரைச் சேர்த்தால் சுவை அபாரமாக இருக்கும்.
13. இட்லி, தோசைக்கு மாவு அரைக்கும்போது ஒரு பிஞ்சு வெண்டைக்காயைப் பொடியாக நறுக்கிச் சேர்த்து அரைக்கவும். இட்லி, தோசை மல்லிகைப் பூ மாதிரி வரும்.

14. உடைத்த தேங்காய் காய்ந்துவிட்டால், அந்தத் தேங்காய் மூடியில் பாலை ஊற்றி 10 லிருந்து 15 நிமிடம் வரை வைத்திருந்து பின்பு தேங்காயைப் பயன்படுத்தினால் புதியதுபோல இருக்கும்.

15. அவித்த முட்டையை அறுக்கக் கத்தியை உபயோகிக்காமல், கெட்டியான நூலைப் பயன்படுத்தி அறுத்தால் அழகாய் 'கட்' ஆகும்.

16. இன்ஸ்டண்ட் குலோப்ஜாமூன் மாவுடன் சிறிதளவு வெண்ணெய் சேர்த்துப் பிசைந்து குளோப்ஜாமூன் தயாரித்தால் ஜாமூன் மிருதுவாக இருக்கும்.

17. குழம்பில் உப்பு அதிகமாகிவிட்டால் தோல் நீக்கி நான்காக வெட்டிய உருளைக் கிழங்கைப் போட்டுக் கொதிக்கவிட்டால் உப்புக் குறையும். அரிசிப் பொரியைத் தூவினாலும் உப்பு குழம்பில் குறையும்.

18. ஓர் எலுமிச்சையை இரண்டாக வெட்டி, பாதியை உபயோகித்துவிட்டு மீதிப்பாதியை அடுத்த நாள் உபயோகிக்க வேண்டுமானால், அறுபட்ட பகுதியின் மேல் உப்பைத் தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.

19. புத்தகங்களைப் பூச்சி அரிப்பில் இருந்து பாதுகாக்க, புத்தக அலமாரியில் சிறிதளவு புகையிலையைத் தூவி வையுங்கள். பூச்சி அரிப்புகள் இருக்காது.

20. தர்பூசணிப் பழத்தின் வெள்ளைப் பகுதியைச் சீவி அரிசியுடன் சேர்த்து அரைத்துத் தோசை வார்க்கலாம். உளுந்து வேண்டாம்.

21. கற்பூரம் வைத்திருக்கும் டப்பியில் பத்து மிளகையும் போட்டு வைத்தால் கற்பூரம் எளிதில் கரையாது.

22. தையல் ஊசிகளைக் கம்பளித் துணியில் செருகி வைத்தால் அவை நீண்ட நாள்கள் துரு பிடிக்காமல் இருக்கும்.

23. பூரிக்கு மாவு பிசையும்போது சிறிது சர்க்கரை சேர்த்துப் பிசைந்தால் பொரித்த பூரி நன்கு எழும்பி வரும்.

24. புது வீட்டில் பெயிண்ட் அடித்த வாடை போகவில்லையா பக்கெட் (அ) பேஸினில் நிறையத் தண்ணீரை நிரப்பி அறைகளில் வையுங்கள். வாடை போய்விடும்.

25. புளியை பானையில் போட்டு, அதன்மேல் கொஞ்சம் உப்பைத் தூவி வைத்தால் புளி கெடாமலும், காய்ந்து போகாமலும் இருக்கும்.

26. வெண்ணெய் மீது ஒரு ஸ்பூன் சர்க்கரையைத் தூவி வைத்தால் உலராமல் அப்படியே இருக்கும்.

27. மண் பாத்திரம் புதிதாக வாங்கினால், அதில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடுபடுத்திப் பின்னர்க் கழுவினால் மண் வாசனையும் வராது. விரிசலும் விடாது.

28. மிக்ஸி வேலை முடிந்ததும், சுத்தமான நீரை கால் ஜார் அளவு ஊற்றி ஓடவிடுங்கள். மிக்ஸியில் மிகுந்திருக்கும் துகள்கள் வெளியே வந்துவிடும். இதனால் பிளேடுகள் அடிக்கடி நின்றுபோகும் தொந்தரவு இருக்காது.

29. தோசைக்கல் சூடாக இருக்கும்போதே ஒரு நியூஸ் பேப்பரால் நன்கு அழுத்தித் துடைக்க வேண்டும். பிறகு ஒரு துணியில் தண்ணீர் தொட்டுத் துடைத்தால் தோசைக்கல் பளிச் என்று சுத்தமாக இருக்கும்.

30. காபி டிக்காஷன் மிச்சமாகிவிட்டால் அதில் சிறிது சர்க்கரை போட்டு வையுங்கள். மறுநாள் காபி கலந்தாலும் புது காபியின் மணம் போலவே இருக்கும்.

31. அரிசி உப்புமா செய்யும் முன் நெய்யுடன் சிறிது நல்லெண்ணெய் விட்டுப் பிறகு உப்புமா செய்தால் சுவை கூடும். உப்புமாவும் உதிரி உதிரியாக பிரிந்து வரும்.

32. நெல்லிக்காயைப் பாலில் அரைத்துப் பிழிந்து சாறுஎடுத்துக் கொதிக்க வைத்துத் தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தடவி வந்தால் முடி நன்றாக வளரும்.

33. தினம் ஒரு கொய்யாப் பழம் சாப்பிட்டுவந்தால், இரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும்.

34. எலுமிச்சை பழத் தோலை உலரவைத்து உப்புடன் சேர்த்துப் பொடியாக்கி, அப்பொடியில் பல் தேய்த்து வந்தால் பற்கள் வெண்மை நிறம் பெற்று பளிச்சிடும்.

35. தினமும் சில துண்டு பப்பாளிப் பழம் சாப்பிட்டு வந்தால், கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம் மற்றும் சிறுநீரகக் கல் போன்றவற்றில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

36. துவரம் பருப்பு வேகவைக்கும்போது சிறிது வெந்தயமும், சில துளிகள் விளக்கெண்ணையும் ஊற்றி வேகவைத்தால் பருப்பு விரைவாக வெந்து விடும். இரண்டு நாள் வரைக் கெடாமலும் இருக்கும்.

37. கேரட், பீட்ரூட் வாடிப்போனால் நறுக்குவது கடினம். உப்புக் கலந்த நீரில் போட்டு வைத்தால் சிறிது நேரத்தில் புதியது போலாகிவிடும். வெட்டுவதும் எளிது.

38. வாழையிலையைப் பின்புறமாகத் தணலில் (அ) அடுப்பில் காட்டியபிறகு சாப்பாட்டுப் பொட்டலம் கட்டினால், இலை எவ்வளவு மடக்கினாலும் கிழியாது.

39. சோறு கொதிக்கும்போது அந்தத் தண்ணீரில் ஓர் ஏலக்காயைப் போட்டு சிறிது நேரம் சென்று எடுத்தால் சாதம் மணமாக இருக்கும்.

40. முருங்கைக் கீரையைப் பொரியல் செய்யும்போது கொஞ்சம் சர்க்கரையைத் தூவிவிடுங்கள். சுவையும் கூடும். குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவர்.

41. கடுகை வாங்கியவுடன் லேசாக வறுத்துவிட்டு ஆறினவுடன் டப்பாவில் வைத்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் தாளிக்கும்போது கடுகு வெடித்துச் சிதறாது.

42. உளுந்து போண்டா செய்யும் போது நன்கு வெந்து மசித்த உருளைக்கிழங்கை சேர்த்து அரைத்துப் போண்டா செய்தால், போண்டா மிருதுவாக இருக்கும்.

43. வெங்காயம் நறுக்கும்போது சூயிங்கம் மென்று கொண்டிருந்தால் கண்ணும் எரியாது, கண்ணீரும் வராது.

44. மாம்பூக்களை உலரவைத்துப் பொடித்து, சாம்பிராணிபோல் புகை போட்டால் கொசுக்கள் ஓடிவிடும்.

45. திடீரென வயிறு வலித்தால் சாம்பார் வெங்காயத்துடன் சிறிது உப்புக் கலந்து சாப்பிட்டால் வலி போய்விடும்.

46. வெள்ளி ஆபரணங்களோடு சிறிது கற்பூரத்தைப் போட்டு வைத்தால் வெள்ளி ஆபரணங்கள் கருக்காது.

47. அதிரசம் செய்யும் போது மாவுடன் பேரிச்சையை மசித்துச் சேர்த்தால் அதிரசம் மிகவும் சுவையுடன் இருக்கும்.

48. பால் காய்ச்சுவதற்கு முன்பு பாத்திரத்தில் சிறிது தண்ணீர்விட்டுச் சூடானதும் பால் சேர்த்துக் காய்ச்சினால் அடி பிடிக்காது, பாத்திரம் தேய்ப்பதும் சுலபமாக இருக்கும்.

49. உப்புக் கலந்த நீரில் தக்காளியைப் போட்டு வைத்தால் அழுகாமல் சில நாள்கள் இருக்கும்.

50. துணிகளில் எண்ணெய்க் கறையோ, கிரீஸ் கறையோ பட்டு விட்டால் சில சொட்டு நீலகரித் தைலம் விட்டு தேய்த்து அலசினால் கறை போய் விடும்.

51. அவ்வப்போது மிக்சி ஜாரில் ஒரு கைப்பிடி அளவு கல் உப்பைப் போட்டு, மிக்ஸியைச் சுழல விட்டால் பிளேடு முனையும் கூர்மையாகும். டேபிள் சால்ட்டும் கிடைத்து விடும்.

52. கீரை மசியல் செய்யும்போது, சிறிது சோறு வடித்த கஞ்சியை விட்டு மசித்தால் நன்கு குழைவாக மசியும்.

# அது ஒரு காலம் ....

புள்ளினங்கள் குரல் கொடுக்கப் புலர்காலை நாள் துவக்கம்.
பனிக்கால விடியல்களில் கரிச்சான் எழுப்பிவிடும்
வேனில் விடியலில் கருங்குயில்கள் குரல் கொடுக்கும்.
ஆண்டு முழுதும் ‘அலாரம்’ என் கருங்கோழி!
நானெழுந்து தாழ்திறக்க மனையாட்டி உடனெழுவாள்.
வயல் நோக்கி நான்நடக்க அட்டிலில் அவள் வேலை.
நோட்டம் நெருங்குகையில் எருதுகள் எழுந்துவிடும்.
கண்ணைக் கசக்கிக் கொண்டு பண்ணையாள் வெளிவருவான்
இருவரும் இருதிசையில் நெல்வயலைச் சுற்றிவர
நீர்கசியும் எலிவலைகள் மிதிபட்டு அடைக்கப்படும்.
கோழிகள் இரைதேட ஆடுகள் தழையுண்ணும்
இருஏற்றம் இறைக்கும் நீர் ஓடி வயல்பாயும்
சமைத்து முடித்து, வாரிசுகள் பள்ளியேக
கூடையில் சோறு, கருங்காப்பி கலயத்தில்
தோளில் களைக் கொத்து, மனையாள் வயல் வருவாள்
சுடவைத்த கருங்காப்பி சுவையாய் உள்ளிறங்கும்
தொடர்வோம் நீரிரைப்பை வயலெல்லாம் பாயும் வரை
காய்கறிக்கு களையெடுக்கப் பண்ணையாள் மனைவியுடன்
ஏறும் வெய்யிலில் என்மனையாள் புறப்படுவாள்.
மதியத்தில் உண்டு, பிறபணிகள் முடித்துவிட்டு
மாடுகளை மேயவிட்டு, கூலமிட்டுக் கட்டிவிட்டு
மாலையில் ஊர்வருவோம் காய்கறிக் கீரையுடன்
பிள்ளைகட்குத் தீனி தேங்காயும் வெல்லமுமே.
வறுத்த கடலையும், பயறுகளும், சந்தை நாளதனில்
கடலைப் பொரியுடன் வடைகள் ஒன்றிரண்டு

முட்டைக் காசாகும், முழு உளுந்தும் காசாகும்.
காய்கனிகள் காசாகும், ஆடு கோழி பணம் நல்கும்.
வாரச் சந்தையிலே சேர்ந்த வெண்ணெய் காசாகும்.
தேங்காய் நெற்றுடனே வரமிளகாய் காசாகும்.
ஆண்டில் மூன்றுமுறை பயிர்வரத்துக் காசாகும்.
அடுக்குப் பானைகளே அக்கால வங்கிகளாம்.
ஞாயிற்றுக் கிழமைகளில் கோழி குழம்பாகும்.
ஆண்டுக்கு ஒரு முறை ஆடுவெட்டி உறவழைப்பு
மாட்டு வண்டி மிதிவண்டி எம்கால வாகனங்கள்
ஆண்டுக்கு இருசேலை என்னினிய மனையாளுக்கு
இருவேட்டி ஒருசட்டை என்பாடு தீர்ந்துவிடும்.
குழந்தைகட்குக் கூடுதலாய் ஒன்றிரண்டு உருப்படிகள்
கல்யாணம், காது குத்தல், பூப்பு விழா, உறவிறப்பு
எண்ணிலாச் செலவு வரும், போராடிக் கடனடைப்போம்.
இருள் விரட்ட அகல்விளக்கும், அரிக்கேன் விளக்கதுவும்
வீட்டுக்கு வெளியே நிலவொளியே பெரும்பரிசு.
உடன்பிறந்தாள் வந்துவிட்டால் குழந்தைகட்கும் உற்சாகம்.
பெரியண்ணன் வீடிருக்கும் பெற்றோர் வர மகிழ்ச்சி.
மைத்துனர் வந்துவிட்டால் மனையாள் பூரிப்பாள்
குழந்தைகள் கும்மாளம் என்மனதும் நிறைந்து விடும்
ஆண்டுமுழுதும் மனமது அசைபோட திருவிழாக் கொண்டாட்டம்
ஒயிலாட்டம், தெருக்கூத்து, கரகம், சிலம்பாட்டம்.
ஓடியது காலம்
நிகழ்ந்தது பெருமாற்றம்!
விஞ்ஞானம் வளர்ந்து அஞ்ஞானம் அகன்றாலும்
எண்பதைக் கடந்தும் ஏங்குது என்மனது

–கவிஞர் கலாப்ரியன்

# விழிப்புணர்வு பற்றிய குறள்

கோபம் கொடியது என்பதற்காக ஓர் அதிகாரமே பாடிய திருவள்ளுவர், அதைவிடக் கொடியது என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார் ? அது எது ? குறள் எது ?

கோபத்தைவிடக் கொடியது அதிக மகிழ்ச்சியால் தோன்றும் விழிப்புணர்வின்மை (Unawareness).

''இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு''

இது அந்தக் குறள்.

தனக்கென்று ஒரு நிலையான தொழில், நிறைவான வருவாய். உண்ண, உடுக்க, இருக்க, இன்பம் துய்க்க வசதிகள் கிடைத்தவுடன் தன் மொழி, இனம், நாடு, பொருளாதார நிலை, கலை, இலக்கியம், பண்பாடு சுற்றுப்புறத் தூய்மை, இயற்கை வளம் போன்ற எந்த ஒரு பொதுப்பிரச்சினை குறித்தும் கவலையின்றி வீட்டிற்குள் ஒடுங்கிக்கொள்ளும் செயலிழந்த நிலையே விழிப்புணர்வற்ற நிலை.

நம் நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான நடுத்தர மக்கள் அந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

வேலைக்காக அலைவார்கள் : வேலை கிடைத்தவுடன் சம்பளம், பஞ்சப்படி, பதவி உயர்வு, மாறுதல், முன்பணம், கடன் பெறல் பற்றிப் பேசுவது தவிர, வேறு எது குறித்தும் அவர்கள் பொறுப்புணர்வுடன் பேசுவதைக் கேட்க முடியாது.

அதற்குமேல் போனால், இருக்கவே இருக்கிறது திரைப்படம், சீட்டாட்டம், தொலைக்காட்சி, குதிரைப் பந்தயம் போன்ற பிற பொழுது போக்கு வாய்ப்புகள்.

தன்னளவிற்கு அடிப்படைத் தேவைகளில் நிறைவு கண்டவர்கள், பொதுநல விழிப்புணர்வு கொள்ள வேண்டும். சமுதாயத்தின் பல பொறுப்புகளில் தனக்கு ஆர்வமுள்ள ஏதேனும் ஒரு பொறுப்பை ஏற்று. தன்னால் இயன்ற உதவியை, உழைப்பை, அதற்காக நல்க வேண்டும் என்று வற்புறுத்துவதே, இந்த பொச்சாவாமை **(54)** அதிகாரத்தின் நோக்கம்.

நம் வாழ்விற்கும், ஒரு தெரு நாயின் வாழ்விற்கும் வேறுபாடு வேண்டாமா ?

மரங்களை வெட்டிக் காடுகளை அழிப்பதால் நிலம் மலடாகிக் கொண்டு வருகிறது தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் ஆறுகளும், கடலும் நஞ்சாகி மீன்கள் கருவழிந்து வருகின்றன. காற்று மண்டலத்தில் உயிர்வளி (Oxygen) இருப்புக் குறையும் வகையில் நம் அணுவாற்றல் சோதனைகள், போர்கள், தொழிற்சாலை மற்றும் பெருநகர்க் கழிவுகள் மலிந்து வருகின்றன.

இவைபற்றியெல்லாம் கடுகளவும் விழிப்புணர்வின்றி நம் செல்வந்தர்கள், கரன்சி நோட்டுகளையும், தங்கக் கட்டிகளையும், தங்கள் சந்ததிக்குச் சேர்த்து வைப்பதில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். இந்த உருபாத் தாள்களையும், தங்கக் கட்டிகளையும் கடித்துத் தின்று இவர்களின் சந்ததிகள் உயிர் வாழ முடியுமா ? எப்படியும் நிலத்தில் விளையும் தானியங்கள், காய்கனிகளை உண்டும், ஆறு, கடலில் வாழும் மீன்களைச் சுவைத்தும், தண்ணீரைக் குடித்தும், காற்றிலுள்ள உயிர் வளியை உயிர்த்தும்தானே உயிர்வாழ முடியும் ?

(நன்றி : திருக்குறள் இரா.கனக சுப்புரத்தினம் –
கேட்டதும் கிடைத்ததும் நூலிலிருந்து)



# நல்லமைதி சூழ



அழகன் கருப்பண்ணன் M.Tech.,
கோவை

பாகற்காய்ச் சாறுடன்
சோறு ''பிடிக்காது'' என்றது மழலை
''பிடி'' காதை
என்றதட்டினார் அப்பா
நல் அமுதூட்டும் அன்னையிடம்
ஆங்கில இலக்கணம்
'பிடிக்காது' என்றதே மழலை !

அடிக்காதைப் பிடித்த ஆசிரியர்
பிரம்படி கொடுத்தேனும் ஏற்ற
கொடுந் தேளாய்த் தாளாளர்
அரும்பான அன்புக் குழந்தைக்கோ
அமுதும் ஆங்கிலமும்
பாகற்காயாய்....

பெற்றவரும் ஆசிரியரும் நெருஞ்சி
கல்விக் கூடுமோர் கொடுஞ்சிறை
வருந்தியே கற்றிட
வாடகையோ இலட்சத்தில் !

வாணிபப் போக்கில் சமூகம்
வேண்டா வெறுப்பில் வளர்ப்பு
இனியும் வேண்டாம் இத்துன்பம் !

நனி மழலையர்க்கு உண்டுரிமை
அரும்பாகி மொட்டாகிப் பின்மலராக !
அகவை ஆறுவரை தாய் தன் மார்பு
அணைத்தூட்டும் அமுதே உணவு
சுற்றிய புடைவைத் தொட்டிலே பள்ளி
நிலவைச் சுட்டியும் சுடுங்கதீர்
வெயிலைச் சாடியும் பாடிப் பாலினையும்
ஊட்டுவதே தாய்க்கல்வி !

நன்னூலுடன் தொல்காப்பியப் படிப்பும்
திருக்குறளுந் தேன்திணை மாவும்
நல்வழி மூதுரை இணைத்த ஆத்திசூடி
கம்பன்பாவும் கம்பங்கூழும் வரகுக்களியும்
தேவாரத் திருவாசகமுடன் திருவருட்பாவும்

தெள்ளுதமிழ் அமுதெனத் தேனிசையுடன்
ஊட்டிடத் தமிழ் மழலையர் ஞானமுற்று
நல்லமைதிசூழ் ஞாலங்காண்பர் – உணர்வோம்
பாரிலுள்ள தமிழரெலாம் பாங்குடனே
ஒன்றிணைந்து சமைத்திடுவோம் ஒருலகம் !
வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !

# கொங்கு நாடு, கொங்கு வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (B.C) பிரிவில் அரசு சேர்த்த வரலாறு

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் எம்.ஏ., பிஎச்.டி,
செயற்குழு உறுப்பினர்

**கொங்கு நாடு**

இயற்கை எழில் நிறைந்த பண்டைத் தமிழ்நாடு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவை சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்பனவாம். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தனித்த சிறப்புக் கூறும் பழங்குறிப்பும் உண்டு.

சோழ நாடு சோறுடைத்து;
பாண்டி நாடு முத்துடைத்து;
சேர நாடு வேழமுடைத்து;
கொங்கு நாடு ஆவுடைத்து;
தொண்டை நாடு சான்றோருடைத்து.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் கொண்டிருந்தது. கொங்கு நாட்டின் பெரும் பகுதி மலைகளைக் கொண்டது. அதனால் கொங்கு நாடு மலை மண்டலம், மலைநாடு என அழைக்கப்பட்டது. கொங்கு என்ற சொல்லுக்குப் பூந்தாது, மணம், தேன், பொன் எனப் பல பொருள்கள் உண்டு. மலைகளில் தேனும், பூக்களில் மணமும், நாடெங்கும் பொன்தாதுவும் நிறைந்திருந்ததால் இந்நாடு கொங்கு நாடு எனப் பெயர் பெற்றதெனலாம். கொங்கு நாடெங்கும், மரம், செடி, கொடிகள் மிகுந்து தழைத்துப் பூத்து மணம் சுமழ்ந்ததனாலும், தேன் மிகுதியாக இருந்ததனாலும், பொன் மிகுதியாகக் கிடைத்ததனாலும் முன்னையோர் இந்நாட்டிற்குக் கொங்கு நாடு என்று பெயரிட்டழைத்தனர். பூநாடு, மண நாடு, தேன் நாடு, பொன் நாடு என்னும் நான்கையும் உள்ளடக்கிக் கொங்கு நாடு என்றனர்.

தங்கத் தமிழகத்தின் மங்கா ஒளி மணிப்பதக்கமாகத் திகழ்வது கொங்கு நாடு. தமிழகத்தின் பிற பகுதிகள் புயல்களால் பாதிக்கப்பட்டு, அரசியல் அவல நிலைகளுக்குப் பெரிதும் ஆளாகி வந்த நாள்களில்கூட, அதன் தனித்தன்மையும் நல்லமைதியும், மக்கள் வாழ்வும், பண்பும், வீரமும், வாழ்வியல், பொருளியல் முயற்சிகளும் அவற்றால் ஒரு சிறிதும் குலைவுறவில்லை. அவை தடைகள் யாவும் தகர்த்து முன்னேறியே வந்துள்ளன.

காடு நாடாக்கும் பணியிலும், விருந்தோம்பல், கொடையாண்மை, எல்லா மக்களையும் மதித்தல், மரியாதை செலுத்துதல் போன்ற பல இனிய பண்புகளிலும் கொங்கு நாடு தமிழகத்தில் முன்னிலையில் நிற்கிறது. தமிழகப் பெருமையையும், தென்னக வாழ்வையும், இந்திய தேசிய வளத்தையும் மேம்படுத்தப் பெரும் பாடுபடும் ஒரு தங்கத் தரணியாகவே கொங்கு நாடு இருந்து வந்துள்ளது.

செந்தமிழ் மொழிக்கு ஒரு தனிச்சுவை சேர்க்கும் பேச்சு வழக்கினைக் கொண்டுள்ளது, கொங்கு மண்டலம். கொங்கு என்ற சொல் தேன் என்னும் பொருளையும் தரும். அந்தக் கொங்குத் தமிழைப் பேசக் கேட்கும்போது அது தேன் போலவே இனிக்கும். அத்தகைய தனித்தன்மையுடன் தமிழ் வழங்கும் கொங்கு மண்டலம் பல பெருமைகளைப் பெற்றுள்ளது.

மேற்கே வெள்ளிமலை, கிழக்கே குளித்தலை, தெற்கே பழநி என்னும் வைகாவூர், வடக்கே தலைமலை அல்லது பெரும்பாலை ஆகிய இவற்றினிடையே அடங்கிய பெரும் பகுதியே ‘கொங்கு நாடு’ எனப்படுகிறது.

கொங்கு நாடு ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்னகிரி, நீலகிரி, நாமக்கல், கரூர் மாவட்டங்களையும், திருச்சி மாவட்டத்தின் குளித்தலை, திண்டுக்கல் மாவட்டத்தின் பழநி ஆகிய வட்டங்களையும் உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பாகும். அதாவது தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பாகம் ஆகும்.

பழங்கொங்கு நாட்டை வேளிர்களாகிய சிற்றரசர்கள் ஆண்டார்கள். கொங்கு நாட்டின் சுற்றுப்புறங்களில் இருந்த சேர, சோழ, பாண்டியர் கொங்குச் சிற்றரசர்களை வென்று அந்நாட்டைத் தங்கள் தங்கள் நாட்டுடன் சேர்த்து கொள்ளக் கருதி, அவர்கள் தனித்தனியாகப் படையெடுத்துக் கொங்கு நாட்டில் போர் செய்தார்கள். கொங்கு நாட்டரசர் தங்கள் நாட்டை எளிதில் விடவில்லை. படையெடுத்து வந்த அரசர்களோடு அவர்கள் கடுமையாகப் போர் செய்து எதிர்த்தார்கள். இவ்வாறு பல காலமாகக் கொங்கு நாட்டில் போர்கள் நடந்தன.

முதலில் சேரமன்னன் அந்துவஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். இதற்கு இவனுடைய தமையன் மகனான பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உதவியாக இருந்தான் என்பதை ஒரு பதிற்றுப்பத்துப் பாடல் மூலம் அறிய முடிகிறது. பின்னர், சோழர்களும், பாண்டியர்களும் கொங்கு நாட்டை வென்று ஆண்டிருக்கிறார்கள்.

மலைவளம் மிக்க பழம்பெரும் கொங்கு நாடு நிருவாக வசதிக்காக இருபத்து நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பூந்துறை நாடு | 2. | தென்கரை நாடு |
| 3. | காங்கய நாடு | 4. | பொங்கலூர் நாடு |
| 5. | ஆறை நாடு | 6. | வாரக்க நாடு |
| 7. | திருவாவின்குடி நாடு | 8. | மண நாடு |
| 9. | தலைய நாடு | 10. | தட்டய நாடு |
| 11. | பூவாணிய நாடு | 12. | அரைய நாடு |
| 13. | ஒடுவங்க நாடு | 14. | வடகரை நாடு |
| 15. | கிழங்கு நாடு | 16. | நல்லுருக்கா நாடு |
| 17. | வாழவந்தி நாடு | 18. | அண்ட நாடு |
| 19. | வெங்கால நாடு | 20. | காவடிக்கா நாடு |
| 21. | ஆனைமலை நாடு | 22. | இராசிபுர நாடு |
| 23. | காஞ்சிகோயில் நாடு | 24. | குறுப்பு நாடு |

மேற்கண்ட நாடுகளின் நிருவாகச் சபைத் தலைவர்கள் நாட்டுத் தலைவர் அல்லது நாட்டார் என்று அழைக்கப் பெற்றனர். இத்தலைவர்களை மதித்து, அவர்கள் சொற்படியே அந்தந்த நாட்டினர் வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த உள்நாட்டு நிருவாகத்தின் சபை நடவடிக்கையின் நன்மையை அறிந்து பிற்காலப் பாண்டியர், சோழர்களும் தங்கள் ஆட்சியில் இவை தொடர அனுமதித்தனர்.

கொங்கு நாட்டில் ஒதியமலை, குருந்த மலை, சிரவணம்பட்டி மலை, மருதமலை, இரத்தினகிரி, பெருமான் மலை, பால மலை, ஆனை மலை, பொன் மலை, திருமூர்த்தி மலை, தென்சேரி மலை, அலகு மலை, குமார மலை, ஊதியூர் மலை, சிவன் மலை, தென்னி மலை, தவளகிரி, குன்றத்தூர், ஊராசிக் கோட்டை மலை, மாதேசுவரன் மலை, மோரூர் மலை, கொங்கண கிரி, கொல்லி மலை, சேர்வராயன் மலை, கந்தகிரி, கபிலர் மலை, நைனாமலை, தான்தோன்றி மலை, வெண்ணெய் மலை, புகழி மலை, ஐவர் மலை, பழநி மலை, கொண்டல் தங்கி மலை ஆகிய பல மலைகள் உள்ளன.

கொங்கு நாட்டில் 51 கோட்டைகள் உள்ளன. கோயம்புத்தூர். சத்திய மங்கலம், கொள்ளேகால், கொடிவேரி, தணாய்க்கள், பொள்ளாச்சி, ஆனை மலை, திண்டுக்கல், தாராபுரம், பொன்னாபுரம், பெருந்துறை, எழுமாத்தூர், ஈரோடு, காங்கேயம், கரூர், விசய மங்கலம், அரவக்குறிச்சி, பரமத்தி, பவானி, மோகனூர், நெருஞ்சிப்பேட்டை, மேட்டூர், சுரம்பள்ளி, காவேரிபுரம், சேலம், தகடூர், இராயக்கோட்டை, அதமன் கோட்டை, ஓமலூர், காவேரிப்பட்டனம், தேன்கனிக்கோட்டை, பெண்ணகரம், பெரும்பாலை, சோழப்பாவு, தொப்பூர், அரூர், தென்கரைக்கோட்டை, ஆத்தூர், சேந்தமங்கலம், நாமக்கல், சங்ககிரி, சதுரகிரி, கனககிரி, மகராசக்கடை, தட்டைக்கல் துரக்கம், இரத்தினகிரி, சூலகிரி ஆகியன கொங்கு நாட்டுக் கோட்டைகளாம். பதினான்காம் நூற்றாண்டு வரை இந்தக் கோட்டைகள் பெருமையுடன் இருந்தன. குறுநில மன்னர்கள் ஆண்டனர். பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின் விசய நகரார், மைசூர் உடையார், முகமதிய, ஆங்கிலேயப் படையெடுப்பால் அவை அழிந்தன. திண்டுக்கல், நாமக்கல் கோட்டைகள் மட்டும் அழியாமல் இருக்கின்றன. சங்ககிரி, கிருஷ்ணகிரி, மகராசக் கடை ஆகிய கோட்டைகள் சிதைந்துள்ளன. பிற முழுதும் சிதைந்து அழிந்து போயின. குறுநில மன்னர்களுடன் கோட்டைகளும் அழிந்து போயின.

‘கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்’ என்பது பழமொழி. காவிரி, நொய்யல், பவானி, அமராவதி, சண்முக நதி, பாலையாறு, வாழையாறு, நள்ளாயாறு, குடவனாறு, தொப்பயாறு, திருமணிமுத்தாறு ஆகிய நதிகள் பாயும் கொங்கு நாடு சங்ககாலம் தொட்டே வறட்சியும், வளமும் மாறி மாறிப் பெற்று வந்துள்ளது. மலைவளம் மிக்க கொங்கு நாடு மழை நலங்கெட்டு அவ்வப்போது வறட்சியாலும் வாடி வந்துள்ளது. கொங்கு நாடு வளமாக இருந்தால், தமிழகத்தின் மற்ற பகுதிகளும் வளம் பெற்றிருக்கும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது. ஆம், ‘கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும்.’

கொங்குநாட்டுத் தலங்கள்

கொங்குநாட்டுப் புண்ணியத் தலங்கள் சிறப்புப் பெற்றவை. திருப்பாண்டிக் கொடுமுடி, காஞ்சிவாய்ப் பேரூர், திரு ஆவினன்குடி, திருச்செங்கோடு, திருஆனிலைக் கரூர், திருமுருகன் பூண்டி, அவிநாசி, வெஞ்சாமாக் கூடல், பவானி ஆகியன பாடல் பெற்ற தலங்களாம்.

நாமக்கல், வெண்ணெய்மலை, சென்னிமலை, கொல்லிமலை (அறைப்பள்ளி), மருதமலை, பொன்மலை, சிவமலை, கதித்தமலை, திருமூர்த்திமலை, கபிலமலை ஆகியன புண்ணியத் தலங்களாகும்.

கொங்கு நாடு – ஆண்டவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கரிகாற் சோழன் | : | கி.மு. 60 – கி.மு.10 |
| 2. | சேரன் செங்குட்டுவன் | : | கி.பி. 150 – கி.பி. 205 |
| 3. | வல்வில் ஓரி (கொல்லிமலை மட்டும்) | | |
| 4. | அதியமான் (தகடூர் மட்டும்) | | |
| 5. | செல்வக்கடுங்கோவாழியாதன் | : | கி.பி. 130 – கி.பி 180 |
| 6. | பெருஞ்சேரலிரும்பொறை | : | கி.பி. 130 – கி.பி 180 |
| 7. | இளஞ்சேரலிரும்பொறை | : | கி.பி. 130 – கி.பி 180 |
| 8. | மாந்தரஞ்சேரலிரும்பொறை | : | கி.பி. 130 – கி.பி 180 |
| 9. | செங்கணான் | : | கி.பி. 250 |
| 10. | இரட்டர் | : | கி.பி. 250 – கி.பி. 405 |
| 11. | சங்கர் | : | கி.பி. 405 – கி.பி 870 |
| 12. | ஆதித்த சோழன் | : | கி.பி. 870 – கி.பி 907 |
| 13. | பராந்தகச் சோழன் | : | கி.பி. 907 – கி.பி 942 |
| 14. | கொங்குச் சோழர்கள் | : | கி.பி. 942 – கி.பி 1304 |
| 15. | கொங்குப் பாண்டியர்கள் | : | கி.பி. 1265 – கி.பி 1320 |
| 16. | போசளர் | : | 13 ஆம் நூற்றாண்டு – 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் |
| 17. | விஜயநகரப் பேரரசு | : | 14 ஆம் நூற்றாண்டு – 17 ஆம் நூற்றாண்டு வரை |
| 18. | உம்மத்தூர்த் தலைவர்கள் | : | கி.பி. 1489 – கி.பி 1527 |
| 19. | நாயக்க மன்னர்கள் | : | கி.பி. 1529 – கி.பி 1734 |
| 20. | மைசூர் உடையார்கள் | : | கி.பி. 1717 – கி.பி 1766 |
| 21. | முகமதியர் ஆட்சி | : | கி.பி. 1761 – கி.பி 1799 |

22. கம்பெனி ஆட்சி : கி.பி. 1799 – கி.பி 1858

23. கம்பெனி ஆட்சி : கி.பி. 1858 – கி.பி 1947

தகடூரை மட்டும் தலைநகராகக் கொண்டு தலைநிமிர்ந்து ஆண்ட அதியமான் ஒருநாள் வேட்டைக்குச் சென்றார். திரும்பும் வழியில் அதியமான் நெல்லிக்கனி ஒன்றைக் கண்டார். அக்கனியை உண்டால் ஆயுள் நீடிக்கும் என்று துறவி ஒருவர் சொல்ல, அதியமான் அக்கனியைப் பறித்து எடுத்து ஔவைக்குக் கொடுத்தார். கனியை உண்ட அவ்வை 'சுவையான கனி' என்று கூறினார். 'இக்கனியை உண்டால் ஆயுள் நீளும்' என்று அதியமான் கூறினார். உடனே ஔவை "நீ உண்ணாமல் எனக்கு ஏன் தந்தாய் மன்னா ?" எனக் கேட்டார். மன்னவனோ "நான் உண்டால் தகடூர் பெயர் உள்ளளவு மட்டுமே வாழ்வேன். தாங்கள் உண்டால் தமிழ் வளரும்! தமிழ் உள்ளளவும் வாழ்வீர்கள்" என்று சொன்னார். ஔவை, அதியமானின் தமிழ்ப் பற்று கண்டு கரைந்து போகிறார். செய்யுட்கனி ஒன்றை நன்றிக் கனியாய் தருகிறார். இதுவே தகடூரான் தந்த கனி. கொங்கு நாட்டை ஆண்ட மன்னன் அதியமானின் தமிழ்ப் பற்றுக்கும், புலவர் ஔவையார்மேல் கொண்ட மரியாதைக்கும் சான்றாக விளங்குவது இந்த நிகழ்ச்சி.

## கொங்கு வேளாளர் ||

வேளாளர் எனும் சொல்லுக்கு ஈகையாளர், பிறர்க்கு உதவி செய்பவர் எனும் பொருள்களை அகராதிகள் தருகின்றன.

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்ற திரிகடுக அடி, வேளாளன் என்பதற்கு ஈகையாளன் எனப் பொருள் தருகிறது.

திருவள்ளுவரும் 'வேளான்மை' எனும் சொல்லைப் பிறர்க்குதவி செய்தல் என்ற பொருளிலேயே ஆள்கிறார்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பது திருக்குறள்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

என உழவுத் தொழில் போற்றப்படுகிறது. உழவுத் தொழில் செய்வோர் தாம் விளைவிப்பதை உணவாகப் பிறர்க்குத் தந்து உதவுகிறார்கள்.

உதவிகளிலேயே சிறந்த உதவி உணவு கொடுத்தலே என்பதை,

'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'

என மணிமேகலை கூறுகிறது.

உலக மக்கள் உயிரோடு வாழ்வதற்கு இன்றியமையாது தேவைப்படும் உழவுத் தொழிலைச் செய்வோர் வேளாளர் எனப்பட்டனர். வேளாண்மை செய்பவர் வேளாளர். எனவே கொங்கு வேளாளர் என்பதற்குக் கொங்கு நாட்டில் பயிர்த் தொழில் செய்வோர் என்பது பொருளாகும்.

வேளாளர் சிறப்பைக் கம்பர் ஏர் எழுபதாகப் பாடியுள்ளார்.

'மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழிதரித்தே அருளும் கை சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும் கைநீடூழி
காக்கும் கை காராளர் கை."

வேல் வேந்தனும் மோழி பிடிக்கும் உழவனை எதிர்பார்த்துத்தான் வாழ வேண்டும். சூழ்வினையை அகற்றி எல்லோரையும் காக்கும் கை உழவன் கை. அனைவருக்கும் அருளும் கை உழவன் கை என்று கம்பர் கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் வேளாளர் சிறப்புப் பற்றி,

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால்
மிக்கிருக்கும் தாளாளர்
இன்மையாற் சென்று இரந்தார்க்கு
இல்லையென்னாது ஈந்து உவக்கும் தன்மையார்"

எனப் பாடியுள்ளார்.

வேளாளர் வள்ளல் தன்மை மிக்க கொடையாளர்கள். இல்லையென்று யாசிப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது கொடுத்து மகிழும் தன்மை கொண்டவர்கள் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

கொங்கு வேளாளர்களின் சிறப்பைப் பலரும் போற்றியுள்ளனர். செல்வச் செழிப்பும், நாகரிக ஏற்றமும் பூண்டு வீறார்ந்த உழவுத் தொழிலை மேற்கொண்டு உலகு வியக்கப் புலவர் போற்ற வாழ்ந்திருந்தது கொங்கு வேளாளர் இனம். மேனாட்டு அறிஞர் நிக்கல்சன் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பற்றித் தம்முடைய நூலில், ‘‘கொங்கு வேளாளக் கவுண்டர்கள் கடுமையான உழைப்பாளிகள். சொன்ன சொல் காப்பாற்றும் நேர்மையாளர்கள். நல்ல உடல் வலிமை படைத்தவர்கள். தங்கள் இனத்தை யார் இழிவுபடுத்தினாலும் பொறுக்க மாட்டார்கள். அவர்கள் நாட்டுப் பெண்கள் குதிரைச் சவாரி செய்வார்கள். இது மற்றைய தென்னிந்தியப் பகுதிகளில் காணப்படாத சிறப்பாகும்’’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

கால்னல் மெக்கன்சி என்ற அறிஞர் நமது நூலில், ‘‘கொங்கு நாட்டில் வாழும் மக்களே சுத்தமாகத் தமிழ் பேசுபவர்கள்’’ என்று குறிப்பிட்டுள்ளார். ‘‘கொங்கு வேளாளர்கள் பழக்க வழக்கங்கள், மனநிலை, பண்புகள் ஆகியவற்றில் தனித்தன்மை பெற்று விளங்குகிறார்கள். பொதுவாக நகர்ப்புறங்களில் வாழ்பவர்களை விட, கிராமப்புறங்களில் வாழும் கொங்கு மக்கள் தம் தோற்றத்தில் கூட ஒரு தனித்தன்மை பெற்றே காணப்படுகிறார்கள். ஒவ்வொரு சொல்லும் ‘ங்க’ என்ற மரியாதை விகுதி கொடுத்து அவர்கள் பேசும் முறையே தமிழகத்தின் பிற பகுதி மக்களிடம் காணப்படாத ஓர் உயரிய பண்பாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதினாறாம் நூற்றாண்டிற்கு முன்னர் வேறுபாடு எதுவுமின்றி வாழ்ந்த ஒரே கொங்குச் சமுதாயத்தினர், பிற்காலத்தில் கொங்கு நாட்டு வேளாளர் (நாட்டுக் கவுண்டர்), கொங்கு வேளாளர் என இரண்டாகப் பிரித்து கூறப்பட்டனர். பண்டைய வரலாற்றில் இரு பிரிவினருக்குமிடையே எந்த வேறுபாடும் இல்லாமல் இருந்தது.

கொங்கு நாட்டு வேளாளர் (நாட்டுக் கவுண்டர்) சமுதாயம் தனிப்பிரிவாக இருந்தாலும், கொங்கு வேளாளர் சமுதாயம் என்று பொதுவாகக் குறிப்பிடும்போது, அது நாட்டுக் கவுண்டர் பிரிவையும் உள்ளடக்கியதாகவே கருதப்படுகிறது. கொங்கு வேளாளர் சமுதாயம் என்ற பெரிய வட்டத்தில், கொங்கு நாட்டு வேளாளர் பிரிவை அவ்வட்டத்தினுள் ஒரு சிறிய வட்டமாகக் கொள்ளலாம்.

## கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அரசு ஆணை

1971 ஆம் ஆண்டு முதல் 1976 வரை கோவை செழியன் காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். சட்டசபையில் சமயம் கிடைத்தபோதெல்லாம் கொங்குச்

சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டடோர் பட்டியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தித் தக்க ஆதாரங்களுடன் வாதாடி வந்தார். தி.மு.க. வைச் சேர்ந்த சட்ட மன்ற உறப்பினர்கள் செ.கந்தப்பன், ஈரோடு சின்னசாமி, தேவத்தூர் நாச்சிமுத்து ஆகியோரும் சட்டமன்றத்தில் அவ்வப்போது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சமுதாயங்களைத் கணக்கெடுக்க காக்கா கலேஷ்கர் கமிட்டி அமைக்கப்பட்டது. கோவை செழியன் அவர்களின் வழிக்காட்டுதலில் இருந்த மாநில கொங்கு அமைப்புகளும், அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் இருந்த சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும் காக்கா கலேஷ்கர் கமிட்டியின் முன் கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையையும், அதற்கான ஆதாரங்களையும் வைத்தன. ஆனால் பலன் ஏதும் இல்லை.

பின்னர்ப் பிற்படுத்தப்பட்டோர் மக்களின் நலன்களைப் பேணுவதற்குத் தமிழக அரசு பிற்பட்டோர் நலக்குழு ஒன்றை அமைத்தது. அக்குழுவின் தலைவராக ஏ.என். சட்டநாதன் அவர்களும், உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகள் சின்னப்பன், ஜமால் உசேன் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

கொங்குச் சமுதாய மக்கள் பற்றிய புள்ளி விவரங்களையும், அரசுப் பணியில் இருப்போர் பற்றிய விவரங்களையும் தலைமைச் செயலகத்தில் சட்டமன்ற இணைச் செயலாளராகப் பணியாற்றி வந்த சி.கே. இராமசாமி அவர்களும், உள்ளாட்சித் துறையில் இயக்குநரின் நேரடி உதவியாளராகப் பணியாற்றி வந்த கரூர் வையாபுரிக் கவுண்டர் அவர்களும் மிகவும் சிரமப்பட்டுத் திரட்டினர். இந்த விவரங்களைப் பயன்படுத்தி ஓர் அறிக்கையையும், கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு கோரிக்கை மனுவையும் தயார் செய்து மாநில கொங்கு அமைப்பு மற்றும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாகத் தமிழ்நாடு அரசு அமைத்த சட்டநாதன் கமிஷன் முன் வைத்தனர்.

1975ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23தேதி கோவை மாநகரில் கொங்கு வேளாளர் சமூக மாநில மாணவர் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்கு அன்றைய சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் கே.எஸ்.கே. வேலுமணி தலைமை தாங்கினார். சென்னை மாரா நர்சரி பள்ளியின் தலைவர் கே.ஆர். மாரப்பன் அவர்கள் மாநாட்டின் அமைப்பாளராகச் செயல்பட்டார். பெரும் திரளான மாணவர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் கொங்கு வேளாளர் இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர்

பட்டியலில் சேர்க்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்டது. இந்த மாநாடு பெரும் வெற்றி பெற்றதோடு அரசின் கவனத்தையும் தன்வசம் ஈர்த்தது. இந்த மாநாடு சிறப்பாக நடைபெற ஆலோசனை கூறி, எல்லா வகையிலும் உதவி செய்தவர் அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள் ஆவார். அருட்செல்வர் அந்தச் சமயத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களாகப் பணியாற்றிய கே.எஸ். கோவிந்தசாமி, எஸ். குருநாதன், எஸ்.கே. முத்துசாமி, கே.எஸ்.கே. வேலுமணி, சி.தாமோதரன் முதலானோர் இந்த மாநாட்டின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றினர். சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு மு.சின்னசாமி, தேவத்தூர் நா. நாச்சிமுத்து, கரூர் நல்லசாமி, தொண்டமுத்தூர் மாணிக்கவாசகம். செ. கந்தப்பன் முதலானோர் மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புக் கொடுத்து உதவி செய்தனர்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும், தமிழகமெங்கும் செயல்பட்டுக்கொண்டிருந்த பல்வேறு கொங்கு அமைப்புகளும் கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வலியுறுத்தித் தமிழக முதல்வர் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதின.

சி.கே. இராமசாமி. கரூர் வையாபுரி கவுண்டர் ஆகிய இருவரும் கொங்குச் சமுதாயம் சம்பந்தமாகத் திரட்டிய புள்ளி விவரங்களையும், சட்டநாதன் கமிஷன் முன் வைக்கப்பட்ட அறிக்கை மற்றும் வாதங்களையும் கொண்டு அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுகோள் விடுத்து ஒரு வேண்டுகோள் கடிதமும், அதன் இணைப்பாக ஒரு விளக்கமான அறிக்கையும் தயார் செய்யப்பட்டன. இந்தக் கடிதத்தையும் அறிக்கையையும் தயார் செய்தவர் தமிழறிஞரும், அன்றைய தினம் தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநராகப் பணியாற்றி வந்தவருமான சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் ஆவார். அந்த அறிக்கையிலும், கடிதத்திலும் கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த இருபது சட்டமன்ற உறுப்பினர்கள், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த அரவக்குறிச்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜாபார் செரீப் ஆகியோர் கையெழுத்திட்டனர். பாவலர் மா. முத்துசாமி, சேலம் கண்ணன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர் செ.முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கோவை செழியன், திருங்செங்கோடு செ.கந்தப்பன், திருப்பூர் எஸ்.துரைசாமி, பொங்கலூர் என். பழனிசாமி, ஆத்தூர் பழநிவேல் கவுண்டர், இராசிபுரம் ஆர். நைனாமலை,

சேந்தமங்கலம் சின்ன வெள்ளைக் கவுண்டர், கபிலர்மலை சி.வி.வேலப்பன், தொண்டாமுத்தூர் மாணிக்கவாசகம், பொள்ளாச்சி ஏ.பி. சண்முகசுந்தர கவுண்டர், வெள்ளகோவில் எம். பழனிசாமி, மொடக்குறிச்சி எம், சின்னசாமி, ஈரோடு எம்.சுப்ரமணியன், பவானி ஏ.எம் இராஜா, கோபிசெடிப்பாளையம் டாக்டர் எஸ்.எம். பழனியப்பன், பவானிசாகர் வி.கே.இராமசாமி, சத்தியமங்கலம் சுப்ரமணியன், தேவத்தூர் நா.நாச்சிமுத்து, கரூர் க.நல்லசாமி ஜாபர் செரீப் ஆகியோர் கையெழுத்திட்ட கடிதமும், அறிக்கையும் முதல்வர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

<u>அந்தக் கடிதம் பின்வருமாறு:</u>

அனுப்புநர்:

சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை

பெறுநர்:

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
முதலமைச்சர், தமிழ்நாடு அரசு.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : கொங்கு வேளாளர் சமூகம்—பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுதல்.

தமிழ்நாடு. 1. கொங்கு வேளாளக் கவுண்டர் 2. நாட்டுக் கவுண்டர், 3. நரம்புக் கவுண்டர், 4. படைத்தலை கவுண்டர் 5. செந்தலைக் கவுண்டர் 6. பவழங்கட்டி கவுண்டர் போன்ற உட்பிரிவுகளைக் கொண்ட கொங்கு வேளாளர் சமூகத்தின் சார்பாக, கீழே கையொப்பமிட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், கீழே குறித்துள்ள காரணங்களை முன்னிட்டு கொங்கு வேளாளர் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென அரசை வேண்டி இந்த விண்ணப்பத்தைக் தருகிறோம்.

1. கொங்கு வேளாளர் எண்ணிக்கை

கொங்கு வேளாளர்கள் கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்கள் முழுவதிலும், மதுரை மாவட்டத்தில் வேடச்சந்தூர், பழனி வட்டங்களிலும், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்திலும் வாழ்ந்து வருகின்றனர். இச்சமூதத்தின் மொத்த மக்கள் தொகை 45 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. இது தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 11% ஆகிறது.

இச்சமூகத்தில் மேல்நிலையிலுள்ள மிக மிகச் சிறு பகுதியினர் தவிர மிகப் பெரும் பகுதியினர் நிலத்தைத் தாமே உழவு செய்யும் உழவர்களாகவும், குத்தகைக்கு

உழுபவர்களாகவும், நிலமற்ற கூலிகளாகவும், நெசவாளிகளாகவும், இன்னும் கடின உழைப்பாளர்களாகவும் உலகத் தொடர்பற்ற கிராமப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

**2.** கொங்கு வேளாளர் சமூகத்தை மேம்படுத்தும் தன்மை

கொங்கு வேளாளர்கள் முற்பட்டோர் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளனர். பிற்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள் பெற்றுவரும் சலுகைகளையும், பாதுகாப்புகளையும் இழக்கின்றனர். இச்சமூகத்திலுள்ள மிகப் பெரும்பான்மையான ஏழை மக்கள், குறிப்பாக மாணவர்களும், வேலை கிடைக்காத இளைஞர்களும், நீதி அற்ற வேறுபாட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் தாழ்வும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

அ) கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் இச்சமூகத்தினர் கீழ்நிலையிலிருந்தும், முற்பட்டோர் என்ற முத்திரையினால் கல்விச் சலுகைகள் கிடைக்காததால் தங்கள் மக்களுக்கு உயர்கல்வி அளிக்க முடிவதில்லை. இன்னல்களை ஏற்று, கல்லூரிகளுக்கு அனுப்பினால் பொருளாதார நலிவு மாணவர்களுடைய கல்வித்தரத்தையும் பெரிதும் பாதிக்கிறது.

ஆ) நாட்டில் மக்கள் தொகையில் **11%** இருந்தும், இச்சமூக மாணவர்கள் தொழில் கல்லூரிகளிலும், உயர்கல்வி நிலையங்களிலும் இடம் பெற முடியாது தடுமாறுகின்றனர். கடந்த **25** ஆண்டுகளில் கொங்கு வேளாள மாணவர்கள் மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் மிகக் குறைந்த அளவே இடம் பெற்றுள்ளனர் என்பதை நடைமுறையில் அறியலாம்.

இ) இச்சமூகத்தில் கல்வி கற்று இருக்கும் இளைஞர்களுக்கு உத்தியோகங்களில் கிடைக்க வேண்டிய நியாயமான **11%** கிடைக்க வேண்டியிருக்க , இந்த இனத்துடைய வரலாற்றிலேயே அரசு வேலைகளில் **1%** கூடப் பெற்றிருந்ததில்லை.

**3.** கொங்கு வேளாள சமூகத்தின் பொருளாதாரப் பிற்போக்கு

இந்த இனத்தவரின் பொருளாதாரப் பிற்போக்கைக் கீழ்க்காண்பவை உணர்த்தும்.

அ) கொங்கு வேளாளர்களில் கிராமப் பகுதிகளிலேயே வாழ்கின்றவர்கள், ஆண், பெண், குழந்தைகள் உட்பட காலை முதல் இரவு வரை எல்லா வகையான உழவு வேலைகளிலும் ஈடுபட்டு உழைக்கின்றனர்.

ஆ) கோவை, சேலம், தர்மபுரி, மதுரை, திருச்சி மாவட்டங்களில் கொங்கு வேளாளர்கள் நெருக்கமாக வாழ்ந்து வருகின்ற 21 வட்டங்களில் பெரும்பான்மையான வட்டங்களில் எப்பொழுதுமே வறட்சியால் பாதிக்கப்படும் புஞ்சை நிலங்களைக் கொண்டவை. அதன் விளைவாகப் பொருளாதாரத்தில் இப்பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

பெரிதும் வறட்சியால் பாதிகப்பட்டுள்ள இந்தப் பகுதியில் உயிருடன் வாழ்வதே ஒரு பெரும் போராட்டமாக இருக்க, அவர்கள் உயர்ந்தோராயிருப்பது எங்கே ?

4. கொங்கு வேளாளச் சமூகத்தின் கல்விப் பிற்போக்கு

இந்த இனம் கல்வியில் பிற்பட்டது என்பதைக் கீழுள்ளவற்றிலிருந்து அறியலாம்.

அ) 10.08.1973 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற மூன்று நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட 99 (குரூப்–1) பதவிகளுக்கு, தமிழ்நாடு பணியாளர் தேர்வுக்குழு அரிசனங்களிலிருந்தும், பிற்படுத்தப்பட்டோரிலிருந்துமே ஆட்களைப் பொறுக்கி எடுத்திருப்பதாக அறிவித்தார். முற்பட்டோர் என்பதால் கொங்கு வேளாளர் எல்லோரும் போட்டியிடக் கூடிய 50 இடங்களில் ஓர் இடத்தைக் கூடப் பெற முடியவில்லை.

ஆ) 1971 கணக்கெடுப்பின்படி கொங்கு வேளாளர் வாழுமிடங்களில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் சதவீதத்தையும், மாநில சராசரி சதவீதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதுவே கொங்கு வேளாளர்களின் கல்விப் பிற்போக்கை நன்கு உணர்த்தும். கொங்கு வேளாளர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் தொகை 25.6% லிருந்து 31.89 வரை. மாநில சராசரி சதவிதம் 39.35% ஆகும்.

5. அரசுப் பணிகளில் கொங்கு வேளாளரின் மிகக் குறைந்த பிரதிநிதித்துவம்

கொங்கு வேளாளர் சமூகம் மிகக் குறைந்த பங்கே அரசுப் பணிகளில் பெற்றுள்ளது. நடுநிலையிலிருந்து அரசு ஆய்வு செய்தால் பன்னெடும் காலமாக அரசுப் பணிகளில் இச்சமூகம் போதிய பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பதை அறியமுடியும்.

6. முடிவுரை

மேற்கண்ட காரணங்களினால் கொங்கு வேளாளர்கள் 'முற்பட்டவர்' எனப் பிரித்துள்ளது முறையற்றது என்பதை அறியலாம். அரசின் பாதுகாப்புத் தேவையான அளவுக்கு நலிந்துள்ள சமூகம் ஒன்று இன்று உள்ளதென்றால், அது கொங்கு வேளாளர் சமூகமே!

ஆதலால் வாழும் இடத்தால், செய்யும் தொழிலால், பழக்க வழக்கங்களால் பிற்படுத்தப்பட்டுள்ள இக்கொங்கு வேளாளர் இனத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து விரைவில் ஆணையிடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள
21 சட்டமன்ற உறுப்பினர்கள்
மற்றும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(குறிப்பு : கொங்கு வேளாளர் சமூகம் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து தரப்படுகிறது என்பதை அறிந்த முன்னாள் அமைச்சர் பாவலர் முத்துசாமி இதில் விரும்பிக் கையெழுத்திட்டார். பாவலர் இந்தக் கோரிக்கைக்காக அமைச்சராக இருந்த போதிலிருந்தே குரல் கொடுத்து வந்துள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கடிதத்திலும், அறிக்கையிலும் கையெழுத்து வாங்குவதற்கு கே.எஸ். கோவிந்தசாமி, கே.எஸ்.கே வேலுமணி, எஸ்.கே. முத்துசாமி, எஸ்.குருநாதன், சி.தாமோதரன், கே.இராமசாமி, கே.நாச்சியப்பன், என்.எம் குமாரசாமி, ஜெயசுப்ரமணியம் முதலானோர் முக்கியப் பங்காற்றினர்.

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டசபையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. அன்றைய தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் செ.கந்தப்பன் கொங்கினத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து விரிவாகவும் விளக்கமாகவும், அழுத்தமாகவும் சட்டமன்றத்தில் முதல்வருக்குக் கோரிக்கை விடுத்தார். சட்டமன்றக் கூட்ட இடைவேளையில் கோவை செழியன், செ.கந்தப்பன், ஈரோடு சின்னசாமி, தேவத்தூர் நா.நாச்சிமுத்து உட்பட அனைத்துக் கட்சியைச் சார்ந்த கொங்குச் சமுதாய சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டமன்றத்திற்கு அருகிலுள்ள வசந்த மண்டபத்திற்குச் சென்று முதல்வரைச் சந்தித்துக் கோரிக்கையை வலியுறுத்தினர்.

சட்டநாதன் கமிஷன் பரிந்துரையின் பேரிலும், கோவை சேழியன், செ.கந்தப்பன், ஈரோடு சின்னசாமி, தேவத்தூர் நாச்சிமுத்து ஆகியோரின் சட்டமன்றப் பேச்சுகளைக் கருத்தில் கொண்டும், கோவை செழியன் அவர்கள் தலைமையில் பல்வேறு கொங்கு அமைப்புகள் அரசுக்கு விடுத்த வேண்டுகோளைக் கவனத்தில் கொண்டும், கோவையில் நடைபெற்ற கொங்கு வேளாளர் சமூக மாநில மாணவர் மாநாட்டுத் தீர்மானத்தைக் கவனத்தில் கொண்டும், அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையிலான சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அரசுக்கு விடுத்த வேண்டுகோளைக் கருத்தில்

கொண்டும், இருபத்து ஒன்று சட்டமன்ற உறுப்பினர்கள், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு முதல்வருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மற்றும் அறிக்கையைக் கவனத்தில் கொண்டும், தங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி கோவை செழியன், அருட்செல்வர் நா.மகாலிங்கம், முத்துக் கவுண்டர், செ.கந்தப்பன் போன்ற சமுதாயத் தலைவர்கள் கலைஞரிடம் அவ்வப்போது பரிவுடன் பரிசீலிக்க வேண்டி விடுத்த நியாயமான வேண்டுகோள்களை மனத்தில் கொண்டும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழகத்திலுள்ள மூன்று பெரிய சமுதாயங்களில் ஒன்றான கொங்கு வேளாளர் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோர் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கியுள்ளனர் என்பதை நன்கு அறிந்ததாலும் அன்றைய முதல்வர் கலைஞர் **1975** ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தில் கொங்குவேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதாக அறிவித்தார்.

# இந்திய பொருளாதாரத்தில் நவீன விவசாய யுக்திகளின் பங்கு

– திரு.ஏ.கே.ரத்தினம்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் விவசாயத்தின் பங்கு மகத்தானது. இம்மகத்துவத்தைப் பேணிக்காக்க வேண்டுமெனில், விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரித்து, அரசின் கவனத்தைச் செலுத்தி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லலாம் என்பதை உணர வேண்டும். இச்சூழல் உருவாகப் பெரும்பங்காற்றும் நீர் நிலைகளைப் பெருக்கிடவேண்டும்.



நீர் நிலைகளைப் பெருக்கிட குளம், குட்டைகளை சீரான இடைவெளியில் தூர்வாரிப் பராமரிக்கப்படவேண்டும். மேலும் மழைக் காலங்களில் நீரைச் சேமிக்க ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்து நீரைச் சேமிக்க வேண்டும். கடலில் கலக்கும் உபரி நீரைச் சேமிக்க அண்டை நாடுகளைப் போல் நிலத்தடி நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்துக் குழாய்களின் மூலம் அந்நீரை நுண்ணுயிர் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் நம் வாழ்வாதாரமாக விளங்கும் விவசாயம் வருடம் முழுவதும் செழிக்கும் என்பதில் ஐயமில்லை.

விவசாயப் புரட்சி

தரம் உயர்ந்த விதைகளைத் தேர்வு செய்து கிரீன் ஹவுஸ் டெக்னாலஜி மூலம் மண்ணிற்குப் பதிலாகத் தென்னை நார்கழிவு கட்டிகளில் ஊன்றி, வளர்ந்த நாடுகளில் உள்ள விவசாய நிபுணர் குழுவின் பரிந்துரைபடி பல புதிய யுக்திகளைக் கையாள்வதின் மூலம் படித்தும் வேலையில்லாமல் தவிக்கும் 60 விழுக்காடு மாணவர்களின் அவலநிலை மாறுவதோடு விவசாயத்தின் ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

இந்நவீன முறை விவசாயத்தைத் திறம்பட நடைமுறைப்படுத்த நீரை சேமித்தால் மட்டும் போதாது. அதைச் சிக்கனமாகப் பயன்படுத்திப் பாதுகாக்கவும் வேண்டும்.

இஸ்ரேல், சீனா போன்ற நாடுகளில் நவீன விவசாய யுக்திகளைப் பயன்படுத்திக் குறைந்த பரப்பளவில் பசுமை குடில் அதிக மகசூல் ஈட்டுகின்றனர். இதைப்போன்று நம் நாட்டிலும் பயிரிடும் காலத்தில் குழாய்களின் மூலம் நீரை அரசே வழங்கினால் நாமும் குறைந்த பரப்பளவில் அதிக மகசூல் ஈட்டி விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றி விவசாயத்தை இந்தியாவின் முதன்மைத் தொழிலாக மாற்ற முடியும்.

மேலும் குறைந்து வரும் மண்ணின் தன்மையை சீரமைத்து மகசூலைப் பெருக்கிட மேலை நாடுகளைப் போல் கருப்புத் தங்கம் என்று அழைக்கப்படும் காயர் பித்தை பயன்படுத்தி மண்ணில் ஊட்டச்சத்தை அதிகப்படுத்தி மகசூலினைப் பெருக்கலாம்.

உற்பத்தியை அதிகப்படுத்தும் தன்மையுள்ள காயர் பித்தானது நமது நாட்டில் தான் அதிகமாக உற்படுத்தி செய்யப்படுகிறது. 1 கிலோ காயர் கட்டியில் நீரை ஊற்றினால் அது 20 லிட்டர் தண்ணீரைத் தன்னுள் பெற்றுக்கொண்டு ஈரப்பதமுள்ள ஒரு கலவையாக மாறிவிடுகிறது. இதில் நாம் பயிரிடும் பொழுது தண்ணீரானது எவ்விதச் சேதாரமும் இல்லாமல் செடிகளுக்கு கிடைக்கிறது. இத்தகு மகத்துவம் வாய்ந்த காயர் பித்தில் செடிகளை வளர்த்தால், முழு ஊட்டச்சத்து கிடைப்பதோடு நஞ்சில்லா விவசாயமும் செய்ய முடியும். மேலும் இதில் உள்ள பல நுண்சத்துக்கள் ரசாயனமில்லா உரக்கலவையாகவும் பயன்படுகிறது.

இந்நுணுக்கங்களை அறிந்த மேலை நாட்டினர், நம்மிடம் மிகக் குறைவான விலைக்குக் காயர் பித்தை வாங்கி அதில் மீண்டும் சில ஊட்டச்சத்துக்களைப் புகுத்தி ஊட்டமேற்றிய தொழுவுரமாக மாற்றி ரசாயனம் கலக்காத உரம் என்று கூறி உயர்ந்த விலைக்கு விற்கின்றனர். அதன் மூலம் அந்நாட்டில் மண்ணின் தன்மையும் காப்பாற்றப்பட்டு மனிதனும் ரசாயனக் கலவையிலிருந்து விடுவிக்கப்படுகின்றான். இதன் மூலமே விவசாயத்தில் புரட்சியும் செய்கிறான்.

ஆகவே காயர் பித்து உற்பத்தியில் முதன்மை நாடாக விளங்கும் நம் நாட்டில் நாமும் மேலை நாடுகளைப் பரேல் கிரீன் ஹவுஸ் டெக்னாலஜியின் துணைகொண்டு தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி உரத்தின் அளவைக் குறைத்துச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் விவசாயத்தில் ஓர் இமாலய மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதில் ஐயமில்லை.